# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2206 - 2020 දෙසැම්බර් මස 11 වැනි සිකුරාදා - 2020.12.11

*2206 ஆந் இலக்கம் - 2020 ஆந் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1844 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1860 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, சனவரி மாதம் 1 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆந் ஆண்டின் 19 ஆந் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆந் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2020 ஆந் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1841-B 82087-5,403 (2020/12)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆந் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆந் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆந் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆந் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆந் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆந் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆந் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆந் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆந் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/ 90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/ 90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆந் ஆண்டின் 19 ஆந் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆந் ஆண்டின் 25 ஆந் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆந் ஆண்டின் 19 ஆந் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆந் ஆண்டின் 25 ஆந் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆந் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

*அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.*

I. *விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;*

II. *விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;*

III. *இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;*

IV. *குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;*

V. *இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;*

VI. *குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;*

VII. *பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;*

VIII. *பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.*

*பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.*

1. *சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.*
2. *பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.*
3. *பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.*
4. *சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.*
5. *பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.*
6. *பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;*
7. *உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.*
8. *பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.*
9. *பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.*
10. *பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/ கருவிகள்* (Electronic Communication Instruments/ Devices) *தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/ கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.*
11. *இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/ கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/ கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*
12. *பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.*
13. *எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.*
14. *பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.*
15. *பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.*
16. *பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.*
17. *பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும் :*

    (i) *சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;*

    (ii) *பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/ 2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;*

    (III) *பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.*

    (a) *ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.*

    (b) *சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.*

    (iv) *பரீட்சார்த்தி புளூடூத்* (Bluetooth) *போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/ கருவிகளை* (Electronic Communication Devices) *உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;*

    (v) *பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;*

    (vi) *பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;*

    (vii) *நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;*

    (vIII) *விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;*

    (ix) *கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;*

    (x) *கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;*

    (xi) *ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/ இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;*

    (xii) *உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;*

    (xIII) *ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.*

*பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.*

*இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## *சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு*

*சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் வெளிக்கள/ அலுவலக உத்தியோகத்தர் - 2 (நிலை)*
*சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் (திறந்த) - 2020*

*சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் தரம்* II *பதவிக்காக வட மத்திய, வட மேல், வட மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள 09 வெற்றிடங்களுக்காக தகுதியானவர்களை தெரிவு செய்வதற்காக இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*எனவே இவ் அறிவித்தலில் உள்ள விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து குறிப்பிட்ட திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ ஆணையாளர், சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம் இல 35ஏ, என். எம். பெரேரா மாவத்தை பொரளை, கொழும்பு 08 என்ற முகவரிக்கு பதவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அல்லது* dcbcorrecion@gmail.com *மின்னஞ்சல் ஊடாக அனுப்பலாம். அல்லது சமுதாயஞ்சார் சீர்திருத்த பிரதான காரியாலயத்திற்கு நேரடியாக வந்து ஒப்படைக்கலாம். கடித உறையின் இடதுபக்க மூலையில்* ***"சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் (2020)"*** *என்று தெளிவாக எழுதப்பட வேண்டும். மின்னஞ்சல் ஊடாக அனுப்பும் போது விடயத்தில்* (subject) "CCO Recruitment - 2020 (open) *என்று தெளிவாக எழுதப்பட வேண்டும்.*

***விண்ணப்பம் கோருகின்ற இறுதி திகதி*** *: 2021 சனவரி 15 ஆந் திகதி ஆகும்.*

***குறிப்பு.***- *விண்ணப்பப் படிவம் அல்லது அது சம்பந்தமான கடிதங்கள் தபாலில் தவறிப் போகும் பட்சம் அல்லது தாமதமாகி கிடைக்கும் பட்சம் அவை தொடர்பான முறைப் பாடுகளுக்கு நாம் பொறுப்பாக மாட்டோம். இறுதி நாள் வரை தாமதமாக்குவதால் ஏற்படும் பாதிப்புகளுக்கு நீங்களே பொறுப்பாளிகள்*

*1.* ***பதவிக்கு நியமனம் செய்யும் விதம்*** :

*சமுதாயஞ்சார் சீர்திருத்த ஆணையாளர் மூலம் நியமிக்கப்படுகின்ற குழுவினால் நேர்முக பரீட்சை நடாத்தி அவர்கள் இடும் புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். நியமனம் வழங்கும் திகதி சமுதாயஞ்சார் சீர்திருத்த ஆணையாளரால் தீர்மானிக்கப்படும்.*

*2.* ***சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்*** :

(i) *இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தால் தொடர்ந்தேர்ச்சையா எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும் தாங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்கு காலம் விதிக்கப்படும் வகையில் தாங்கள் அது தொடர்பாகப் பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.*

(ii) *இந்தப் பதவிக்கு நியமனம் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் மூன்று வருட (03) நன்னடத்தைக் காலத்துக்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன் அந்த மூன்று வருட (03) காலத்தினுள் முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.*

(iii) *அரச நிர்வாக சுற்றறிக்கை 1/ 2014 அமைவாக (5) வருடங்கள் கடந்து செல்லமுன் அரச கொள்கைகளுக்கு அமைவாக இரண்டாம் அரச கரும மொழித்தேர்ச்சியை அடைந்துள்ளதாக நீங்கள் நிருபிக்க வேண்டும். நீங்கள் இந்நியமனத்திற்காக தகைமைகளை சிங்கள மொழியில் பூர்த்தி செய்திருப்பின் உங்களது இரண்டாம் அரச கரும மொழியாவது தமிழ் மொழியாகும். அதே போன்று நீங்கள் இந் நியமனத்திற்காக தகைமைகளை தமிழ் மொழியில் பூர்த்தி செய்திருப்பின் உங்களது இரண்டாம் அரச கரும மொழி சிங்கள மொழியாகும். மேலும் நீங்கள் இந் நியமனத்திற்கான தகைமைகளை ஆங்கில மொழியில் பூர்த்தி செய்திருப்பின் தங்களின் தற்றுணிபின்படி அரச கரும மொழியாக சிங்களம் அல்லது தமிழ் ஆகிய இரு மொழிகளில் ஒரு மொழியில் (3) வருடங்களுக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.*

(iv) *அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்க நிதிப் பிரமாணங்கள், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள் என்பவற்றுக்கு இந்த நியமனம் உட்பட்டதாக இருக்கும்.*

3. **சம்பள அளவுத்திட்டம்** :

பொது நிர்வாக சுற்றறிக்கை 3/ 2016 ஏற்ப MN 05 - 2016 ஆரம்ப சம்பளம்
(ரூபா. 34,605 - 10 x 660 - 11 x 755 - 15 x 930 - ரூபா 63,460/ -)

4. **கல்வி, தொழில் தகைமைகள்** :

I. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பெறப்பட்ட குற்றவியல் தொடர்பான விசேட பட்டம்/ சமூகவியல் தொடர்பான விசேட பட்டம்/ சட்டம் தொடர்பான விசேட பட்டத்தை பெற்றிருத்தல்

அல்லது

உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக

அல்லது

அரச சேவையில் உள்ளவராக இருத்தல்.

5. **அனுபவம்**.- சம்பந்தப்பட்ட துறையில் பெற்றுள்ள முன் அனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும்.

6. **வயதெல்லை**.- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 21-35 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

7. **தகைமைகள்**.- அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் கடமை புரிவதற்கும் பதவியின் கடமையினை நிறைவேற்றுவதற்கான சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

8. **மேலதிக தகைமைகள்** :

1. விண்ணப்பதாரர்கள் இலங்கை பிரசைகளாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரர் சிறந்த நடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்ப படிவம் ஏற்றுக்கொளளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் சகல விதங்களிலும் தகைமைகளை பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

9. **தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை** :

சமுதாயஞ்சார் சீர்திருத்த ஆணையாளர் மூலம் நியமிக்கப்படுகின்ற நேர்முக பரீட்சைக் குழுவினால் இந்நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும்.

10. **நேர்முக பரீட்சையில் புள்ளிகள் இடும் விதம்** :

| | **விடயம்** | **புள்ளி** | **அதிகூடிய புள்ளி** |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வி தகைமைகள் :** | 25 | 25 |
| | I. குற்றவியல் தொடர்பான விசேட பட்டம்/ சமூகவியல் தொடர்பான விசேட பட்டம்/ சட்டம் தொடர்பான விசேட பட்டம் | 20 | |
| | II. வேறு பட்டங்கள் | 15 | |
| | III. உயர் டிப்ளோமா கற்கைநெறி | 10 | |
| | IV. டிப்ளோமா கற்கைநெறி (1 வருடத்திற்கு மேல்) | 05 | |
| | V. டிப்ளோமா கற்கைநெறி (9 மாதம்) | | |
| 02 | **மேலதிக தொழில் திறமைகள் :** | | 10 |
| | I. அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் போதை ஒழிப்பு/ சமூக வேலை/ உளவள ஆலோசனை அல்லது சமூகவியல் தொடர்பாக பெற்றுள்ள டிப்ளோமா (ஒன்றுக்கு 3 புள்ளிகள் வீதம்) | 10 | |
| | II. சமூக வேலை/ போதை ஒழிப்பு மற்றும் உளவள ஆலோசனை தொடர்பான சான்றிதழ் கற்கைநெறிகளுக்கு (ஒன்றுக்கு 3 புள்ளிகள் வீதம்) | | |

| | விடயம் | புள்ளி | அதிகூடிய புள்ளி |
|---|---|---|---|
| 03 | **மொழி தேர்ச்சி** | | |
| | I. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தினால், அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைகுழுவினால், ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் தாய் மொழியில்லாமல் வேறு மொழியினால் பட்டம் பெற்றிருத்தல். | 15 | 15 |
| | II. ஆங்கிலம்/ தமிழ்/ சிங்களம் டிப்ளோமா கற்கைநெறிகளுக்காக (தாய் மொழி தவிர்ந்த ஏனையவைகளுக்கு ஒரு மொழிக்கு 10 புள்ளிகள் மற்றும் இரண்டு மொழிக்கு 15 புள்ளிகள் வழங்கப்படும். | 15 | |
| | III. ஆங்கிலம்/ தமிழ்/ சிங்களம் சான்றிதழ் கற்கைநெறிக்கு (தாய் மொழி தவிர்ந்த ஏனையவைகளுக்கு ஒரு மொழிக்கு 05 புள்ளிகள் மற்றும் இரண்டு மொழிக்கு 10 புள்ளிகள் வழங்கப்படும். | 10 | |
| 04 | சம்பந்தப்பட்ட துறையில் பெற்றுள்ள முன் அனுபவம் (புனர்வாழ்வு/ நன்னடத்தை/ சமூக நலன்புரி/ சட்டம்/ சமுதாயஞ்சார் சீர்திருத்தம் தொடர்பான முன் அனுபவம் (ஏற்றுக்கொள்ளப்பட்ட அத்தாட்சி மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.) | | 30 |
| | I. 5 வருடம் அல்லது அதற்கு மேலதிகமாக | 30 | |
| | II. 4 வருடம் அல்லது அதற்கு மேலதிகமாக | 25 | |
| | III. 3 வருடம் அல்லது அதற்கு மேலதிகமாக | 20 | |
| | IV. 2 வருடம் அல்லது அதற்கு மேலதிகமாக | 15 | |
| | V. 1 வருடம் அல்லது அதற்கு மேலதிகமாக | 10 | |
| | VI. 6 மாதம் அல்லது அதற்குமேலதிகமாக | 05 | |
| 05 | கணனி உபயோகம் | | |
| | I. அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் 12 மாதத்திற்கு குறையாமல் டிப்ளோமா கற்கைநெறியை பூர்த்தி செய்து இருத்தல். | 15 | 15 |
| | II. 9 மாதத்திற்கு கூடாமல் அல்லது 6 மாதத்திற்கு குறையாமல் சான்றிதழ் கற்கைநெறியை கற்றிருத்தல். | 10 | |
| | III. 3 மாதத்திற்கு கூடுதலான காலத்தில் கணணி தொடர்பான சான்றிதழ் கற்கைநெறி பூர்த்தி செய்திருத்தல். | 05 | |
| | IV. வேறு கணனி சான்றிதழ்களுக்காக | 03 | |
| | நேர்முக பரீட்சையில் காட்டும் திறமை | 05 | 05 |

**11.** மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்படிவம் அமைய வேண்டும். அத்தோடு செ.மீ 22-29 அளவில் A4 கடதாசியில் தயாரிக்கப்பட வேண்டும். தகவல்களை தமது கையெழுத்தினாலேயே தெளிவாக பூரணப்படுத்தப்படுத்தல் வேண்டும். சகல விதங்களிலும் ஆரம்ப தகைமைகள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு மாற்றமான விண்ணப்ப படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்மிடம் வைத்துக் கொள்வது பயனளிக்கும். விண்ணப்படிவம் கிடைத்தது என்று அறியதரப்பட மாட்டாது.

**குறிப்பு** :

(i) சான்றிதழ்களின் முதற் பிரதியை பரிசோதிப்பதற்காக காண்பிக்க தவறியவர்களின் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(ii) அரசாங்க சேவையில் / மாகாண சேவையில் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் தங்களது திணைக்கள தலைவரினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

(iii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், இது வரை வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் காலத்துக்கு காலம் வழங்கப்படும் நிபந்தனைகளுக்கும் இச் சேவை உரித்தாகும்.

(சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படுகின்ற இவ்வறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதாவது இணக்கப்பாடின்மை காணப்படின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலே சரியானதாகக் கருதப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.)

ஆர். பீ. எஸ். சமன்குமாரி,
ஆணையாளர்,
சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம்.

அலுவலக உபயோகத்திற்காக | |

மாதிரி விண்ணப்பப்படிவம்

சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின்சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் II தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல் (திறந்த) - 2020

*1.* **சுய விபரம் :**

*1. 1.1* முழுப் பெயர் (சிங்களம்/ தமிழ்) :..................................................
*1.2* முழுப் பெயர் (ஆங்கிலம்) :..................................................

*2. 2.1* பெயர் முதல் எழுத்துக்களுடன் (சிங்களம் / தமிழ்) :..................................................
*2.2* பெயர் முதல் எழுத்துக்களுடன் (ஆங்கிலம்) :..................................................

*3. 3.1* நிரந்தர முகவரி (சிங்களம்/ தமிழ்) :..................................................
*3.2* நிரந்தர முகவரி (ஆங்கிலம்) :..................................................

4. ஆண்/பெண் :..................................................

5. திருமணம் முடித்தவரா ? :..................................................

6. தேசிய அடையாள அட்டை இலக்கம்

7. பிறந்த திகதி : வருடம் :.................. மாதம் :..................... திகதி :........................

8. விண்ணப்பம் கோருகின்ற இறுதித் திகதிக்கு வயது : வருடங்கள் ............... மாதங்கள் ............ நாட்கள் .............

9. தொலைபேசி இலக்கம் :............

*2.* **தற்போது நீங்கள் வகிக்கும் பதவி சம்பந்தமான தகவல்கள்**

*2.1* தற்போது வகிக்கும் பதவி :.................................................................
*2.2* நியமனம் பெற்ற திகதி :.................................................................
*3.3* நியமனத்தின் வகை (நிரந்தரம், தகுதிகாண் நிலை) :..................................................

*3.* **கல்வித் தகைமைகள்**

*3.1* பட்டம் :........................................................................................
*3.2* பல்கலைக்கழகம் :........................................................................................
*3.3* பட்டச்சான்றிதழ் வெளியிட்ட திகதி :........................................................................

| தொடர் இல. | தகைமை | நிறுவனம் | தகுதி பெற்ற திகதி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

*4.* **மேலதிக கல்வித் தகைமைகள்**

| தொடர் இல. | தகைமை | நிறுவனம் | தகுதி பெற்ற திகதி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

5. **தொழில் தகைமைகள்**

| தொடர் இல. | தகைமை | நிறுவனம் | தகுதி பெற்ற திகதி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

6. **வேறு தகைமைகள் :**..........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................

7. **அனுபவம் :**..........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................

8. **விண்ணப்பதாரியின் உடன்படிக்கை :**
மேலும் மேற்படி விபரங்கள் உண்மையானவை என்பதையும், இங்கு குறிப்பிடப்பட்ட விபரங்கள் பொய்யானவை எனின் நேர்முகப் பரீட்சையிலோ அல்லது அதன் பின்னரோ இந்தப் பதவி இழக்கப்படும் என்பதை நான் நன்கு அறிவேன் என்பதையும் குறிப்பிடுகிறேன்.

..............................................,
விண்ணப்பதாரியின்கையொப்பம்.

திகதி :.....................................

9. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதி செய்தல்**

இந்த விண்ணப்பபடிவத்தை முன்வைக்கும் திரு./ திருமதி/ செல்வியை ............................................ நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் ...................... திகதி அவர் கையொப்பம் இட்டார் என்பதை உறுதி செய்கின்றேன்.

.....................................................................,
கையொப்பத்தை உறுதி செய்யும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழு பெயர் :.......................................................
பதவி :..........................................................................
முகவரி :........................................................................
திகதி :..........................................................................
(பதவி முத்திரையை இடவும்)

10. திணைக்கள தலைவரின் சிபாரிசு :
இந்த விண்ணப்பதாரி திரு./ திருமதி/ செல்வி ................................................ அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ அமைச்சில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் தெரிவிக்கின்றேன்.

..........................................................
திணைக்கள தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :.................................
பதவி :.................................
அமைச்சு / திணைக்களம் :.................................
பதவி முத்திரையை இடவும்.

12-201/ 1

## சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

*சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் முகாமைத்துவ உத்தியோகத்தர் 2 ஆந் நிலை வேலை பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2019 (2020 (திறந்த) - 2019 (2020)*

*சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் வேலை பரிசோதகர்* iii *தரத்தின் பதவிக்காக ஊவா, வடமத்திய, வடமேல் மற்றும் வட மாகாணங்களில் உள்ள 16 வெற்றிடங்களுக்காக தகுதியானவர்களை தெரிவு செய்வதற்காக இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*எனவே இவ் அறிவித்தலில் உள்ள விண்ணப்பபடிவத்தை பூர்த்தி செய்து குறிப்பிட்ட திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ ஆணையாளர், சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம் இல. 35ஏ, என். எம். பெரேரா மாவத்தை பொரளை, கொழும்பு 08 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது* dcbcorrecion@gmail.com *மின்னஞ்சல் ஊடாக அனுப்பலாம். அல்லது சமுதாயஞ்சார் சீர்திருத்த பிரதான காரியாலயத்திற்கு நேரடியாக வந்து ஒப்படைக்கலாம். கடிதஉறையின் இடதுபக்க மூலையில்* **"வேலைபரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2019 (2020)** *என்று தெளிவாக எழுதப்பட வேண்டும். மின்னஞ்சல் ஊடகாக அனுப்பும் போது விடயத்தில்* (subject) " WS Recruitment 2019 (2020) " *என்று தெளிவாக எழுதப்படவேண்டும்.*

*(ஆ) விண்ணப்பம் கோறுகின்ற இறுதி திகதி* : ***2021 சனவரி 15 ஆந் திகதி ஆகும்.***

***குறிப்பு***.- *விண்ணப்பபடிவம் அல்லது அது சம்பந்தமான கடிதங்கள் தபாலில் தவறிப் போனாலோ அல்லது தாமதமாகி கிடைக்கும் முறைப் பாடுகளுக்கு நாம் பொருப்பாகமாட்டோம். இறுதி நாள் வரை தாமதமாக்குவதால் ஏற்படும் பாதிப்புகளுக்கு நீங்களே பொறுப்பாளிகள்.*

*1.* **பதவிக்கான வேலைகளை நோக்குவோம்.**- *1999 இல. 46 ஆம் இலக்க சமுதாயஞ்சார் சீர்திருத்த சட்டத்தின் 11 ஆம் சரத்தின் படி குற்றம் ஒன்றிற்காக தவராளராக கருதப்பட்டு நீதிமன்றத்தினால் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளை ஒன்றை பெற்ற ஒருவரை சீர்திருத்தம் செய்வது தொடர்பானதாகும்.*

- *சமுதாயஞ்சார் சீர்திருத்த வேலைகளுக்காக சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தருக்கு உதவுதல்*
- *சீர்திருத்த நிகழ்ச்சிகளை திட்டமிடுவதும் மற்றும் திட்டமிட்டு தயாரித்த சீர்திருத்த நிகழ்ச்சியை நடாத்துவதற்கு உதவுதல்.*
- *கட்டளையாளர்களை கொண்டு செயற்படுத்தப்படும் செயற்திட்ட இடங்களுக்கு சென்று சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு ஏற்ப நடக்கின்றார்களா என்று தேடிப்பார்த்தல்.*
- *சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையை பெற்றவர்களின் வீட்டு பரீசோதனைக்கு சென்று பரீசோதித்து அவர்களை மருத்துவ சிகிச்சைகளுக்கு உட்படுத்துதல் மற்றும் தேவைக்கேற்ப பின்னூற்றல் செயற்பாட்டை செய்தல்.*
- *உரிய நேரத்தில் சமுதாயஞ்சார் சீர்திருத்த நிகழ்சிகளில் பங்கேற்காத கட்டளையாளர்களின் வீட்டு பரிசோதனை செய்து அவர்களின் நிலைமைகளை ஆராய்ந்து திரும்பவும் சமுதாயஞ்சார் சீர்திருத்த செயற்பாடுகளுடன் ஒன்றுசேர்த்தல்.*

*2.* **பதவிக்கு நியமனம் செய்யும் விதம்.**- *சமுதாயஞ்சார் சீர்திருத்த ஆணையாளர் மூலம் நியமிக்கப்படுகின்ற குழுவினால் நேர்முக பரீட்சை நடாத்தி அவர்கள் இடும் புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்படும். நியமனம் வழங்கும் திகதி சமுதாயஞ்சார் சீர்திருத்த ஆணையாளரால் தீர்மானிக்கப்படும்.*

*3.* **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்** :

*(1) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தால் தொடர்ந்தேர்ச்சையா எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும் தாங்கள் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வகையில் தாங்கள் அது தொடர்பாகப் பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.*

*(2) இந்தப் பதவிக்கு நியமனம் பெறகின்ற உத்தியோகத்தர்கள் மூன்று வருட (03) நன்னடத்தைக் காலத்துக்கு உட்படுதல் வேண்டும். என்பதுடன் அந்த மூன்று வருட (03) காலத்தினுள் முதலாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.*

(3) அரச நிர்வாக சுற்றறிக்கை 1/ 2014 அமைவாக (5) வருடங்கள் கடந்து செல்ல முன் அரச கொள்கைகளுக்கு அமைவாக இரண்டாம் அரசகரும மொழித்தேர்ச்சியை அடைந்துள்ளதாக நீங்கள் நிரூபிக்க வேண்டும். நீங்கள் இந் நியமனத்திற்காக தகைமைகளை சிங்கள மொழியில் பூர்த்தி செய்திருப்பின் உங்களது இரண்டாம் அரசகருமமொழியாவது தமிழ் மொழியாகும். அதே போன்று நீங்கள் இந் நியமனத்திற்காக தகைமைகளை தமிழ் மொழியில் பூர்த்தி செய்திருப்பின் உங்களது இரண்டாம் அரசகரும மொழி சிங்கள மொழியாகும். மேலும் நீங்கள் இந் நியமனத்திற்கான தகைமைகளை ஆங்கில மொழியில் பூர்த்திசெய்திருப்பின் தங்களின் தற்றுணி பின்படி அரசகரும மொழியாக சிங்களம் அல்லது தமிழ் ஆகிய இரு மொழிகளில் ஒரு மொழியில் (5) வருடங்களுக்குள் தேர்ச்சி பெறவேண்டும் III தரத்தில் இருக்கும் குழுவினர் இரண்டாம் மொழித்தேர்ச்சியை சம்பந்தப்பட்ட மொழி அறிவுக்காக 150 மணித்தியால பயற்சியாவது பெற்றுக்கொள்ள வேண்டும்.

(4) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக்கோவை அரசாங்க நிதிப் பிரமாணங்கள் திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள் என்பவற்றுக்கு இந்த நியமனம் உட்பட்டதாக இருக்கும்.

**4. சம்பள அளவுத்திட்டம் :**

3/ 2016 ஆம் இலக்க கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு ஏற்ப MN 1 - 2016 - 27140 - 10 X 300 - 11 x 350 - 10 x 495 - 10 x 660 - 45540/ -

**5. கல்வித் தகைமைகள் :**

(அ) 1. சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலமொழி
2. கணிதம் மற்றும்
3. மேலும் க.பொ.த (சா.தர) பரீட்சையில் இரண்டு பாடங்களில் திறமை சித்தியுடன் ஓரே அமர்வில் (6) பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

(ஆ) 1. க.பொ.த (உயர்தர) பரீட்சையில் குறைந்த பட்சம் (1) பாடத்திலாவது (பொது அறிவு பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

6. **அனுபவம்.**- அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நிறுவனத்தின் மூலம் சமூகசேவை அல்லது சமூக வேலை பற்றி ஒருவருடமுன் அனுபவம்.

7. **வயதெல்லை.**- வர்த்தமானி அறிவித்தலின் படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

8. **தகைமைகள்.**- அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் கடமை புரிவதற்கும் பதவியின் கடமையினை நிறைவேற்றுவதற்கான சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**மேலதிக தகைமைகள் :**

1. விண்ணப்பதாரி இலங்கை பிரசைகளாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரி சிறந்த நடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பபடிவம் ஏற்றுக்கொளளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் சகல விதங்களிலும் தகைமைகளை பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

**9. தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை :**

சமுதாயஞ்சார் சீர்திருத்த ஆணையாளர் மூலம் நியமிக்கப்படுகின்ற நேர்முக பரீட்சைக் குழுவினால் இந்நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும்.

**நேர்முக பரீட்சையில் புள்ளிகள் இடும் விதம்.**- 100 புள்ளிகள்

| | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| 01 | மேலதிக கல்வி தகைமைகள் | 20 |
| 02 | ஆங்கில மொழி அறிவு | 20 |
| 03 | கணனி பற்றிய அறிவு | 25 |
| 04 | மேலதிக முன் அனுபவங்கள் (1 வருட அனுபவத்திற்கு மேலதிகமாக) | 30 |
| 05 | நேர்முக பரீட்சை குழுவினரால் பரிசோதிக்கப்படும் பொழுது நீங்கள் காட்டும் திறமை மற்றும் பிறமொழி அறிவு மற்றும் தலைமைத்துவ பண்புகளுக்காக | 05 |
| 06 | **மொத்தம்** | **100** |

மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்படிவம் அமையவேண்டும். அத்தோடு செ.மி 22-29 அளவில் A4 கடதாசியில் தயாரிக்கப்பட வேண்டும். தகவல்களை தமது கையெழுத்தினாலேயே தெளிவாக பூரணப்படுத்தப்படுத்தல் வேண்டும். சகல விதங்களிலும் ஆரம்ப தகைமைகள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் காலம் தாழ்த்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு மாற்றமான விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்மிடம் வைத்துக் கொள்வது பயனளிக்கும். விண்ணப்படிவம் கிடைத்தது என்று அறியதரப்படமாட்டாது.

**குறிப்பு :**

1. சான்றிதழ்களின் முதற் பிரதியை பரிசோதிப்பதற்காக காண்பிக்க தவரியவர்களின் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
2. அரசாங்க சேவையில்/ மாகாண சேவையில் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் தங்களது திணைக்கள தலைவரனூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
3. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இது வரை வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் நிபந்தனைகளுக்கும் இச்சேவை உரித்தாகும்.

(சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கல மொழிகளில் வெளியிடப்படுகின்ற இவ்வறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதாவது இணக்கப்பாடின்மை காணப்படின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலே சரியானதாகக் கருதப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.)

ஆர். பீ. எஸ். சமன்குமாரி,
ஆணையாளர்,
சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம்.

அலுவலக உபயோகத்திற்காக [ ]

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் வேலை பரிசோதகர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல் (உள்வாரி) - 2019 (2020)**

**1. விண்ணப்பதாரியின் பெயர் :**

1. முழுப் பெயர் (சிங்களம்/ தமிழ்) :..................................................
   முழுப் பெயர் (ஆங்கிலத்தில்) :..................................................

2. முதல் எழுத்துக்களுடன் பெயர் (சிங்களம் / தமிழ்) :..................................................
   முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :..................................................

3. நிரந்தர முகவரி (சிங்களம்/ தமிழ்) :..................................................
   நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்) :..................................................

4. பால் (ஆண்/பெண்) :..................................................

5. குடியியல் நிலை (விவாகமானவர்/ விவாகமாகாதவர்/ விதவை :..................................................

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :..................................................

7. வயது : வருடம் :.................. மாதம் :..................... திகதி :........................

8. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது : வருடங்கள் ............... மாதங்கள் ............ நாட்கள் .............

9. தொலைபேசி இலக்கம் :............

2. **கல்வித் தகைமைகள்**

1. பரீட்சை வருடம் :..........................................................................................
2. பரீட்சை இலக்கம் :.......................................................................................
3. பரீட்சை பெறுபேறு :...................................................................................

| விடயம் | தரம் | விடயம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

3. **க. பொ. த. (உயர் தரம்) பெறுபேறு :**

1. பரீட்சை வருடம் :..........................................................................................
2. பரீட்சை இலக்கம் :.......................................................................................
3. பரீட்சை பெறுபேறு :...................................................................................

| விடயம் | தரம் | விடயம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

4. **சமூக வேலை/ சமூக சேவை சம்பந்தமான முன் அனுபவம் :**..........................................................................
..............................................................................................................
..............................................................................................................

5. **வேறு தகைமைகள் :**..........................................................................................
..............................................................................................................
..............................................................................................................

**விண்ணப்பதாரியின் உடன்படிக்கை :**

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களில் எவையேனும் போலியானவை அல்லது பிழையானவை என நான் தெரிவுச் செய்யப்படுவதற்கு முன் தெரியவருமிடத்து எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதனையும் தெரிவுச் செய்யப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக தெரியவருமிடத்து எவ்வித நஷ்டயீடும் வழங்கப்படாது பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனை நான் நன்கு அறிவேன். மேலும் நான் இப்பதவிக்கு தெரிவுச் செய்யப்பட்டால் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிய உடன்படுவேன் என்பதையும் குறிப்பிடுகிறேன்.

..............................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :................................

6. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் திரு./ திருமதி/ செல்வி ........................................................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் அவர்/ அவள் எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் என்பதை உறுதி செய்கின்றேன்.

.............................................,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :...............................

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :............................................
பதவி :..............................................
முகவரி :........................................
பதவி முத்திரை :........................................

*திணைக்கள நிறுவனத் தலைவரின் சிபாரிசு :*

இவ் அமைச்சில்/ திணைக்களத்தில் சேவையாற்றும் திரு./ திருமதி/ செல்வி .................................................. .......................................... அவர்கள் தற்போது .................................................................. பதவியில் சேவையாற்றுகின்றார் எனவும் அவரது வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானது என்றும் அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் இல்லை எனவும் அவர் இந்த பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அவரை தற்போதையச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது.

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :............................................
பதவி :..............................................
முகவரி :........................................
பதவி முத்திரை :........................................

12-201/ 2

---

## நீர்ப்பாசன அமைச்சு

நீர்ப்பாசனத் திணைக்களம்

**நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பொறியியல் உதவியாளர் சேவையின் தரம் III இற்கான பொறியியல் உதவியாளர் பதவி, நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பொறியியல் உதவியாளர் சேவையின் தரம் III இற்கான பொறியியல் உதவியாளர் பதவிகளுக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கிணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2021.01.11 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் கொழும்பு 07, இலக்கம் 230, பௌத்தாலோக்க மாவத்தை, நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அனுப்புதல் வேண்டும்.

இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

1. விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் தரம் III இற்கான பொறியியல் உதவியாளர் பதவி" என தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம் :**

பயிற்சிக் காலத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின்னர் இப்பதவிக்காக மாதாந்த சம்பளமாக MN 3 - 2016 மற்றும் சம்பள அளவுத் திட்டம் (அ.நி.சு. அறிக்கை இலக்கம் 06/ 2016 இணங்க) ரூபா 31,040 - 10 x 445- 11 x 660- 10 x 730 - 10 x 750 - 57550/-ஆகும்.

(31,930/- வருடாந்த சம்பள நிலைக்கு முன்னர் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையொன்று உள்ளது.)

*3.* **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) 2021.01.11 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதை விட அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும். (மாகாண மற்றும் அரச சேவையிலுள்ளவர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லை ஏற்புடையதல்ல.)

(இ) சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) சிறந்த உடல் தேகாரோக்கிமுடையவராக இருத்தல் வேண்டும். இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவைப்புரிவதற்குப் பொருத்தமுடையவர் என அரச வைத்தியர் ஒருவரினால் உறுதிப்படுத்தக்கூடியவாறு வைத்திய பரிசோதனை ஒன்றிற்கு சமுகமளித்தல் வேண்டும்.

(உ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள I,II,III,IV,V,VI,VII,VIII இன் கீழ் குறிப்பிடப்படும் கல்வித் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(I) கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையில் சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் அத்தோடு வேறு ஏதாவது ஒரு பாடத்திலும் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு **(06)** பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

பழைய பாடத்திட்டத்திற்கமைய கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சையில் பௌதீகவியல், தூய கணிதம், பிரயோக கணிதம் மற்றும் இரசாயனவியல் ஆகிய துறையில் உரிய பாடத்தில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

புதிய பாடத்திட்டத்திற்கமைய கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சையில் உயர் கணிதம் அல்லது இணைந்த கணிதம் பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

(II) கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் அத்தோடு வேறு ஏதாவது ஒரு பாடத்திலும் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு **(06)** பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

பழைய பாடத்திட்டத்திற்கமைய கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சையில் பௌதீகவியல், தூய கணிதம், பிரயோக கணிதம் மற்றும் இரசாயனவியல் ஆகிய துறையில் உரிய பாடத்தில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

புதிய பாடத்திட்டத்திற்கமைய கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சையில் உயர் கணிதம் அல்லது இணைந்த கணிதம் பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன் தொழில்சார் தகைமைகள்

(III) கல்கமுவ, கொத்மலை நீர்ப்பாசன பயிற்சி நிறுவகத்தின் நீர்ப்பாசனப் பொறியியலாளர் டிப்ளோமா கற்கை நெறியை மேற்கொண்டு சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

(IV) மொரட்டுவை கட்டுபெத்த பல்கலைக்கழகத்தில் மூலம் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (சிவில் பொறியியல்) கற்கை நெறிக்கான சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

(V) மட்டக்குளி இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் நடாத்தப்படும் உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில் பொறியியல்) கற்கை நெறிக்கான சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

(VI) கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்பம் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா (சிவில் பொறியியல்) கற்கை நெறிக்கான சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

(VII) இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில் நுட்பவியல் டிப்ளோமா (சிவில் பொறியியல்) கற்கை நெறிக்கான சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

(VIII) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழுவினால் அல்லது மூன்றாம் நிலைக்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் மேலே குறிப்பிட்ட கற்கை நெறிக்குச் சமமான கற்கை நெறியை மேற்கொண்டுஅதற்குரிய சான்றிதழ் பெற்றிருத்தல்.

(இக்கற்கை நெறி NVQ 6 மட்டத்தில் இருக்க வேண்டும்)

**குறிப்பு**.- கற்கை நெறியைப் பூரணப்படுத்தி இருப்பினும் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளாதவர்களும் விண்ணப்பிக்கலாம். இருப்பினும் அச்சான்றிதழ்களை நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்கும் போது சமர்ப்பித்தல் அவசியமாகும். ஆனால் சான்றிதழில் குறிப்பிடப்படும் திகதியானது விண்ணப்பம் கோரப்படும் இறுதித்திகதிக்கு முன்னதாக இருத்தல் வேண்டும்.

4. **ஆட்சேர்க்கப்படும் முறை :**

(அ) அனைத்து ஆட்சேர்ப்புகளும் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 15/ 90 இற்கிணங்கவும் மற்றும் தாபன விதிக் கோவைக்கிணங்கவும் மேற்கொள்ளப்படும்.

(ஆ) (I) பயிலுனர்கள் பிரிவு 3 உ (1) இன்கீழ் தகைமைகளுக்கிணங்க தெரிவு செய்யப்பட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கல்கமுவ திணைக்கள பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் இரண்டு (02) வருட கால முழுநேர வதிவிடப் பயிற்சியும் ஒரு (01) வருட பிரயோகப் பயிற்சியுமாக மூன்று (03) வருட காலத்தையுடைய பயிற்சி நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின்னர் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கல்கமுவ பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் நீர்ப்பாசனப் பொறியியலாளர் சான்றிதழ்களைப் பெறும் உரித்துடையவராவர்.

(II) குறிப்பிட்ட பரீட்சையில் நீர்ப்பாசனப் பயிலுனர்கள் சித்தியடையத் தவறியமை கடமையில் அலட்சியம், ஆர்வமின்மை, வரவில் பலவீனம் போன்றவை காரணமாக இல்லாதிருப்பின் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானத்தின்படி 06 மாத காலத்தினை மிகைக்காதவாறு பயிற்சி நெறியைத் தொடர அனுமதிக்கப்படுவர். சித்தியடையாத பயிலுனர்கள் அவ்வாறு நீடிக்கப்பட்ட பயிற்சிநெறி நீடிப்புக்காலம் முடிவடைந்ததும் அவர்களுக்காக நடாத்தப்படும் இறுதிப்பரீட்சையில் இவர்கள் சித்தியடைதல் வேண்டும். அந்த பரீட்சையிலும் சித்தியடையத் தவறின் அவர்களது சேவை முடிவுபெறும்.

(III) பயிற்சிக் காலத்தின்போது கருத்தரங்குகளுக்கு அல்லது உரைகளுக்கு பயிலுனர்கள் 80% குறைந்தபட்சம் வருகை தந்து பயிற்சிநெறியில் திருப்திகரமான பதிவையும் மேற்கொள்வதை எதிர்பார்க்கப்படுகிறது. தேவைப்படும் குறைந்தபட்ச வரவு மற்றும் திருப்திகரமான பதிவுகள் கொண்டிராத பயிலுனர்கள் இருப்பின் குறித்த பரீட்சையில் அமர்வதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டார்கள். அவ்வாறே பயிற்சிநெறியும் முடிவுறுத்தப்படும்.

(IV) மேலே பிரிவு 3உ II,II,IV,V,VI,VII,VIII இன் கீழ் கல்வித் தகைமைகளுக்கமையுடன் ஆட்சேர்க்கப்படும் பயிலுனர்களுக்கான உரைகளையும் பிரயோகப் பயிற்சியையும் உள்ளடக்கியதாக (06) ஆறுமாத கால பயிற்சிநெறியின் முடிவில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பிரயோகப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

(V) இப்பயிலுனர்கள் பெற்றுக்கொண்ட ஒரு வருடவெளிக்கள பயிற்சியானது நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வெற்றிகரமாக பூர்த்தி செய்திருப்பின் ஆட்சேர்க்கப்பட்ட பின்னர் பயிலுனர்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆறு(06) மாத கால பயிற்சிநெறி விலக்களிக்கப்படும். அத்தோடு அவர்கள் அனைத்து பிரயோகப் பரீட்சையிலும் சித்தியடைதல் அவசியமாகும்.

(இ) அனைத்து உரைகளும் பயிற்சிநெறிகளும் ஆங்கில மொழியிலேயே நடாத்தப்படும்.

(ஈ) பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யின்நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் III ஆம் தரப் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

5. **சேவை நிபந்தனைகள் :**

(அ) இப்பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதியமுடையது. ஓய்வூதிய முறை பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீங்கள் கீழ்படிதல் வேண்டும். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர்கள் முதலில் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு பயிலுனர் என்ற அடிப்படையில் ஆட்சேர்க்கப்படுவர்.

(இ) நீர்ப்பாசனப் பயிலுனர்கள் 3 (உ) I இன் தகைமையுடையவர்கள் ஆட்சேர்க்கப்பட்டு நீர்ப்பாசன பயிலுனர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிநெறியின் போது கீழ் குறிப்பிடப்படும் கொடுப்பனவு ஒன்று வழங்கப்படும்.

முதலாவது வருடத்தின்போது (மாதாந்தம்) - ரூ. 27,140/- என்றவாறும்,
இரண்டாவது வருடத்தின்போது (மாதாந்தம்) - ரூ. 27,440/- என்றவாறும்,
மூன்றாவது வருடத்தின்போது (மாதாந்தம்) - ரூ. 27,740/- என்றவாறும்,

3உ II,II,IV,V,VI,VII,VIII இன் கீழ் கல்வித் தகைமைகளுக்கமையுடன் ஆட்சேர்க்கப்பட்ட பயிலுனர்களுக்கு 06 மாத பயிற்சிக்காலத்திற்கு ரூ. 27,740/- என்றவாறு கொடுப்பனவு செய்யப்படும்.

இக்கொடுப்பனவானது நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியுடன் நீடிக்கப்பட்ட பயிற்சிநெறிக் காலத்துக்கும் தொடர்ந்து வழங்கப்படுவதோடு ஏனைய சலுகைகளுக்கோ உரிமைகளுக்கோ உரித்துரிமை பெறமாட்டார்கள்.

(ஈ) நீர்ப்பாசன பயிலுனர்களின் தாபனக் கோவை ஏற்பாடுகளுக்கிணங்கவும் அரசாங்கத்தினால் காலத்திற்குக்காலம் வெளியிடப்படும் ஏனைய ஒழுங்கு விதிகளுக்கும் உட்படல் வேண்டும். பயிற்சியைப் பெறும் காலப்பகுதிக்கு அவர்களுக்கு விடுமுறை அல்லது புகையிரத அனுமதிப் பத்திரங்கள் என்பன பெறுவதற்கு உரித்துடையதல்ல.

(உ) இப்பதவியின் பயிலுனர் காலத்தைப் பூர்த்தி செய்து தரம் III இற்கான பொறியியல் உதவியாளருக்கான முறையான நியமனத்தைப் பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து 03 வருடங்களுக்கு தகுதிகாண் காலத்திற்கு உட்படும்.

(ஊ) இந்த சேவை சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10- 12 வரையான பிரிவுகளின் ஏற்பாடுகள் இச்சேவைக்கு உரித்துடையதாகும்.

(எ) மேலே 3 (உ) I இன் கீழ் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் பொறியியல் உதவியாளராக 05 வருடங்களுக்கு கட்டாய சேவை செய்வதற்காக உடன்படிக்கையொன்றில் கையொப்பமிடல் வேண்டும். அதற்கு முன்னர் சேவையிலிருந்து நீங்குவதற்கு தேவையேற்பட்டால் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை அரசாங்கத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

6. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்துடன் கீழ் காணப்படும் சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியை கையளித்தல் வேண்டும்.

I. பெற்றுக்கொண்டுள்ள தொழில் நுட்பவியல் சான்றிதழ்,

II. கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சைச் சான்றிதழ்,

III. கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சைச் சான்றிதழ்,

IV. பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பிறப்புச்சான்றிதழ்.

V. அண்மையில் பெற்றுக்கொண்ட நன்னடத்தைச் சான்றிதழ்கள் மூன்று (அதில் ஒன்று இறுதியாக கல்விகற்ற பாடசாலை அதிபரிடமும் மற்றது வதிவிட பிரதேசத்தின் கிராம சேவை உத்தியோகத்தரினால் பெற்றுக்கொண்ட நன்னடத்தைச் சான்றிதழ்,)

**குறிப்பு**.- மேலே குறிப்பிட்ட சான்றிதழ்களின் பிரதிகள் திருப்பித் தரப்படமாட்டாது.

7. மாகாண மற்றும் அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

8. விண்ணப்பதாரர்கள்,கொழும்பு மாவட்டத்திலும் தெரிவு செய்யப்பட்ட சில மாவட்டங்களிலும் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சைக்கும் மற்றும் நேர்முகப் பரீட்சைக்கும் தமது செலவிலேயே தோற்றுதல் வேண்டும். இப்பரீட்சையைப் பிற்போடுவது அல்லது இரத்துச் செய்வது சம்பந்தமாக இறுதித் தீர்மானம் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்திற்குரியதாகும்.

9. சேவை அவசியத்தைப்பொறுத்து எந்த சந்தர்ப்பத்ததிலும் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு தயாராாக இருத்தல் வேண்டும். திணைக்களத்தின் வேலைத்தளங்கள் பெரும்பாலும் போக்குவரத்து மற்றும் தங்குமிடவசதி குறைந்த கஷ்டப் பிரதேசங்களில் அமைந்திருக்கிறது என்பதை விண்ணப்பதாரர்கள் புரிந்துகொள்ளுதல் வேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் கஷ்டப் பிரதேசங்களுக்கு நியமிக்கப்படுவதோடு குறைந்தபட்சம் ஐந்து(05) வருடங்கள் அத்தகைய பிரதேசத்தில் கடமைப்புரிதல் வேண்டும். அத்தகைய சேவை நிலையங்களில் சேவை புரிவதற்கு விருப்பமற்றவர்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் கூடாது. அவ்வாறான சேவை நிலையங்களாவன அம்பாறை, பொத்துவில், கல்முனை, அக்கரைப்பற்று, மஹ ஓய, பதவிய, இராஜாங்கனைய, ஹூறுலுவெவ, மாப்பாகட, பதுளை, கந்தேகெட்டிய, நவகிரி, றூகம், திஸ்ஸ, வீரகெட்டிய, ஹம்பாந்தோட்டை, வெள்ளவாய, வெளிஓய, பிபிலை, மொனராகலை, பொலனறுவை, கவ்துள்ள, எலஹெர, இங்கினிமிட்டிய, புத்தளம், மூதூர், கந்தளாய், மொரவெவ, முருங்கன், வவுனியா, சிலாவதுறை ஆகிய நீர்ப்பாசன பிரிவுகளும் மற்றும் திட்டக் காரியாலயங்களாகும்.

10. விண்ணப்பதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது பொய்யான தகவல்கள் ஆட்சேர்ப்பதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால் விண்ணப்பதாரரின் விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறான பொய்யான தகவல்கள் ஆட்சேர்க்கப்பட்ட பின்னர் நிரூபிக்கப்பட்டால் அவரது சேவைமுடிவுறுத்தப்படும். இதற்கு மேலதிகமாக பொய்யான தகவல்களை சமர்ப்பித்தமைக்கு எதிராக சட்டத்தின் மூலம் தண்டனைப் பெற்றுக்கொடுக்கப்படும்.

11. அரசாங்க பதவிகளுக்கு நியமிக்கப்படுவது சம்பந்தமாக செயற்படும் ஒழுங்கு விதிகளுக்கு இலங்கை அரசின் வர்த்தமானி பத்திரத்தின் I ஆம் பிரிவின் II (அ) பந்தியின் பால் கவனம் செலுத்தப்படுகிறது.

12. சகல நியமனங்கள் தொடர்பாகவும் அரச சேவை ஆணைக்குழுவின் இலக்கம் 1589/ 30 மற்றும் 2009.02.20 ஆம் திகதிய அதிவிசேடவர்த்தமானிப் பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்ட செயன்முகைள் ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தாபன விதிக் கோவையின் நடைமுறைகளுக்கும் உரியதாகும்.

13. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகை இலக்கம் 2013/ 31 மற்றும் 2017.04.07 ஆந் திகதிக்குரிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்புகளுக்கும் அதற்குக் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் இணங்க தங்களது நியமனம், தரமுயர்த்தல் சேவை நிபந்தனைகள் என்பன அமைந்து காணப்படும்.

14. மேலே இலக்கம் 13 இல் குறிப்பிடப்பட்டுள்ள சேவைக்குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைவாக இல்லாத ஏதாவது விடயம் காணப்படுமாயின் அது சம்பந்தமாக அரச சேவை ஆணைக்குழுவினால் தீர்மானம் எடுக்கப்படும்.

15. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ள போதிலும் இதில் ஏதாவது முரண்பாடுகள் இருப்பின் அதற்கு சிங்கள மொழியிலான அறிவித்தலே ஏற்புடையதாகும்

எந்திரி. கே. டி. நிஹால் சிறிவர்தன,
நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
இல 230, பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 07.
2020, திசெம்பர் 11.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**நீர்ப்பாசன அமைச்சு**

**நீர்ப்பாசனத் திணைக்களம்**

**நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பொறியியல் உதவியாளர் சேவையின் தரம் III இற்கான பொறியியல் உதவியாளர் பதவி**

1. (அ) முழுப்பெயர்: ......................................................................
(தமிழ்)

(ஆ) முழுப் பெயர்:......................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

(இ) முதலெழுத்துக்களுடன் பெயர்:.........................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2. பால்:......................................................................

3. (அ) தபால் முகவரி :......................................................................
(தமிழ்)

(ஆ) தபால் முகவரி:......................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

(இ) நிரந்தர முகவரி......................................................................

(ஈ) தொலைபேசி இல......................................................................

(உ) நிலையான தொலைபேசி இல. ............... கையடக்கத் தொலைபேசி இல. ................

(ஊ) மின்னஞ்சல் முகவரி......................................................................

4. வதிவிட மாவட்டம்......................................................................

5. பிரதேச செயலாளர் பிரிவு:......................................................................

6. பிறந்த திகதி :- (பிறப்புச் சான்றிதழ் பிரதியொன்றை இணைக்கவும்)

(அ) வருடம் :................. மாதம்:............திகதி:...............

(ஆ) பிறந்த இடம்: ......................................................................

(இ) 2021.01.11 ஆந் திகதியன்று வயது:

வருடங்கள் .......... மாதங்கள் ............ நாட்கள் ............

7. தேசிய அடையாள அட்டை இல:............................................................

8. நீர் ஒரு இலங்கைப் பிரசையா: (ஆம்/ இல்லை).............................................

இனம் :

| | | | |
|---|---|---|---|
| சிங்களவர் | ☐ | முஸ்லிம் | ☐ |
| இலங்கை தமிழ் | ☐ | ஏனைய | ☐ |
| இந்தியத் தமிழர் | ☐ | | |

9. **கல்வித் தகைமைகள் (சான்றுப் பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும்) :**

9.1 **க.பொ.த. (சா.த) பரீட்சை சான்றிதழ் :**

முதலாம் அமர்வு
சுட்டெண்: ................................ வருடம்: ........................

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| 9 | |
| 10 | |

9.2 **க.பொ.த .(உ.த) பரீட்சை சான்றிதழ்**

சுட்டெண்: ................................ வருடம்: ........................

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |

10. தொழில் நுட்பத் தகைமைகள் (சான்றுப் பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும்) ......................................
.................................
(தயவு செய்து பயிற்சி நெறியின் பெயரையும் தொழில்நுட்ப நிறுவனத்தின் பெயரையும் தருக.)

11. நீர் அரச திணைக்களத்தில் அல்லது அரச கூட்டுத்தாபனத்தில் முன்னர் சேவையாற்றியிருப்பின் :-

நீர் ஏன் இராஜினாமா/ சேவையை விட்டு விலகல்/ சேவையைத் தொடராமை சேவை நீக்கம் ஏற்பட்டதற்கான காரணத்தைக் குறிப்பிடவும்..................................................................

12. தற்போது உத்தியோகத்திலிருப்பின் கீழ்வரும் விபரங்களைத் தரவும்

(அ) பதவி:..............................................................

(ஆ) நிறுவனம்:..........................................................

(இ) நியமனத் திகதி:.........................................................

(ஈ) தொழிலின் தன்மை: (நிரந்தரமானது/ தற்காலிகமானது/ அமைய)................

13. இவ்விண்ணப்பத்தில் என்னால் கூறப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானதும், சரியானதும் என உறுதி கூறுகிறேன். மேலும் இவ்விண்ணப்பத்தில் பிழையான தகவல்கள் ஏதும் உள்ளடக்கப்பட்டிருப்பின், அது தகைமையற்றதாகும் என்பதையும் நான் நன்கு அறிவேன். அத்தோடு அது ஆட்சேர்ப்பின் பின்னர் தெரியவரின் எவ்வித நட்டயீடுமின்றி உத்தியோகம் முடிவடைவதற்குரிய காரணமாக அமையும் என்பதையும் அறிவேன்.

.............................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி.........................................................

*திணைக்களத் தலைவரின் விதப்புரை*
*(அரசாங்க திணைக்களங்களில், மாகாண சபையில் உள்ளவர்களுக்கு மட்டும்)*

......................................................... என்பவர் இத்திணைக்களத்தில்/ நிறுவனத்தில் தொழில் புரிகிறார். இவரது வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானது எனவும், இதில் வேண்டப்பட்டுள்ள தேவைகளுக்கும் நிபந்தனைகளுக்குமிணங்க இவர் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர் எனவும் உறுதி கூறுகிறேன். அவர் தெரிவு செய்யப்படின் விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் உறுதி கூறுகிறேன்.

..............................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(அலுவலக முத்திரை)

பெயர் :..............................................
பதவி :..............................................
முகவரி :...........................................
திகதி :.................................................

12-369

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலை மற்றும் கிராமிய கலைநுட்ப மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின்கீழ் உள்ள தொல்பொருளியல் திணைக்களத்திற்காக வெளிக்கள, அலுவலக அலுவலர்கள் பிரிவு 2 சேவை தொகுதியில் (MN-05-2016) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2020/ 2021

தொல்பொருளியல் திணைக்களத்திற்கு வெளிக்கள/ அலுவலக அலுவலர்கள் - பிரிவு 2 (MN-05-2016) சேவை தொகுதிக்கு ஏற்புடையதாக பின்வரும் பதவிகளின் பொருட்டு தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பத்தாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உரிய வெற்றிப் பதவிகள் பின் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், பின்வரும் படிவம்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2021.01.13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு கிடைக்ககூடியவாறு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். இந்தப் பரீட்சை 2021 பங்குனி மாதம் கொழும்பு நகரத்தில் நடாத்தப்படும். இந்தப் பரீட்சை ஒத்தி வைப்பதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதிக்கமைவாக தொல்பொருளியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| 1. | பிராந்திய ஆராய்ச்சியாளர் | - | 04 |
| 2. | பிராந்திய அகழ்வாராய்ச்சி மற்றும் அருங்காட்சியக அலுவலர் | - | 02 |
| 3. | பிராந்திய காப்பாளர் | - | 05 |
| 4. | பிராந்திய பராமரிப்பு முகாமையாளர் | - | 02 |

*1.* ***ஆட்சேர்ப்பு முறை.-*** *அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பத்தாரிகளிடையே எழுத்திலான பரீட்சை சித்தியடைந்தும், தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதுமான பரீட்சார்த்திகளது புள்ளிகளின் ஒழுங்குமுறைப்படி மற்றும் கோரப்பட்டுள்ள பதவிகளின் ஒழுங்குமுறையின் அடிப்படையில் ஒவ்வொரு பதவியிலும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையினரை பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, கல்வித் தகைமைகள் மற்றும் உடற் தகைமைகளை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.*

*2.* ***எழுத்திலான பரீட்சை.-*** *இப்பரீட்சை பின்வரும் வினாப் பத்திரங்களைக் கொண்டமைந்துள்ளன :*

I. *தொல்பொருளியல்*
II. *இலங்கையின் வரலாறு*

***பொதுவான நேர்முகப் பரீட்சை.-*** *எழுத்திலான எல்லா வினாத்தாள்களுக்கும் விண்ணப்பத்தாரிகள் தோற்றுதல் வேண்டும். சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் 40% ஆன ஆகக் குறைந்த புள்ளிகளை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். பரீட்சை சித்தியடைந்த விண்ணப்பத்தாரிகளை புள்ளிகளின் திறமையின் ஒழுங்குமுறை அடிப்படையில் மற்றும் கோரப்பட்டுள்ள பதவிகளின் ஒழுங்குமுறையின் அடிப்படையில பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், இந்த நேர்முகப் பரீட்சையில் கல்வித் தகைமைகள் மற்றும் உடற் தகைமைகளை உறுதிப்படுத்திக்கொள்ளப்படும். அதற்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.*

*3.* ***சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்.-*** *இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதியம் தொடர்பாக அரசாங்கத்தால் எதிர்காலத்தில் மேற்கொள்கின்ற கொள்கையுடனான தீர்மானங்களுக்கு நீங்கள் உடன்படுதல் வேண்டும். அரசாங்க சேவையின் நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் 2016.09.01 ஆந் திகதியில் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொல்பொருளியல் திணைக்களத்தின் வெளிக்கள / அலுவலக அலுவலர்கள் - பிரிவு 2 சேவைத் தொகுதியில் (MN-05-2016) பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு ஏற்புடையதான எல்லா நிபந்தனைகளுக்கும், பின்னர் 2019.07.04 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட திருத்தங்களுக்கும், அந்த ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு மேற்கொண்டுள்ள அல்லது இதன் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் அமைவாக தெரிவு செய்கின்ற பரீட்சார்த்தியொருவர் தொல்பொருளியல் திணைக்களத்தின் வெளிக்கள/ அலுவலக அலுவலர்கள் - பிரிவு 2 சேவை தொகுதியில் தரம் 11 இன் பதவிக்கு நியமனம் செய்யப்படுவார்.*

*3.1 தம்மிடம் வழங்கப்பட்டுள்ள பதவியில் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கப்படாவிடின் மற்றும்/ அல்லது நியமனம் செய்யப்பட்ட கடைமைகளில் அல்லது நியமனம் செய்யப்பட்ட பிரதேசத்தில் கடைமைகள் பொறுப்பேற்பதனை நிராகரிக்கும் அல்லது உதாசீனப்படுத்தும் விண்ணப்பத்தாரிகளின் நியமனங்களை இரத்துச் செய்யப்படலாம்.*

*4.* ***மாதச் சம்பள அளவுத்திட்டம்.-*** *2016.02.25 ஆந் திகதிய 03/ 2016 ஆந் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையில் அட்டவணை 1 இன்படி இந்த பதவிக்கு ஏற்புடையதான மாதச் சம்பள அளவுத் திட்டம் ரூபா 34,605 - 10 x 660 - 11 x 755 - 15 x 930 - 63,460/ - (MN-05-2016) ஆகும். அந்தச் சுற்றறிக்கையில் ஏற்பாடுகளுக்கு அமைவாக அதன் அட்டவணை 11 இன்படி தங்களுக்கு சம்பளம் செலுத்தப்படும்.*

*(நியமனத் திகதி தொடக்கம் 03 ஆண்டு காலப் பகுதிக்குள் 1 ஆவது வினைத்திறன்காண் தடை பரீட்சையும், வகுப்பு 1 இல் நியமனத் திகதி தொடக்கம் 05 ஆண்டு காலப் பகுதிக்குள் 02 ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையும் சித்தியடைதல் வேண்டும். நியமனம் பெற்று 05 ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் 2007.05.28 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 07/ 2007 இன்படி உரிய மட்டத்திலான அரச கரும மொழித் தேர்ச்சியினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.)*

*5.* ***ஆரோக்கியம் :***

*பரீட்சார்த்தி நாட்டில் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு முடியுமான வகையில் சிறந்த உடல் உள ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.*

*6.* ***தகைமைகள்.-*** *இதற்காக தோற்றும் பரீட்சார்த்தியொருவர், இலங்கை பிரசையாதல் வேண்டும்.*

*(அ)* ***பிராந்திய ஆராய்ச்சியாளர் பதவிக்காக***

- *கல்வித் தகைமைகளாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும்,*

(I) *தொல்பொருளியல் தொடர்பான சிறப்பு (நான்காண்டிலான) பட்டம்*

*அல்லது*

(II) *பட்டத்துடன் ஓராண்டுக்கு குறையாத தொல்பொருளியல் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா*

*அல்லது*

(III) பட்டத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றால் வழங்கப்படும் ஓராண்டு தொல்பொருளியல் பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவிற்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட கல்வித் தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

- **அனுபவமாக,**

(I) மேற்படி கல்வி தகைமைகளுடன் தொல்பொருளியல் திணைக்களத்தின் இணைந்த சேவை தொகுதியின்கீழ் ஆராய்ச்சி விடய துறைக்குரிய ஆராய்ச்சியாளர் அலுவலர் / தொல்பொருளியல் ஆராய்ச்சி அலுவலர் பதவியில் அல்லது அபிவிருத்தி அலுவலர் ஆகிய பதவியொன்றில் 05 ஆண்டுகளிலான செயலூக்கமிக்க மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்த அலுவலராதல் வேண்டும்.

அல்லது

(II) மேற்படி கல்வி தகைமைகள் ஏற்புடையதாகாத வகையில் அனுபவமாக தொல்பொருளியல் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவி தொழில் நுட்பமற்ற பிரிவு 02 சேவைத் தொகுதியில் (MN -01) ஆராய்ச்சி உதவியாளர் பதவியில் தரம் 1 இல் 02 ஆண்டுகளிலான செயலூக்கமிக்க மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் தரம் 1 இற்கு ஏற்புடையதான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**(ஆ) பிராந்திய அகழ்வாராய்ச்சி மற்றும் அருங்காட்சியக அலுவலர்**

- கல்வித் தகைமைகளாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும்,

(I) தொல்பொருளியல் தொடர்பான சிறப்பு (நான்காண்டிலான) பட்டம்

அல்லது

(II) பட்டத்துடன் ஓராண்டுக்கு குறையாத தொல்பொருளியல் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா

அல்லது

(III) பட்டத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றால் வழங்கப்படும் ஓராண்டு தொல்பொருளியல் பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவிற்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட கல்வித் தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

- **அனுபவம்**

I மேற்படி கல்வி தகைமைகளுடன் தொல்பொருளியல் திணைக்களத்தின் இணைந்த சேவை தொகுதியின்கீழ் அகழ்வாராய்ச்சி மற்றும் அருங்காட்சியக விடய துறைக்குரிய அகழ்வாராய்ச்சி அலுவலர்/ அகழ்வாராய்ச்சி மற்றும் அருங்காட்சியக அலுவலர் / தொல்பொருளியல் ஆராய்ச்சி அலுவலர் பதவியில் அல்லது அபிவிருத்தி அலுவலர் ஆகிய பதவியொன்றில் 05 ஆண்டுகளிலான செயலூக்கமிக்க மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினை பூர்த்தி செய்த அலுவலராதல் வேண்டும்.

அல்லது

II மேற்படி கல்வி தகைமைகள் ஏற்புடையதாகாத வகையில் அனுபவமாக தொல்பொருளியல் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவி தொழில் நுட்பமற்ற பிரிவு 02 சேவைத் தொகுதியில் (MN-01) அகழ்வாராய்ச்சி உதவியாளர்/ அகழ்வாராய்ச்சி மற்றும் அருங்காட்சியக உதவியாளர் பதவியில் தரம் 1 இல் 02 ஆண்டுகளிலான செயலூக்கமிக்க மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் தரம் 1 இற்கு ஏற்புடையதான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இ) **பிராந்திய காப்பாளர் பதவிக்காக**

- கல்வித் தகைமைகளாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும்,

  I. கட்டிடக்கலை அல்லது கட்டிடக்கலை பாதுகாப்பு தொடர்பான பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

  அல்லது

  II. இலங்கை கட்டிடக்கலைஞர் நிறுவனத்தின் பூரண உறுப்பினர் உரிமை பெற்றிருத்தல் வேண்டும்.

- **அனுபவம்**

  I. மேற்படி கல்வி தகைமைகளுடன் தொல்பொருளியல் திணைக்களத்தின் இணைந்த சேவை தொகுதியின்கீழ் வனப் பாதுகாப்பு விடய துறைக்குரிய தொல்பொருளியல் ஆராய்ச்சி அலுவலர் பதவியில் 05 ஆண்டுகளிலான செயலூக்கமிக்க மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினை பூர்த்தி செய்த அலுவலராதல் வேண்டும்.

  அல்லது

  II மேற்படி கல்வி தகைமைகள் ஏற்புடையதாகாத வகையில் அனுபவமாக தொல்பொருளியல் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்ப சேவைத் தொகுதியில் (MN-03) தொழிநுட்ப அலுவலர் (பாதுகாப்பு உதவியாளர்)/ திட்ட வரையுநர் (Technical Officer (Conservation Assistant)/ Draftsman ஆகிய பதவியொன்றில் தரம் 11 இல் 05 ஆண்டுகளிலான சேவைக் காலத்தினை பூர்த்தி செய்திருத்தல் அல்லது தரம் 1 இன் அலுவலராதல் வேண்டும்.

  அல்லது

  III. மேற்படி கல்வி தகைமைகள் ஏற்புடையதாகாத வகையில் அனுபவமாக தொல்பொருளியல் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவி தொழில் நுட்பமற்ற பிரிவு 02 சேவைத் தொகுதியில் (MN-01) இரசாயனகூட உதவியாளர் / இரசாயனகூட பாதுகாப்பு உதவியாளர் (Laboratory Assistant/ Laboratory Conservation Assistant) பதவியில் தரம் 1 இல் 02 ஆண்டுகளிலான செயலூக்கமிக்க மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் தரம் 1 இற்கு ஏற்புடையதான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஈ) **பிராந்திய பராமரிப்பு முகாமையாளர் பதவிக்காக**

- கல்வித் தகைமைகளாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும்,

  I. சிவில் பொறியியல் தொடர்பான பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்

  அல்லது

  II. கட்டுமான அமைப்பு / கட்டிடக்கலை (Built Environment/ Architecture) தொடர்பான பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

  அல்லது

  III. தொல்பொருளியல் தொடர்பான விசேட பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

  அல்லது

  IV. தொல்பொருளியல் பாடத்துடன்கூடிய பட்டத்துடன் ஓராண்டு தொல்பொருளியல் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

  அல்லது

V. தொல்பொருளியல் பாடத்துடன்கூடிய பட்டத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்படும் ஓராண்டிலான தொல்பொருளியல் பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவிற்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட கல்வித் தகைமைகளைக் பெற்றிறிருத்தல் வேண்டும்.

அல்லது

VI. தொழிநுட்பவியல் பட்டம் (Technology) பெற்றிருத்தல் வேண்டும்.

- ***அனுபவம்***

I. மேற்படி கல்வி தகைமைகளுடன் தொல்பொருளியல் திணைக்களத்தின் இணைந்த சேவை தொகுதியின்கீழ் தொல்பொருளியல் விடய துறைக்குரிய வேலைதள முகாமையாளர்/ தொல்பொருளியல் ஆராய்ச்சி அலுவலர் பதவியில் அல்லது அபிவிருத்தி அலுவலர் பதவியில் 05 ஆண்டுகளிலான செயலூக்கமிக்க மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினை பூர்த்தி செய்த அலுவலராதல் வேண்டும்.

அல்லது

II மேற்படி கல்வி தகைமைகள் ஏற்புடையதாகாத வகையில் அனுபவமாக தொல்பொருளியல் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப சேவைத் தொகுதியில் (MN-03) தொழிநுட்ப அலுவலர் (பாதுகாப்பு உதவியாளர்)/ திட்ட வரையுநர் (Technical Officer (Conservation Assistant)/ Draftsman) ஆகிய பதவியொன்றில் தரம் 11 இல் 05 ஆண்டுகளிலான சேவைக் காலத்தினை பூர்த்தி செய்திருத்தல் அல்லது தரம் 1 இன் அலுவலராதல் வேண்டும்.

அல்லது

III. மேற்படி கல்வி தகைமைகள் ஏற்புடையதாகாத வகையில் அனுபவமாக தொல்பொருளியல் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவி தொழில் நுட்பமற்ற பிரிவு 02 சேவைத் தொகுதியில் (MN-01) பராமரிப்பு உதவியாளர் பதவியில் தரம் 1 இல் 02 ஆண்டுகளிலான செயலூக்கமிக்க மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் தரம் 1 இற்கு ஏற்புடையதான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

IV. பட்டம் வலுவிலிருக்கும் திகதி 2021.01.13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரான திகதியாதல் வேண்டும்.

V. இப் பரீட்சையில் விண்ணப்பம் செய்வதற்கு தேவையான தகைமைகள் 2021.01.13 ஆந் திகதியில் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

VI. அரச சேவையிலுள்ள அலுவலர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது.

**7. விண்ணப்பம் செய்யும் முறை :**

(அ) விண்ணப்ப படிவங்கள் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதனை 8 1/ 2" x 12" (A 4) அளவிலான கடதாசி தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படுதல் வேண்டும். 1.0 தொடக்கம் 5.0 வரையிலான தலைப்புகளை விண்ணப்ப படிவத்தில் முதலாவது பக்கத்திலும், 6.0 தொடக்கம் 9.0 வரை அதன் இரண்டாவது பக்கத்திலும், 10.0 தொடக்கம் 12.0 வரை மூன்றாவது பக்கத்திலும் அமையும் வகையில் தமது விண்ணப்பங்களை தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதை விசேடமாக கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். விண்ணப்ப படிவங்களில் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழி விண்ணப்ப படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழி விண்ணப்ப படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கல மொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மொழிமூலத்திலயே தமது கையெழுத்தில் விண்ணப்ப படிவம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு ஒழுங்கமையாத விண்ணப்பங்கள் மற்றும் உரியவாறு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப படிவத்திற்கு ஒழுங்கமைவானதா என்பது தொடர்பாகவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்கள்

விண்ணப்பத்தில் உள்ளடக்கி பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது தொடர்பாகவும் பரீட்சார்த்தியால் பரீட்சித்தல் வேண்டும். இல்லாவிடின் விண்ணப்ப படிவம் நிராகரிக்கப்படலாம். (விண்ணப்ப படிவத்தின் நிழற்பட பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணத்திற்கு ஏற்புடையதான பற்றுச்சீட்டின் நிழற்பட பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.)

(ஆ) விண்ணப்ப படிவங்களை பரீட்சார்த்தி பரீட்சையில் தோற்றுகின்ற மொழிமூலத்திலேயே தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(இ) பரீட்சைக் கட்டணம் ரூபா.600/ - ஆவதுடன், அப் பரீட்சை கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன்கீழ் அரசாங்க வருமானத்தில் வரவு வைக்கும் வகையில் நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகம், மாவட்ட, பிரதேச செயலகத்திடம் பணம் செலுத்தப்பட்டு விண்ணப்பத்தாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டினை, அதன் ஒரு விளிம்பினைக்கொண்டு விண்ணப்ப படிவத்தில் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டிவிடுதல் வேண்டும். பரீட்சை கட்டணத்திற்காக காசுக் கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாதென்பதுடன், பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணத்தை வேறு எந்தவொரு காரணத்திற்காகவும் மீள செலுத்துவதற்கோ வேறு பரீட்சைகளுக்கு மாற்றுவதற்கோ இடமளிக்கப்படமாட்டாது. அதேபோன்று பற்றுச்சீட்டின் நிழற்பட பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

(ஈ) பரீட்சைக்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பதிவு தபால்மூலம் 2021.01.13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்ககூடியவாறு பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (தாபன மற்றும் வெளிநாட்டு பரீட்சை) கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், த.பெ. இலக்கம் 1503, கொழும்பு, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக "தொல்பொருளியல் திணைக்களத்தின் வெளிக்கள / அலுவலக அலுவலர்கள் - பிரிவு 2 (MN-05-2016) சேவை தொகுதியில் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2020/ 2021" என்று குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(உ) விண்ணப்ப படிவத்தில் விண்ணப்பத்தாரரின் கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட பதவிநிலை தரத்திலான அலுவலரால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஊ) எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்ப படிவங்களை இரத்துச் செய்யப்படும். அஞ்சலில் விண்ணப்ப படிவம் காணமல் போதல் அல்லது தாமதமாதல் தொடர்பாக எந்தவொரு முறைப்பாடும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

8. வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பம் செய்திருப்பார்கள் என்ற பூர்வாங்க முடிவின்மீது அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சை கட்டணத்தை செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பத்தாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை அனுப்பி வைத்தவுடன் அது தொடர்பாக குறிப்பிடப்பட்டு பத்திரிக்கை அறிவிப்பொன்றை இலங்கை பரீட்சை திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி 02 அல்லது 03 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காத பரீட்சார்த்திகள் இருப்பாராயின் அது தொடர்பாக இலங்கை பரீட்சை திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு (தாபன மற்றும் வெளிநாட்டு பரீட்சை) கிளையுடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு செய்கையில் விண்ணப்பத்தாரி தாம் விண்ணப்பம் செய்த பரீட்சையின் பெயர், விண்ணப்பத்தாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டையின் இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பத்தாரி கொழும்பிற்கு வெளியக பிரதேசத்தை வதிவிடமாக கொண்டிருப்பின், அந்த விபரங்களுடன், தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியினை விரைவாக பெற்றுக்கொள்வதற்கு முடியுமான வகையில், விண்ணப்பத்தாரியின் தொலைநகல் இலக்கம் குறிப்பிடப்பட்ட வேண்டுகோள் கடிதமொன்றை, அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வைத்த பின்னர் அது தொடர்பாக உசாவுதல் மிக பனுள்ளதாகும். அவ்வாறு மேற்கொள்கையில் பரீட்சை திணைக்களத்தால் உசாவும் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக தாம் வசம் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்ப படிவத்தின் பிரதி, பரீட்சை கட்டணம் செலுத்திய பின்னர் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி/ பரீட்சைக் கட்டணம் செலுத்தல் ஏற்புடையதாயின் அதற்கு ஏற்புடையதான பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பம் அஞ்சலில் பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டை தயாராக வைத்திருத்தலும் பயனுள்ளதாகும்.

அனுமதி அட்டையின்றி பரீட்சை மண்டபத்திற்கு நுழைவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் திகதியில் பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் தனது ஒப்பத்தை உறுதிப்படுத்திக்கொண்ட அனுமதி அட்டை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதலானது அவர் பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என்பதை ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்பட மாட்டாது.

9. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.-** பரீட்சார்த்தியொருவர் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான வெளிநாட்டு கடவுச்சீட்டு ;
(இ) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அதேபோன்று பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியுமான வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடி மறைக்காது பரீட்சை மண்டபத்திற்கு வருகை தருதல் வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதனை நிராகரிக்கும் விண்ணப்பத்தாரிகளை பரீட்சை மண்டபத்தில் அனுமதிக்கப்படமாட்டாது. மேலும், பரீட்சை மண்டபத்திற்கு சமூகமளித்த நேரம் தொடக்கம் பரீட்சை முடிவடைந்து வெளியில் செல்கின்ற வரை, பரீட்சை மண்டப அதிகாரிகளுக்கு விண்ணப்பத்தாரியை அடையாளம் காணக் கூடியவாறு முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடி மறைக்காது இருத்தல் வேண்டும்.

10. **பொய்யான தகவல்களை வழங்குதலுக்கான தண்டனை.-** பரீட்சை நடாத்தல் மற்றும் பெறுபேறுகள் வழங்குதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். அந்த சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுதல் வேண்டும். பரீட்சார்த்தியொருவருக்கு தகைமைகள் இல்லையென அறிய வருமாயின், பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னர் அல்லது பரீட்சை நடக்கும் காலத்தில் அல்லது பரிட்சைக்கு பின்னர் எந்தவொரு வேளையிலும் அவரது பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியொருவர் சமர்ப்பித்துள்ள எந்தவொரு தகவலும் அது தவறானதென தெரிந்துகொண்டே அவரால் வழங்கப்பட்டுள்ளதென உறுதிப்படுத்தப்படுமாயின் அல்லது ஏதேனும் முக்கிய தகவலை வேண்டுமென மறைக்கப்பட்டுள்ளதென அறியவருமாயின் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

11. இந்த ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கமைவாக தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலை மற்றும் கிராமிய கலைநுட்ப மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளரால் தீர்மானிக்கப்படும்.

12. **பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழிமூலம்.-** பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் நடாத்தப்படும்.

13. **தெரிவு செய்யும் முறை.-** பின்வரும் பாடவிதானங்களை கொண்டமைந்த எழுத்திலான பரீட்சையால் இப்பரீட்சை நடாத்தப்படும். எழுத்திலான பரீட்சையில் எல்லா வினாக்களுக்கும் தோற்றிய விண்ணப்பத்தாரிகளிடையே தகைமைகளை பெறும் விண்ணப்பத்தாரிகளை பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

| வினாத்தாளின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| 1. தொல்பொருளியல் | 1. ஆய்வு மற்றும் அகழ்வாராய்ச்சிகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட (பௌதீக காரணிகள்) தொல்பொருளியல் கற்கைகள் ஊடாக இலங்கையில் கடந்த காலத்தை கட்டியெழுப்புவதற்கான விடயங்கள்<br>2. ஆய்வுகள் மற்றும் அகழ்வாராய்ச்சிகளில் காணப்படும் கலைப்பொருட்களை பாதுகாத்து பராமரித்தல் (பேணுதல்) மற்றும் அது தொடர்பாக பொது மக்களை அறிவுறுத்தல் தொடர்பான விடயங்கள் |
| 2. இலங்கை வரலாறு | 1. எழுத்திலான சான்றுகள், தொடர் வரலாறு, மற்றும் கல்வெட்டுகளிலான தகவல்கள் என்பவற்றை கற்பதன் மூலம் கடந்த காலத்தை கட்டியெழுப்புவதற்கு ஏற்புடையதான தகவல்கள் |

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியாகும் இவ்வறிவித்தலில் மொழி வசனங்களுக்கிடையில் ஏதேனும் பொருத்தமின்மை அல்லது இணக்கமின்மை காணப்படுமாயின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான அறிவிப்பு பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

டாக்டர் செனரத் திசாநாயக்க,
தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகம்.

தொல்பொருளியல் திணைக்களம்.
கொழும்பு 07,
2020, திசெம்பர் 02.

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்காக)

மாதிரி விண்ணப்பப் படிவம்

**தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலை மற்றும் கிராமிய கலைநுட்ப மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின்கீழ் உள்ள தொல்பொருளியல் திணைக்களத்திற்காக வெளிக்கள/ அலுவலக அலுவலர்கள் பிரிவு 2 சேவை தொகுதியில் (MN-05-2016) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2020/ 2021**

**Limited Competitive Examination for Recruitment to the Posts in Field/ Office based – Segment 2 (MN-05-2016) of the Department of Archaeology under the State Ministry of National Heritage, Performing Arts and Rural Arts Promotion- 2020/ 2021**

| |
|---|
| 1. |
| 2. |
| 3. |
| 4. |

(விண்ணப்பிக்கும் பதவி/ பதவிகள்)

☐

(விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை இங்கு குறிப்பிடவும்)
(சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4)

1.0 1.1 முழுப் பெயர் : .........................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்து)

1.2 முழுப் பெயர் (திரு./ திருமதி/ செல்வி)..................
(சிங்களம்/ தமிழ்)

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் : ..................
(சிங்களம்/ தமிழ)

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./ திருமதி/ செல்வி) : ................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்து)

2.0 2.1 நிரந்தர முகவரி : ..........
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்து)

2.2 நிரந்தர முகவரி : ............
(சிங்களம்/ தமிழ்)

3.0 3.1 பால் பெண்/ ஆண் : ☐ ஆண் - 0 பெண் - 1

3.2 பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 2020....... ஆந் திகதியில் வயது : ஆண்டுகள் ☐☐ மாதம் ☐☐ திகதி

4.0 தேசிய அடையாள அட்டையின் இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

5.0 தொலைபேசி இலக்கம் : நிலையான ☐☐☐☐☐☐☐☐☐☐

கைபேசி ☐☐☐☐☐☐☐☐☐☐

6.0 **கல்வித் தகைமைகள் :**

6.1 **பட்டப்படிப்பு தகைமைகள் :**

| பல்கலைக்கழகம் | கற்றுள்ள பட்டப்படிப்பு பாடநெறிகள் | செல்லுபடியான திகதி | சித்தி |
|---|---|---|---|
| | | | |

6.2 **ஏனைய கல்வித் தகைமைகள் :**

| பல்கலைக்கழகம்/ நிறுவனம் | கற்றுள்ள பட்டப்படிப்பு பாடநெறிகள் | செல்லுபடியான திகதி | சித்தி |
|---|---|---|---|
| | | | |

7.0 **சேவை அனுபவம் :**

| பதவி | சேவைக்காலம் |
|---|---|
| | |

8.0 **தற்போது வகிக்கும் பதவி தொடர்பான விபரங்கள் :**

8.1 தற்போதைய சேவை நிலையம்

8.2 தற்போது வகிக்கும் பதவி மற்றும் தரம்

8.3 பதவிக்கு நியமனம் பெற்ற திகதி

8.4 திணைக்களத்தின் முழுச் சேவைக் காலம்

8.5 பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்ட திகதி

9.0 நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? (உரிய கூட்டினுள் (√ ) புள்ளி இடவும்.) (ஆமெனில் விபரங்களை குறிப்பிடவும்)

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

பிரிக்கப்படாதபடி தேர்வுக் கட்டணம் செலுத்துவதற்காக வழங்கப்பட்ட ரசீது விளிம்பை இணைக்கவும்.

10.0 **விண்ணப்பத்தாரியின் சான்றிதழ் :**

இந்த விண்ணப்ப படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும், எல்லா பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதெனவும், என்னால் தரப்பட்டுள்ள கூற்று பொய்யானதென உறுதிப்படுத்தப்பட்டால், நியமனம் செய்வதற்கு முன்னர் தகைமையற்றவரெனவும், நியமனம் பெற்றதன் பின்னர் பணி நீக்கம் செய்வதற்கு உட்படுவேன் எனவும், எல்லா சட்டதிட்டங்களுக்கும் நான் இணங்குகின்றேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை நடாத்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு உட்படுவேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

...............................................

விண்ணப்பத்தாரியன் ஒப்பம்.

திகதி : .............................

*11.0* **விண்ணப்பத்தாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தல் :**

இவ் விண்ணப்ப படிவத்தை சமர்ப்பிக்கும் திரு/ திருமதி/ செல்வி ................................................... என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும், அவர் .............. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பம் வைத்தார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................................................,
கையொப்பம் உறுதிப்படுத்தும் அலுவலரின் ஒப்பம்.

திகதி : ....................................................
உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் : ............................................
பதவி :.......................................................................................
முகவரி .....................................................................................
(பதவி முத்திரையைக் கொண்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.)

*12.0* **பிரிவுக்கு பொறுப்பான பணிப்பாளர்/ உதவி பணிப்பாளர்/ பிராந்திய உதவி பணிப்பாளரின் பரிந்துரை :**

இவ் விண்ணப்ப படிவத்தை சமர்ப்பிக்கும் திரு/ திருமதி/ செல்வி ............................................................ என்பவர் எனது பிரிவில்/ அலுவலகத்தில் .................. ஆந் திகதி தொடக்கம் .................... பதவியில் பணியாற்றுகின்றார் எனவும், அவரது வேலை மற்றும் வருகை திருப்திகரமானதெனவும், அவருக்கு எதிராக எதுவித குற்றச்சாட்டுகள் இல்லையெனவும், அவரால் வழங்கியுள்ள தகவல்கள் சரியானதெனவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதெனவும், அந்தப் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

பிரிவுக்கு பொறுப்பான பணிப்பாளர்/ உதவி பணிப்பாளர்
அல்லது பிராந்திய உதவி பணிப்பாளரின் ஒப்பம்.
(பதவி முத்திரை கொண்டு உறுதிப்படுத்தவும்.)

திகதி : ....................................................

*12-332/ 1*

---

## தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலை மற்றும் கிராமிய கலைநுட்ப மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின்கீழ் உள்ள தொல்பொருளியல் திணைக்களத்திற்காக வெளிக்கள, அலுவலக அலுவலர்கள் பிரிவு 2 சேவை தொகுதியில் (MN-05-2016) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை 2020/ 2021

தொல்பொருளியல் திணைக்களத்திற்கு வெளிக்கள/ அலுவலக அலுவலர்கள் - பிரிவு 2 (MN-05-2016) சேவை தொகுதிக்கு ஏற்புடையதாக பின்வரும் பதவிகளின் பொருட்டு தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உரிய வெற்றிப் பதவிகள் பின் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், பின்வரும் படிவப்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2021.01.13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு கிடைக்ககூடியவாறு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். இந்தப் பரீட்சை 2021 பங்குனி மாதம் கொழும்பு நகரத்தில் நடாத்தப்படும். இந்தப் பரீட்சை ஒத்தி வைப்பதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதிக்கமைவாக தொல்பொருளியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| 1. | பிராந்திய ஆராய்ச்சியாளர் | - | 02 |
| 2. | பிராந்திய அகழ்வாராய்ச்சி மற்றும் அருங்காட்சியக அலுவலர் | - | 02 |
| 3. | பிராந்திய காப்பாளர் | - | 03 |
| 4. | பிராந்திய பராமரிப்பு முகாமையாளர் | - | 02 |

1. **ஆட்சேர்ப்பு முறை.**- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பத்தாரிகளிடையே எழுத்திலான பரீட்சை சித்தியடைந்தும், தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதுமான பரீட்சார்த்திகளது புள்ளிகளின் திறமையின் ஒழுங்குமுறைப்படி மற்றும் கோரப்பட்டுள்ள பதவிகளின் ஒழுங்குமுறையின் அடிப்படையில் ஒவ்வொரு பதவியிலும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையினரை பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, கல்வித் தகைமைகள் மற்றும் உடற் தகைமைகள் என்பன உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

2. **எழுத்திலான பரீட்சை**.- இப்பரீட்சை பின்வரும் வினாப்பத்திரங்களைக் கொண்டமைந்துள்ளன :

I. தொல்பொருளியல்
II. இலங்கையின் வரலாறு

**பொதுவான நேர்முகப் பரீட்சை**.- எழுத்திலான எல்லா வினாத்தாள்களுக்கும் விண்ணப்பத்தாரிகள் தோற்றுதல் வேண்டும். சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் 40% ஆன ஆகக் குறைந்த புள்ளிகளை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளை புள்ளிகளின் திறமையின் ஒழுங்குமுறை அடிப்படையில் மற்றும் கோரப்பட்டுள்ள பதவிகளின் ஒழுங்குமுறையின் அடிப்படையில் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், இந்த நேர்முகப் பரீட்சையில் கல்வித் தகைமைகள் மற்றும் உடற் தகைமைகளை உறுதிப்படுத்திக்கொள்ளப்படும். அதற்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

3. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதியம் தொடர்பாக அரசாங்கத்தால் எதிர்காலத்தில் மேற்கொள்கின்ற கொள்கையுடனான தீர்மானங்களுக்கு நீங்கள் உடன்படுதல் வேண்டும். அரசாங்க சேவையின் நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், 2016.09.01 ஆந் திகதியில் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொல்பொருளியல் திணைக்களத்தின் வெளிக்கள/ அலுவலக அலுவலர்கள் - பிரிவு 2 சேவைத் தொகுதியில் (MN-05-2016) பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு ஏற்புடையதான எல்லா நிபந்தனைகளுக்கும், பின்னர் 2019.07.04 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட திருத்தங்களுக்கும், அந்த ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு மேற்கொண்டுள்ள அல்லது இதன் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் அமைவாக தெரிவு செய்கின்ற பரீட்சார்த்தியொருவர் தொல்பொருளியல் திணைக்களத்தின் வெளிக்கள/ அலுவலக அலுவலர்கள் - பிரிவு 2 சேவை தொகுதியில் தரம் 11 இன் பதவிக்கு நியமனம் செய்யப்படுவார்.

3.1 தம்மிடம் வழங்கப்பட்ட பதவியில் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கப்படாவிடின் மற்றும்/ அல்லது நியமனம் செய்யப்பட்ட கடைமைகளில் அல்லது நியமனம் செய்யப்பட்ட பிரதேசத்தில் கடைமைகள் பொறுப்பேற்பதனை நிராகரிக்கும் அல்லது உதாசீனப்படுத்தும் விண்ணப்பதாரிகளின் நியமனங்களை இரத்துச் செய்யப்படலாம்.

4. **மாதச் சம்பள அளவுத்திட்டம்**.- 2016.02.25 ஆந் திகதிய 03/ 2016 ஆந் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையில் அட்டவணை 1 இன்படி இந்த பதவிக்கு ஏற்புடையதான மாதச் சம்பள அளவுத் திட்டம் ரூபா 34,605 - 10 x 660 - 11 x 755 - 15 x 930 - 63,460/- (MN-05-2016) ஆகும். அந்தச் சுற்றறிக்கையில் ஏற்பாடுகளுக்கு அமைவாக அதன் அட்டவணை 11 இன்படி தங்களுக்கு சம்பளம் செலுத்தப்படும்.

(நியமனத் திகதி தொடக்கம் 03 ஆண்டு காலப் பகுதிக்குள் 1 ஆவது வினைத்திறன்காண் தடை பரீட்சையும், வகுப்பு 1 இல் நியமனத் திகதி தொடக்கம் 05 ஆண்டு காலப் பகுதிக்குள் 02 ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையும் சித்தியடைதல் வேண்டும். நியமனம் பெற்று 05 ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் 2007.05.28 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 07/ 2007 இன்படி உரிய மட்டத்திலான அரச கரும மொழித் தேர்ச்சியினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.)

5. **ஆரோக்கியம்**.- பரீட்சார்த்தி நாட்டில் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு முடியுமான வகையில் சிறந்த உடல் உள ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.

6. **தகைமைகள்**.- இதற்காக தோற்றும் பரீட்சார்த்தியொருவர்,

(I) இலங்கை பிரசையாதல் வேண்டும் ;
(II) விண்ணப்பத்தாரர் நல்லொழுக்கத்துடன் இருத்தல் வேண்டும் ;
(III) 2021.01.13 ஆந் திகதியில் 21 வயதுக்கு குறையாதும் 35 வயதுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும். (அதன்படி 2000.01.13 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1986.01.13 ஆந் திகதியில் அல்லது அதற்கு பின்னர் பிறந்த திகதி உள்ளவர்களுக்கு மட்டும் இதன் பொருட்டு விண்ணப்பிக்கலாம்.

(அ) **பிராந்திய ஆராய்ச்சியாளர், பிராந்திய அகழ்வாராய்ச்சி மற்றும் அருங்காட்சியக பதவிகளுக்காக**

- கல்வித் தகைமைகளாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும்,

(I) தொல்பொருளியல் தொடர்பான விசேட (நான்காண்டிலான) பட்டம்

அல்லது

(II) தொல்பொருளியல் பாடத்துடன் கூடிய பட்டப் படிப்புடன் தொல்பொருளியல் தொடர்பான பட்டப் பின்படிப்பு டிப்ளோமா

அல்லது

(III) தொல்பொருளியலை பாடமாகக் கொண்டு பட்டப்படிப்புடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றால் வழங்கப்படும் ஓராண்டு தொல்பொருளியல் பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவிற்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட கல்வித் தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) **பிராந்திய காப்பாளர் பதவிக்காக**

- கல்வித் தகைமைகளாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வழங்கப்படும் கட்டிடக்கலை பாதுகாப்பு தொடர்பான பட்டம் பெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

இலங்கை கட்டிடக்கலைஞர் நிறுவனத்தின் பூரண உறுப்பினர் உரிமை பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) **பிராந்திய பராமரிப்பு முகாமையாளர் பதவிக்காக**

- கல்வித் தகைமைகளாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் சிவில் பொறியியலாளர்/ கட்டுமான அமைப்பு/ கட்டிடக்கலை தொடர்பான பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

(I) பட்டம் வலுவிலிருக்கும் திகதி 2021.01.13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரான திகதியாதல் வேண்டும்.

(II) இப் பரீட்சையில் விண்ணப்பம் செய்வதற்கு தேவையான தகைமைகளை 2021.01.13 ஆந் திகதியில் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7. **விண்ணப்பம் செய்யும் முறை :**

(அ) விண்ணப்ப படிவங்கள் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதனை 8 1/2" x 12" (A 4) அளவிலான கடுதாசி தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படுதல் வேண்டும். 1.0 தொடக்கம் 5.0 வரையிலான தலைப்புகளை விண்ணப்ப படிவத்தில் முதலாவது பக்கத்திலும், 6.0 தொடக்கம் 9.0 வரை அதன் இரண்டாவது பக்கத்திலும் அமையும் வகையில் தமது விண்ணப்பங்களை தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதை விசேடமாக கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். விண்ணப்ப படிவங்களில் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழி விண்ணப்ப படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழி விண்ணப்ப படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கல மொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு ஒழுங்கமையாத விண்ணப்பங்கள் மற்றும் உரியவாறு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் நிழற்பட பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப படிவத்திற்கு ஒழுங்கமைவானதா என்பது தொடர்பாக பரீட்சார்த்தியால் பரீட்சித்தல் வேண்டும். இல்லாவிடின் விண்ணப்ப படிவம் நிராகரிக்கப்படலாம்.

தங்களது வசதி கருதி சரியாக தயாரிக்கப்பட்ட பரீட்சை விண்ணப்ப படிவம் தொல்பொருளியல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணைய தளத்தில் (www.archaeology.gov.lk) தரவிறக்கம் செய்யலாம்.

(ஆ) விண்ணப்ப படிவங்களை பரீட்சார்த்தி பரீட்சையில் தோற்றுகின்ற மொழிமூலத்திலேயே பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

(இ) விண்ணப்ப படிவத்துடன் எந்தவொரு சான்றிதழின் பிரதியினையும் இணைத்து அனுப்புதல் அவசியமற்றதாகும்.

(ஈ) பரீட்சைக்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பதிவு தபால்மூலம் 2021.01.13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்ககூடியவாறு பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (தாபன மற்றும் வெளிநாட்டு பரீட்சை) கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், த.பெ. இலக்கம் 1503, கொழும்பு, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக "தொல்பொருளியல் திணைக்களத்தின் வெளிக்கள/ அலுவலக அலுவலர்கள் - பிரிவு 2 (MN-05-2016) சேவை தொகுதியில் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யும்

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2020/2021" என்று குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(உ) விண்ணப்ப படிவத்தில் விண்ணப்பத்தாரரின் கையொப்பம் அரசாங்க கல்லூரி ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்திபெற்ற நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம்பெற்ற அலுவலரொருவர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள பதவியை வகிக்கும் அலுவலரொருவர் அல்லது அரசாங்கத்தில் நிரந்தர பதவி வகிக்கும் பதவிநிலை தரத்திலான அலுவலரொருவர் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி, அல்லது நாயக்க தேரர் ஒருவர், ஏனைய சமய இடங்களுக்கு பொறுப்பான அல்லது மதகுருமார்களில் கவனிக்கத்தக்க அந்தஸ்தினை வகிக்கும் மதகுருமார்களால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஊ) எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்ப படிவங்களை இரத்துச் செய்யப்படும். அஞ்சலில் காணாமல் போகும் விண்ணப்ப படிவங்கள் தொடர்பில் அல்லது தாமதமாதல் தொடர்பான எந்தவொரு முறைப்பாடும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

**8. பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழிமூலம் :**

பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் நடாத்தப்படும்.

**குறிப்பு :**

I. பரீட்சார்த்தியொருவர் பரீட்சையில் தோற்றுகின்ற எல்லா வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடை அளித்தல் வேண்டும்.

II. தமது விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தை மாற்றுவதற்கு பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்படமாட்டாது.

**9. பரீட்சைக் கட்டணம் :**

இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரியொருவர் ரூபா 1,200/- ஆன பரீட்சை கட்டணமொன்றை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன்கீழ் அரசாங்க வருமானத்தில் வரவு வைக்கும் வகையில் நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகம்/ மாவட்ட/ பிரதேச செயலகத்திடம் பணம் செலுத்தப்பட்டு விண்ணப்பத்தாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டினை, அதன் ஒரு விளிம்பினைக்கொண்டு விண்ணப்ப படிவத்தில் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டிவிடுதல் வேண்டும். அந்த பற்றுச்சீட்டின் நிழற்பட பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பரீட்சை கட்டணத்திற்காக காசுக் கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா-தென்பதுடன், பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணத்தை வேறு எந்தவொரு காரணத்திற்காகவும் மீள செலுத்துவதற்கோ வேறு பரீட்சைகளுக்கு மாற்றுவதற்கோ இடமளிக்கப்படமாட்டாது.

**10. தெரிவு செய்யும் முறை :**

பின்வரும் பாடவிதானங்களை கொண்டமைந்த எழுத்திலான பரீட்சையால் இப் பரீட்சை நடாத்தப்படும். எழுத்திலான பரீட்சையில் எல்லா வினாக்களுக்கும் தோற்றிய விண்ணப்பத்தாரிகளிடையே தகைமைகளை பெறும் விண்ணப்பத்தாரிகளை பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்.

| வினாத்தாளின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| 1. தொல்பொருளியல் | 1. ஆய்வு மற்றும் அகழ்வாராய்ச்சிகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட (பௌதீக காரணிகள்) தொல்பொருளியல் கற்கைகள் ஊடாக இலங்கையில் கடந்த காலத்தை கட்டியெழுப்புவதற்கான விடயங்கள்<br>2. ஆய்வுகள் மற்றும் அகழ்வாராய்ச்சிகளில் காணப்படும் கலைப்பொருட்களை பாதுகாத்து பராமரித்தல் (பேணுதல்) மற்றும் அது தொடர்பாக பொது மக்களை அறிவுறுத்தல் தொடர்பான விடயங்கள் |
| 2. இலங்கை வரலாறு | 1. எழுத்திலான சான்றுகள், தொடர் வரலாறு மற்றும் கல்வெட்டுகளிலான தகவல்கள் என்பவற்றை கற்பதன் மூலம் கடந்த காலத்தை கட்டியெழுப்புவதற்கு ஏற்புடையதான தகவல்கள் |

11. வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பம் செய்திருப்பார்கள் என்ற பூர்வாங்க முடிவின்மீது அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சை கட்டணத்தை செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பத்தாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை அனுப்பி வைத்தவுடன் அது தொடர்பாக குறிப்பிடப்பட்டு பத்திரிகை அறிவிப்பொன்றை இலங்கை பரீட்சை திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி

02 அல்லது 03 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காத பரீட்சார்த்திகள் இருப்பாராயின் அது தொடர்பாக இலங்கை பரீட்சை திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு (தாபன மற்றும் வெளிநாட்டு பரீட்சை) கிளையுடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு செய்கையில் விண்ணப்பத்தாரி தாம் விண்ணப்பம் செய்த பரீட்சையின் பெயர், விண்ணப்பத்தாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டையின் இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பத்தாரி கொழும்பிற்கு வெளியக பிரதேசத்தை வதிவிடமாக கொண்டிருப்பின், அந்த விபரங்களுடன், தொலைநகல்மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியினை விரைவாக பெற்றுக்கொள்வதற்கு முடியுமான வகையில், விண்ணப்பத்தாரியின் தொலைநகல் இலக்கம் குறிப்பிடப்பட்ட வேண்டுகோள் கடிதமொன்றை, அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வைத்த பின்னர் அது தொடர்பாக உசாவுதல் மிக பனுள்ளதாகும். அவ்வாறு செய்கையில் பரீட்சை திணைக்களத்தால் உசாவும் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக தம் வசம் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்ப படிவத்தின் பிரதி, பரீட்சை கட்டணம் செலுத்திய பின்னர் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி/பரீட்சைக் கட்டணம் செலுத்தல் ஏற்புடையதாயின் அதற்கு ஏற்புடையதான பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பம் அஞ்சலில் பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டை தயாராக வைத்திருத்தலும் பயனுள்ளதாகும். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதலானது அவர் பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என்பதை ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்பட மாட்டாது. அனுமதி அட்டையின்றி பரீட்சை மண்டபத்திற்கு நுழைவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் திகதியில் பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் தனது ஒப்பத்தை உறுதிப்படுத்திக்கொண்ட அனுமதி அட்டை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

12. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்** :

பரீட்சார்த்தியொருவர் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான வெளிநாட்டு கடவுச்சீட்டு ;
(இ) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அதேபோன்று பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியுமான வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடி மறைக்காது பரீட்சை மண்டபத்திற்கு வருகை தருதல் வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதனை நிராகரிக்கும் விண்ணப்பத்தாரிகளை பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டாது. மேலும், பரீட்சை மண்டபத்திற்கு சமூகமளித்த நேரம் தொடக்கம் பரீட்சை முடிவடைந்து வெளியில் செல்கின்ற வரை, பரீட்சை மண்டப அதிகாரிகளுக்கு விண்ணப்பத்தாரியை அடையாளம் காணக் கூடியவாறு முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடி மறைக்காது இருத்தல் வேண்டும்.

13. **பொய்யான தகவல்களை வழங்குதலுக்கான தண்டனை** :

பரீட்சை நடாத்தல் மற்றும் பெறுபேறுகள் வழங்குதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். அந்த சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுதல் வேண்டும். பரீட்சார்த்தியொருவருக்கு தகைமைகள் இல்லையென அறிய வருமாயின், பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னர் அல்லது பரீட்சை நடக்கும் காலத்தில் அல்லது பரீட்சைக்கு பின்னர் எந்தவொரு வேளையிலும் அவரது பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியொருவர் சமர்ப்பித்துள்ள எந்தவொரு தகவலும் அது தவறானதென தெரிந்துகொண்டே அவரால் வழங்கப்பட்டுள்ளதென உறுதிப்படுத்தப்படுமாயின் அல்லது ஏதேனும் முக்கிய தகவலை வேண்டுமென மறைக்கப்பட்டுள்ளதென அறியவருமாயின் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

14. இந்த ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கமைவாக தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலை மற்றும் கிராமிய கலைநுட்ப மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளரால் தீர்மானிக்கப்படும்.

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியாகும் இவ்வறிவித்தலில் மொழி வசனங்களுக்கிடையில் ஏதேனும் பொருத்தமின்மை அல்லது இணக்கமின்மை காணப்படுமாயின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான அறிவிப்பு பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

டாக்டர் செனரத் திசாநாயக்க,
தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகம்.

தொல்பொருளியல் திணைக்களம்.
கொழும்பு 07,
2020, திசெம்பர் 02.

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்காக)

மாதிரி விண்ணப்பப் படிவம்

**தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலை மற்றும் கிராமிய கலைநுட்ப மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின்கீழ் உள்ள தொல்பொருளியல் திணைக்களத்திற்காக வெளிக்கள/ அலுவலக அலுவலர்கள் பிரிவு 2 சேவை தொகுதியில் (MN-05-2016) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை - 2020/ 2021**

**Open Competitive Examination for Recruitment to the Posts in Field/ Office based – Segment 2 (MN-05-2016) of the Department of Archaeology under the State Ministry of National Heritage, Performing Arts and Rural Arts Promotion- 2020/ 2021**

| |
|---|
| 1. |
| 2. |
| 3. |
| 4. |

(விண்ணப்பிக்கும் பதவி/ பதவிகள்)

☐
(விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை இங்கு குறிப்பிடவும்)
(சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4)

1.0 1.1 முழுப் பெயர் : ..............................................................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்து)

1.2 முழுப் பெயர் (திரு./ திருமதி/ செல்வி) ........................................................................
(சிங்களம்/ தமிழ்)

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் : ..................................................................................
(சிங்களம்/ தமிழ்)

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./ திருமதி/ செல்வி) : ........................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்து)

2.0 2.1 நிரந்தர முகவரி : ..............................................................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்து)

2.2 நிரந்தர முகவரி : ..............................................................................................................
(சிங்களம்/ தமிழ்)

3.0 3.1 பால் பெண்/ ஆண் : ☐ ஆண் - 0 பெண் - 1

3.2 பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 2020....... ஆந் திகதியில் வயது : வருடங்கள் ☐☐ மாதம் ☐☐ திகதி

4.0 தேசிய அடையாள அட்டையின் இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

5.0 தொலைபேசி இலக்கம் : நிலையான ☐☐☐☐☐☐☐☐☐☐

கைபேசி ☐☐☐☐☐☐☐☐☐☐

6.0 **கல்வித் தகைமைகள் :**

6.1 **பட்டப்படிப்பு தகைமைகள் :**

| பல்கலைக்கழகம் | கற்றுள்ள பட்டப்படிப்பு பாடநெறிகள் | செல்லுபடியான திகதி | சித்தி |
|---|---|---|---|
| | | | |

6.2 **ஏனைய கல்வித் தகைமைகள் :**

| பல்கலைக்கழகம்/ நிறுவனம் | கற்றுள்ள பட்டப்படிப்பு பாடநெறிகள் | செல்லுபடியான திகதி | சித்தி |
|---|---|---|---|
| | | | |

9.0 நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா?
(உரிய கூட்டினுள் (√ ) புள்ளி இடவும்.) (ஆமெனில் விபரங்களை குறிப்பிடவும்)

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

பிரிக்கப்படாதபடி தேர்வுக் கட்டணம் செலுத்துவதற்காக வழங்கப்பட்ட ரசீது விளிம்பை இணைக்கவும்.

10.0 **விண்ணப்பத்தாரியின் சான்றிதழ் :**

இந்த விண்ணப்ப படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும், எல்லா பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதெனவும், என்னால் தரப்பட்டுள்ள கூற்று பொய்யானதென உறுதிப்படுத்தப்பட்டால், நியமனம் செய்வதற்கு முன்னர் தகைமையற்றவரெனவும், நியமனம் பெற்றதன் பின்னர் பணி நீக்கம் செய்வதற்கு உட்படுவேன் எனவும், எல்லா சட்டதிட்டங்களுக்கும் நான் இணங்குகின்றேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை நடாத்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு உட்படுவேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

..............................................
விண்ணப்பத்தாரியன் ஒப்பம்.

திகதி : ............................

11.0 **விண்ணப்பத்தாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தல் :**

இவ் விண்ணப்ப படிவத்தை சமர்ப்பிக்கும் திரு/ திருமதி/ செல்வி ..................................................... என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும், அவர் .............. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பம் வைத்தார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.........................................................,
கையொப்பம் உறுதிப்படுத்தும் அலுவலரின் ஒப்பம்.

திகதி : ......................................................
உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் : ..............................................
பதவி :....................................................................................
முகவரி ...................................................................................
(பதவி முத்திரையைக் கொண்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.)

## சுகாதார அமைச்சு

### வரையறுக்கப்பட்ட அடிப்படையில் அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிஉயர் தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான போட்டி பரீட்சை - 2018 (2020)

வரையறுக்கப்பட்ட அடிப்படையில் அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உயர் தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான போட்டி பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2021 மார்ச் மாதம் கொழும்பில் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. அரச சேவையின் நியமனங்கள் தொடர்பாக நிர்வகிக்கப்படுகின்ற பொது நிபந்தனைகளதும், 2053/ 18 இலக்க 2018.01.09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவைகள் அரசியலமைப்பு சட்டத்தில் குறித்தொதுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளதும் அவ் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதும் அல்லது எதிர்காலத்தில் செய்யப்படுகின்ற அல்லது திருத்தங்களுக்கு உட்பட்ட 2020.10.31 ஆந் திகதிக்கு கணக்கெடுப்பு செய்யப்பட்ட அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிஉயர் தரத்திற்கான வெற்றிடங்களின் 35% வீதமான எண்ணிக்கையை தகுதியின் அடிப்படையில் தரமுயர்த்துவதனூடாக பூரணப்படுத்தப்படும்.

3. சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்குகின்ற வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களில் சேவையாற்றுகின்ற, பொது நிர்வாக சுற்றறிக்கை 03/ 2016 ஆம் இலக்க MN-02-2016 சம்பள குறியீட்டின் கீழ் சம்பளம் பெறுகின்ற மற்றும் அந்நியமனங்களில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள 2020.10.31 ஆந் திகதியில் இதன் 07 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உத்தியோகத்தர்கள் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதி பெறுகின்றார்கள்.

4. 2016.02.25 ஆந் திகதிய 03/ 2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் MN-07-2016 சம்பள பின்னம் இப்பதவிக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதுடன் அதற்குரிய மாதாந்த சம்பள அளவு 41,580/ -11x 755 – 18x 1030- 68,425/ - ஆகும். அச்சம்பளமானது தங்களுக்கு உரித்தாக்கப்படுவதானது 2020.01.01 ஆம் திகதி தொடக்கம் ஆகும். அச்சுற்றறிக்கையின் உப அட்டவணை II இன் ஏற்பாடுகளின் படி நியமனம் செயற்படுன்ற திகதியிலிருந்து சம்பளம் செலுத்தப்படும்.

5. **சேவை நிபந்தனைகள் :**

I. நியமனம் செய்யப்படுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் நியமனம் செயற்படுகின்ற திகதி பற்றி அங்கீகாரம் பெற்ற அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை அல்லது வெற்றிடங்கள் அனைத்தும் அல்லது பூரணப்படுத்தாமல் விடுவதற்கு நியமனம் செய்யும் அதிகாரிக்கு அதிகாரமுள்ளது.

II. அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உத்தியோகத்தர்களின் சாதாரண கடமை நேரம் வருடத்தின் அனைத்து தினங்களிலும் முற்பகல் 8.30 தொடக்கம் 4.15 வரை ஆகும். இருப்பினும் கடமை தேவைக்கெற்ப மற்றும் கடமை சுபாவத்திற்கிணங்க மேற்குறித்த நேரங்கள் வேறுபடலாம். மேலும் கடமை தேவைக்கேற்ப இரவு சேவையில் ஈடுபடுத்தப்படுமாதலால், கடமை சுபாவத்திறகிணங்க மேலதிக கடமைக்காகவும் உத்தரவிடப்படும். ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற உத்தியோகத்தர்கள் வருடத்தின் முன்னூற்றி அறுபத்தைந்து நாட்களிலும் (365) கடமையாற்ற பணிக்கப்படுவார்கள்.

III. சேவையின் தேவைக்கேற்ப சுகாதார நிறுவனங்கள் மற்றும் வைத்திசாலைகளில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு சனிக்கிழமை, ஞாயிறு மற்றும் அரச பொது விடுமுறை தினங்களில் கடமையாற்ற நியமிக்கப்படலாம். அக்கடமைகளுக்காக மேலதிக நேரக் கொடுப்பனவு அல்லது விடுமுறை தின வேதனம் அல்லது பதில் விடுமுறை (லீவ் லீவ்) பெற்றுக் கொள்ளலாம்.

IV. சுகாதார அமைச்சின் செயலாளரினால் பரிந்துரைக்கப்படுகின்ற கடமைகளை ஆற்றுகின்ற உத்தியோகத்தர்களால் ரூபா 5,000/- ற்கான பிணைத் தொகை வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

6. **மதிப்பீட்டு செயல்முறை :**

அதியுயர் தரத்தின் பதவி வெற்றிடங்களின் 35% விகித எண்ணிக்கையை திறமையின் அடிப்படையில் பூரணப்படுத்தப்படும். இதற்காக பொது சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவிற்காக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் அலுவலக முகாமைத்துவம், அலுவலக முறைமை, தாபன செயல்பாடுகள் மற்றும நடைமுறை விதிகள், அரச நிதி முகாமைத்துவம், பொது வினாத்தாள் - பகுதி I - பகுதி II பரீட்சைக்குத் தோற்றி ஆகக்குறைந்தது 40% விகித புள்ளிகளைப் பெற்று சித்தியடைதல் வேண்டும். அப்பெறுபேற்றின் அடிப்படையில் மற்றும் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவினால் நியமிக்கப்படுகின்ற சபையினால் சிரேஷ்டத்துவம் மற்றும் அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் புள்ளிகளின் வரிசைக் கிரமப்படி முன்னுரிமை தீர்மானிக்கப்படும். மேற்குறித்த பரீட்சைக்குத்

தோற்றி ஆகக்குறைந்தது 40% விகித புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் மாத்திரம் அச்சபையின் மூலம் புள்ளிகளை வழங்குவதற்காகத் தெரிவு செய்யப்படுவார்கள். சுகாதார சேவைகள் குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக்குழு முன் தோற்றி தகைமைகள் பரிசீலிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக்கும் அவ்விண்ணப்பதாரிகள் தோற்றுதல் வேண்டும். அத்துடன் அந்நேர்முகப் பரீட்சையின் போது அதற்குரிய புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

| வினாத்தாள் / புள்ளிகள் வழங்கப்படும் அளவுகோல்கள் | காலம் | மொத்த புள்ளிகள் |
|---|---|---|
| 1. அலுவலக முகாமைத்துவம் | 2 மணி | 100 |
| 2. அலுவலக முறைமை | 2 மணி | 100 |
| 3. தாபன செயல்பாடுகள் மற்றும் நடைமுறை விதிகள் | 2 மணி | 100 |
| 4. அரச நிதி முகாமைத்துவம் | 2 மணி | 100 |
| 5. பொது வினாத்தாள் - பகுதி I | 1 மணி | 50 |
| - பகுதி II | 1 மணி | 50 |

I. **அலுவலக முகாமைத்துவம்** - எழுத்துப் பரீட்சை (காலம் : 2 மணி 100 புள்ளிகள்).- நிறுவன கட்டமைப்பு, ஒழுங்கமைப்பு பற்றிய கொள்கை, பணி பகுப்பாய்வு மற்றும் பணி மதிப்பீடு, தலைமைத்துவம், மேற்பார்வை மற்றும் தீர்மானம் எடுக்கும் ஆற்றல், தொடர்பாற்றல், மக்கள் தொடர்பு, ஒருங்கிணைப்பு மற்றும் பிணக்குகளைத் தீர்த்தல்

II. **அலுவலக முறைமை** - எழுத்துப் பரீட்சை ( காலம் 2மணி 100 புள்ளிகள்).- அலுவலக முறைமை பற்றிய கொள்கை, அலுவலக நடைமுறை, ஆவணம் மற்றும் கோவையிடல், படிவக் கட்டுப்பாடு, அலுவலகத் திட்டம் மற்றும் சுற்றுப்புறங்கள், தொழில் விபரம், வேலைப் படிப்பு மற்றும் முறைமை படிப்பு, வேலை அளவீடு, அலுவலக செயற்பாட்டு கையேடு

III. **தாபன செயல்பாடுகள் மற்றும் நடைமுறை விதிகள்** - எழுத்துப் பரீட்சை (காலம் 2 மணி 100 புள்ளிகள்).- அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதில் பின்பற்றப்பட வேண்டிய செயல்முறைகள், அரச அலுவலர்களின் தாபன செயற்பாடுகள், தனி நபர் கோவையொன்றை பராமரித்தல், அரச சேவையாளரகளை நியமித்தல், இடமாற்றம் செய்தல், பதவி உயர்வு செய்தல் மற்றும் பதவியை முடிவுறச் செய்தல் ஆகிய செயற்பாடுகளின் அதிகாரங்களை பகிர்ந்தளித்தல், நலன்புரி செயற்பாடு, அரச உத்தியோகத்தர்களுக்கு உரித்தான சலுகைகள், தாபன நடைமுறை தொடர்பாக அரசாங்கத்தினால் விடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு முறைகள் மற்றும் சுற்றறிக்கை பற்றிய பொது அறிவாற்றல் பரிசீலிக்கப்படும்.

IV. **அரச நிதி முகாமைத்துவம்** - எழுத்துப் பரீட்சை (காலம் 2 மணி 100 புள்ளிகள்).- ஆண்டு மதிப்பீடுகள் மற்றும் கணக்கு வைக்கும் அதிகாரியின் பொறுப்பு, நிதிக் கட்டுப்பாடு, நிதிப் பொறுப்பை வழங்குதல், நிதி பொறுப்பேற்றல், கணக்கு வைத்தல் மற்றும் ரசீது வைத்தல், கொடுப்பனவு, அரச நிதி பொறுப்பு, வைப்புக் கணக்கு மற்றும் வங்கிக் கணக்கு, வழங்கல் மற்றும் சேவைகள், கொள்முதல் நடவடிக்கைகள், பொருட்கள் கணக்கெடுப்பு, கணக்காய்வு விசாரணைகள், அரச அலுவலகங்களின் பாவனை பற்றிய இதுவரையிலும் விடுக்கப்பட்டுள்ள சுற்றறிக்கை மற்றும் பிரமாணங்கள் பற்றிய பொது அறிவு பரிசீலிக்கப்படும்.

V. **பொது வினாத்தாள்** - பகுதி I - எழுத்துப் பரீட்சை (காலம் 1 மணி 50 புள்ளிகள்).- பொது நிர்வாகத்தின் தன்மை, பொது நிர்வாகக் கொள்கை, அரச கொள்கைகள் மற்றும் புதிய அரசின் மறுசீரமைப்பு, நிதி உரிமைகள், மனித உரிமைகள், மனித உரிமைகள் ஆணைக்குழு, ஓம்புட்ஸ்மன், பாராளுமன்ற பொது மனுக்கள் குழு, அலுவலக கலாசாரம், நெறிமுறைகள் மற்றும் மதிப்புகள், சீரான அலுவலக பொது சுற்றாடலை உருவாக்கல் மற்றும் சிவில் நடைமுறை பற்றிய சமூகவியலை அங்கீகரித்தல், சேவைநாடிகளுக்கு அரச உத்தியோகத்தர்களினால் ஆற்றப்படவேண்டிய கடமைகள்.

VI. **பொது வினாத்தாள்** - பகுதி II- எழுத்துப் பரீட்சை (காலம் 1 மணி 50 புள்ளிகள்).- சுகாதார மற்றும் ஆயர்வேத திணைக்களத்தின் நோக்கங்கள், வரி அமைச்சின் மற்றும் மாகாண சபைகளில் சுகாதார சேவைக் கொள்கை, சகாதார வளத்துறையின் ஆதாரத்தன்மை மற்றும் அதற்குறிய தாபனங்கள், நோயாளர் காப்புச் சேவையின் கொள்கைகளின் வளர்ச்சி, வைத்தியசாலையின் செயற்பாடுகள், உலர் உணவு பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கோரல், பெற்றுக் கொள்ளல் மற்றும் சமைத்த உணவுகளின் தரம் பற்றிய பரிசீலனை, ஔடத சத்திர சிகிச்சை மற்றும் சுகாதார உபகரணங்கள் வழங்கல் மற்றும் ஏனைய வழங்கள்கள், சுகாதார புள்ளி விபர முகாமைத்துவம், சுகாதார நிறுவனங்களில் தொடர்பாடல் செயற்பாடுகள் மற்றும் பொது தொடர்பாடல்கள், வைத்திய கட்டணம் மற்றும் தோட்ட பயிர்ச்செய்கை, வைத்தியசாலைகளில் விஷேட

அலகுகள் மற்றும் பரவலாக்கப்பட்ட விஷேட பணிகள், கட்டண வாட்டு முகாமைத்துவ நடவடிக்கை, தேசிய மற்றும் அவசர நிலைமைகளின் போது செயற்பட வேண்டிய விதம் பற்றிய அறிவை அளவிடும் வினாத்தாளாக அமையும்.

7. **தகைமைகள் :**

7.1 (அ) (i) சேவையின் I ஆம் தரத்தின் உத்தியோகத்தராக இருத்தல்

அல்லது

(ii) ஆகக்குறைந்தது (08) வருட தொடர்ச்சியானதும் திருப்திகரமான சேவைக்காலத்தினை பூர்த்தி செய்துள்ள, பூர்வாங்க சம்பள ஏற்றங்கள் ஐந்து (5) பெற்றுக் கொண்டுள்ள II ஆம் தர உத்தியோகத்தராயிருத்தல்.

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழக பட்டத்தை சித்தி பெற்ற, ஆகக்குறைந்தது (05) வருட தொடர்ச்சியானதும் திருப்திகரமான சேவைக்காலத்தினை பூர்த்தி செய்துள்ள, பூர்வாங்க சம்பள ஏற்றங்கள் ஐந்து (5) பெற்றுக் கொண்டுள்ள II ஆம் தர உத்தியோகத்தராயிருத்தல்.

7.2 **தேக ஆரோக்கியம் :**

அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கை தீவில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும்,பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் போதுமான தேக ஆரோக்கியம் மற்றும் மன உறுதியுடன் கொண்டிருத்தல் வேண்டும்.

7.3 **ஏனைய தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தையுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

(ii) குறித்த பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் 2020.10.31 ஆந் திகதியில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iii) 2020.10.31 ஆந் திகதியில் அண்மித்த 5 வருடங்களுள் எவ்விதமான ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் உட்படாதிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- இதில் வேண்டுமென்று பொய்யான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதென்பதனை கண்டறியக் கிடைத்தால் பொது சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவின் அறிவுறுத்தல்களுக்கமைய பரீட்சார்த்திகளுக்கும் மற்றும் அவ்விண்ணப்பத்தை உறுதிப்படுத்திய திணைக்கள தலைவர்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். தனிநபர் கோவையில் சான்றுபடுத்தப்படாத தகைமைகளுக்காக புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

8. **விண்ணப்பிக்கும் முறைமை :**

(அ) விண்ணப்பப் படிவத்தினை இச்சுற்றுநிருபத்தில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கமைய அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அது A4 அளவிலான கடதாசியில் இரு பக்கங்களையும் உபயோகப்படுத்தி பூரணப்படுத்தியிருக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 01 முதல் 7.10 வரை முதலாம் பக்கத்திலும், மிகுதி பாகங்களை மற்றைய பக்கத்திலும் உள்ளடங்குமாறு விண்ணப்பப்படிவத்தை தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அது பரீட்சைக்கு தோற்றவிருக்கின்ற ஊடக மொழியில் தமது கையெழுத்தில் பரீட்சார்த்தியினால் பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் மேல் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப்படுதல் வேண்டும். அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமையாத மற்றும் பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் முன் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படுமாதலால், விண்ணப்பப் படிவத்தை அனுப்புவதற்கு முன்னர் பரீட்சை அறிவித்தலில் குறித்த மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவானதாவெனவும் அனைத்து தகவல்களும் சரிவர சேர்க்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் என்பதனை பற்றியும் குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணம் செலுத்தி அதற்குரிய விபரங்கள் சேர்க்கப்பட்டு அதன் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது

பற்றியும் பரீட்சித்துப் பார்த்து, விண்ணப்பப்படிவங்கள் 2021.01.04 ஆந் திகதிக்கு முன்னராக நிறுவனத் தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டுமென்பதுடன், அனைத்து விண்ணப்பதாரர்களினாலும் முன் வைக்கப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதுமென அவரால் தனிப்பட்ட வகையில் உறுதி செய்யப்பட்டதன் பின்னர் அனைத்து விண்ணப்பப்படிவங்களும்,

"பணிப்பாளர் (நிர்வாகம்) 06,
சுகாதார அமைச்சு,
த. பெ. 385,
வண. பத்தேகம விமலவங்ஷ தேரர் மாவத்தை,
கொழும்பு 10".

எனும் முகவரிக்கு பதிவுத் தபாலினூடாக 2021.01.18 ஆந் திகதிக்கு முன்னராக அனுப்பப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வரையறுக்கப்பட்ட அடிப்படையில் அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிஉயர் தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான போட்டி பரீட்சை - 2018 (2020) பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம்" என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**கவனிக்க.-** தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதலெழுத்துக்களுடனான பெயருக்கு மாத்திரம் வழங்கப்படுமாதலால் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள மாதிரியை பின்பற்றி தமது பெயரை சரிவர குறிப்பிடுதல் வேண்டும். நியமனங்கள் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பெயரில் திருத்தங்களை செய்வதற்கோ அல்லது ஏதேனும் பகுதிகளை இணைப்பதற்கு / அகற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதியொன்றையும் பரீட்சைக் கட்டணம் செலுத்தி பெறப்பட்ட நிழற் பிரதியொன்றையும் தம் வசம் வைத்துக் கொள்வது பிரயோசனப்படும்.

(ஆ) பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற இறுதித் திகதியில் விண்ணப்பதாரிகள் வகித்த பதவிகள் மற்றும் சேவையாற்றிய இடங்கள், பரீட்சை சம்பந்தபட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் தொடர்புபடுமாதலால், விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் ஏற்படுகின்ற மாற்றங்கள் எதையும் பற்றி கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

(இ) இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஊடக மொழிகளில் நடாத்தப்படும். தேர்வுநாடிகளுக்கு தமது விருப்பத்தின் பிரகாரம் இவ்வூடக மொழிகளில் ஒரு ஊடக மொழியினை மாத்திரம் தெரிவு செய்து பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட ஊடக மொழியினை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(ஈ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் அனைத்தையும் தான் பூர்த்தி செய்துள்ளமை பற்றி விண்ணப்பப்படிவத்தினை அனுப்பி வைக்கப்படுவதற்கு முன்னராக குறித்த விண்ணப்பதாரி திருப்பி அடைந்திருத்தல் வேண்டும். இவ்வறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிராத பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சையில் போதுமான புள்ளிகளைப் பெற்றிருந்தாலும் நியமனம் பெறுவதற்கு தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

(உ) நியமனத்திற்காக தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரியை விடுவிப்பது தொடர்பாக திணைக்களத் தலைவரின் உடன்பாடு இருத்தல் வேண்டும்.

(எ) நேர்முகப்பரீட்சைக்காக அழைப்பு விடுக்கப்பட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் விண்ணப்பதாரிகளது தகைமைகள் பரீட்சிக்கப்படும் போது தேவையான அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருக்கவில்லையென அறியப்படும் சந்தர்ப்பத்தில் அவர்களுடைய தேர்வு இரத்துச் செய்யப்படும்.

9. **பரீட்சைக் கட்டணம் :**

(i) பரீட்சை கட்டணம் ரூபா. 600/ - ஆகும். அப்பரீட்சை கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமான தலைப்பு 20-03-02-13 கீழ் அரச வருமானத்திற்கு வைப்புச் செய்யப்படும் வகையில் நாட்டின் எந்தவொரு அஞ்சற் காரியாலயத்தில்/ மாவட்ட/ பிரதேச செயலகங்களில் பணத்தைச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை, அதன் ஒரு மேல் விளிம்பில் விண்ணப்பப்படிவத்தின் குறித்த இடத்தில் கழறாதவாறு ஒட்டப்படுதல் வேண்டும். இப்பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக வேறெந்த கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது. பரீட்சை கட்டணத்திற்காக பணம் அல்லது முத்திரைகள்

ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாதென்பதையும் பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எந்தக் காரணம் கொண்டும் மீளளிப்பு செய்யவோ வேறு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது. அதேபோல் பற்றுசீட்டின் நிழற்பிரதியொன்றினை தம்மிடம் வைத்துக் கொள்வது உபயோகப்படும்.

(ii) விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியோ அல்லது அத்திகதிக்கு முன்னராக குறித்த பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைத்த விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அது பற்றி குறிப்பிடப்பட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அவ்வறிவித்தல் பிரசுரமாகி 02 அல்லது 03 தினங்கள் கடந்தும் தமது அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அது பற்றி இலங்கை பரீட்சை திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளையுடன் தொடர்பு கொண்டு விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரிவர குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரியொருவர் கொழும்பை தவிர்ந்த பிரதேசத்தில் வசிப்பவரானால், அவ்விபரங்களுடன், தொலை நகல் (Fax) ஊடாக பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றினை துரிதமாக பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பதாரியின் தொலை நகல் இலக்கத்தையும் (Fax Number) குறிப்பிட்டு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்துடன் (Fax Number) தொடர்பு கொண்டு விசாரித்தறிதல் வேண்டும். அவ்வாறு விசாரித்தலின் போது பரீட்சை திணைக்களத்தினால் கேட்கப்படுகின்ற ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக தம் வசம் வைத்திருக்கின்ற விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சை கட்டணம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டின் நிழற் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் அஞ்சலிடும் போது பதிவு செய்யப்பட்ட ரசீது என்பனவற்றை தயார்படுத்தி வைத்துக்கொள்வது பிரயோசனமாகவிருக்கும்.

10. **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

(i) விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டதன் பின்னர் எவரேனும் விண்ணப்பதாரியொருவருக்கு அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிடின், பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியையும் பரீட்சைக் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் நிழற்பிரதியில் குறித்துக் கொண்டு அதுபற்றி பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்படல் வேண்டும். (கொழும்பைத் தவிர்ந்த விண்ணப்பதாரியானால் அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்பட வேண்டிய தொலைநகல் (FAX) இலக்கத்துடன் மேற்குறித்த விபரங்களுடன் முன்வைத்தல் வேண்டும்.)

(ii) விண்ணப்பப்படிவத்திலும் குறிப்பிட்ட பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள அனைத்து விண்ணப்பதாரிகளும் தமது கையொப்பத்தினை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஊடாக உறுதிபடுத்திக்கொள்ளல் வேண்டும். மாகாண மட்டத்தில் அமைக்கப்படுகின்ற பரீட்சை நிலையங்களில், தமக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் மாத்திரம் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவதுடன், அவ்வாறு தோற்றுகின்ற போது முதலில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தினை உறுதிபடுத்திய பரீட்சை அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறுகின்ற விண்ணப்பதாரிக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

11. பரீட்சை தேர்வுநாடிகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற அனைத்து பாடங்களுக்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திபடும் வகையில் தனிப்பட்ட ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அதற்காக கீழ் காட்டப்பட்டுள்ள எந்தவொரு பத்திரமோ ஏற்றுக் கொள்ளப்படும்.

(i) தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான வெளிநாட்டு கடவுச் சீட்டு ;
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அதேபோன்று பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தினை உறுதிபடுத்திக் கொள்கின்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மூடிக் கொள்ளாது பரீட்சை மண்டபத்தினுள் உட்பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தினை உறுதி செய்ய மறுப்பு தெரிவிக்கின்ற பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் வருகை தந்துள்ள தருணம் தொடக்கம் பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறிச் செல்லும் வரையிலும் பரீட்சை அதிகாரிகளுக்கு பரீட்சார்த்தியின் அடையாளத்தை இணங்காணும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மூடிக் கொள்வதனை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

*12.* **போலியான தகவல்களுக்கான தண்டனைகள் :**

விண்ணப்படிவத்தை பூரணப்படுத்தும்போது மிகவும் கவனமாக நம்பகமான தகவல்களை வழங்கப்படுதல் வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கமைய எவரேனும் பரீட்சார்த்தி தகுதியற்றவர் என தெரியவருவாரானால் பரீட்சைக்கு முன்னராகவோ பரீட்சை நடைபெறுகின்ற போதினிலோ அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எச்சந்தர்ப்பத்திலோ அவரது/ அவளது பரீட்சை எதிர்பார்ப்புக்கள் இரத்துச் செய்யப்படலாம். எச்சந்தர்ப்பத்திலேனும் விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதென கண்டு பிடிக்கப்பட்டால் அல்லது அவர்/ அவள் அரச சேவையிலிருந்து இடைநீக்கம் செய்யப்படுவார்.

*13.* பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறு வழங்குவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவார்கள். அச்சட்டதிட்டங்களை துஷ்பிரயோகம் செய்தால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படுகின்ற தண்டனைக்கு உட்பட அவருக்கோ அவளுக்கோ நேரிடும்.

*14.* இதில் குறிப்பிடப்படாத வேறு விடயங்கள் ஏதும் இருப்பின், அது தொடர்பாக பொது சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவினால் தீர்மானிக்கப்படும். விண்ணப்பதாரிகள் அனைவரும் இவ்வர்த்தமானி பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை சட்டதிட்டங்களுக்கிணங்க செயற்படுவதற்கு உடன்பட்டுள்ளார்கள்.

*15.* சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய ஊடக மொழிகளில் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் ஏதேனும் வேற்றுமைகள் காணப்படுமிடத்து, அத்தகைய சூழ்நிலையின் போது சிங்கள ஊடக மொழி அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

பொது சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவின் ஆணையின் பிரகாரம்,

வைத்தியர் எஸ். எச். முணசிங்க,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
இல. 385, சுவசிரிபாய,
வண. பத்தேகம விமலவங்ஷ தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2020, நவெம்பர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வரையறுக்கப்பட்ட அடிப்படையில் அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிஉயர் தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான போட்டி பரீட்சை - 2018 (2020)**

**COMPETITIVE EXMANINATION FOR PROMATION TO THE SUPER GRADE OF THE PUBLIC HEALTH MANAGEMENT SERVICE ON LIMITED BASIS - 2018 (2020)**

பரீட்சைக்கு தோற்றுகின்ற ஊடக மொழி
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உத்தியோகத்தரால் நிரப்பப்படல் வேண்டும்.)

01. 1.1 முதலெழுத்துக்கள் கடைசியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :......................................
(ஆங்கில தடித்த எழுத்தில்) உதா :- SILVA A.B.

1.2 முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) :- ..........................................................................................

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில் / தமிழில்) :- ..............................................................................

02. 2.1 அலுவலக முகவரி (ஆங்கில தடித்த எழுத்தில்) :- .....................................

2.2 நிரந்தர முகவரி (ஆங்கில தடித்த எழுத்தில்) :- .....................................

2.3 நிரந்தர முகவரி (சிங்களத்தில் / தமிழில்) :- ......................................................................

03. ஆண்/ பெண் (குறித்த இலக்கத்தை கூட்டிற்குள் எழுதவும்)

ஆண் - 1
பெண் - 0

04. தேசிய அடைய அட்டை இலக்கம் :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

05. தொலைபேசி எண் :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

06. பிறந்த திகதி :

வருடம் மாதம் திகதி

07. 7.1 தற்போதைய சேவை நிலையம் மற்றும் முகவரி :- ................................

7.2 சேவையின் முதல் நியமனத் திகதி மற்றும் நியமனக் கடிதத்தின் இலக்கம் :- .............................

7.3 தற்போதைய பதவிப் பெயர் :- ................................

7.4 தற்போதைய பதவிக்கு உள்வாங்கப்பட்ட திகதி :- ................................
(உள்வாங்கப்பட்ட கடிதத்தினை இணைக்கவும்)

7.5 சேவையில்/ தரத்தில் உயர்த்தப்பட்ட திகதி :- ................................
(கடிதத்தினை இணைக்கவும்)

7.6 தகுதிகாண் தடைதாண்டல் பரீட்சையை பூரணப்படுத்திய திகதி :- ................................

7.7 II ஆந் தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து விண்ணப்பப்படிவம் ஏற்கப்படும் இறுதித் திகதி வரையிலான சேவைக் காலம்

வருடம்.............. மாதம்.................... திகதி.................

7.7.1 I ஆந் தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து விண்ணப்பப்படிவம் ஏற்கப்படும் இறுதித் திகதி வரையிலான சேவைக் காலம்

வருடம் .............. மாதம் .................... திகதி .................

7.8 விண்ணப்பப்படிவம் ஏற்கப்படும் இறுதித் திகதியன்று வருடாந்த ஒருங்கிணைந்த சம்பளம் :- ..............

7.9 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டத்தை சித்தி பெற்றுள்ளார்/ சித்தி பெறவில்லை.

7.9.1 "சித்தி பெற்றுள்ளார்" என இருப்பின் அப்பட்டம் அங்கீகரிப்புச் செய்யப்பட்ட திகதி :- ..............

7.9.2 பல்கலைக்கழகம்/ நிறுவனம் :- ........................................................................

7.9.3 பட்டம் :- ..............................................................................

7.10 2015.10.31 ஆந் திகதி முதல் 2020.10.31 ஆந் திகதி வரை உழைத்து பெறப்பட்ட சம்பள ஏற்ற திகதி மற்றும் வருடாந்த சம்பள அளவு படிமுறை :-

| இல. | சம்பள ஏற்றம் ஏற்படும் திகதி | வருடாந்த சம்பள அளவு (ரூபா) |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |
| 05 | | |
| 06 | | |

7.11 கடந்த 05 வருடத்தினுள் உங்களுக்கெதிராக ஒழுக்காற்று சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? :...........
அவ்வாறெனின் குற்றத்தின் மற்றும் நிறைவேற்றப்பட்ட தண்டனையின் சுபாவம் மற்றும் தண்டனையளிக்கப்பட்ட திகதி ஆகியவற்றின் விபரங்களை குறிப்பிடுக. (அதன் பிரதிகளை இணைக்கவும்.) .....................................
.....................................................................................................

08. சம்பளமற்ற விடுமுறை / அரைச் சம்பள விடுமுறை பெற்றுக் கொண்டிருந்தால் அத்தினங்களின் எண்ணிக்கை

09. விண்ணப்பதாரியின் கூற்று :

......................................................................................... ஆகிய நான் மேற்குறித்த அனைத்து விபரங்களும் சரியானதென உறுதி படுத்துகின்றேன். மேலும் என்னால் மேற்குறிக்கப்பப்பட்டுள்ள பொய்யானதென கண்டறியப்பட்டால் இச்சட்டத்தின் அதி உயர் தரத்திற்கு பதவி உயர்த்தப் படுவதற்கான எனது உரிமைகள் ஏற்றுக் கொள்ளப்படாது இரத்துச் செய்யப்படுவதற்கும் எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும் இடமுள்ளது என்பது பற்றி நான் உண்மையாக அறிந்துள்ளென்.

..................................,
உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :- ......................

## II பகுதி

*திணைக்களத் தலைவரின்/நிறுவனத் தலைவரின் உறுதியுரை*

திரு/ திருமதி/ செல்வி ..................................................................................................

1. அரச சுகாதார முகாமைத்துவ சேவையில் I/II ஆம் தரத்தின் உத்தியோகத்தர் என்பதையும்,
2. குறைந்தது 08 வருடங்களிற்கு குறையாததும் திருப்திகர சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ளார் என்பதையும், அண்மித்த 05 வருடங்களுள் சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார் என்பதனையும் மற்றும் திருப்திகர சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ளார் என்பதையும்,
3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டத்தை சித்தி பெற்றுள்ளார்/ சித்தி பெறவில்லை என்பதையும்,

4. (i) I/II ஆம் தரத்தின் குறித்த தகுதிகாண் தடைதாண்டல் பரீட்சையை பூர்த்தி செய்துள்ள திகதி

| | கணக்கு முறைமை | அலுவலக முறைமை |
|---|---|---|
| பரீட்சை நடாத்தப்பட்ட திகதி | | |
| பரீட்சை சுட்டெண் | | |

(ii) இரண்டாம் தகுதிகாண் தடைதாண்டல் பரீட்சையை பூர்த்தி செய்துள்ளார்/ செய்யவில்லை :...............
பூர்த்தி செய்திருந்தால் அக்கடிதத்தின் இலக்கம் மற்றும் திகதி :...............

5. (i) சம்பளமற்ற விடுமுறை/ அரைச் சம்பள விடுமுறை பெற்றுக் கொண்டிருந்தால் அத்தினங்களின் எண்ணிக்கை

II ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்ட/ பதவி உயர்வு பெற்ற திகதி முதல்)....................................

(ii) எக்காரணத்திற்காகவோ அல்லது தண்டனைக்கு/ தண்டனைகளுக்கு (எச்சரிக்கை விடுக்கப்பட்டதை தவிர்ந்த) உட்படுத்தப்பட்டிருந்தால் அது பற்றிய சுருக்கமான விபரத்தினை குறிப்பிடவும். (விடயம் சார்ந்த இலக்கத்தையும் குறிப்பிடுக) ..........................................................................................

6. கூட்டுத்தாபனத்திலோ அல்லது ஏனைய சட்டபூர்வ சபையில் சேவையாற்றுவதற்காக உத்தியோகத்தரை விடுதலை செய்யப்பட்டிருந்தால் குறித்த கால எல்லை பற்றிய விபரங்கள் ......................................................... .........................................................................

2020.10.31 ஆந் திகதியில் சேவையின் தரம் I இன்/ தரம் II இன் 05/ 08 வருட இடைவிடாத சேவைக் காலத்தினை பூர்த்தி செய்துள்ளமை/ பூர்த்தி செய்யாமை என்பதுடன்,பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டத்தை சித்தி பெற்றுள்ளார்/ சித்தி பெறவில்லை என்பதையும், ஆகக் குறைந்தது 05/ 08 வருட திருப்திகர சேவைக் காலத்தினை பூர்த்தி செய்துள்ளமை/ பூர்த்தி செய்யாமை என்பதுடன், மேற்குறிப்பிட்ட அனைத்து விபரங்களையும் தனி நபர் கோவையின் பிரகாரம் சரியானதெனவும் பொது சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணத்திற்கமைய சேவையின் அதியுயர் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்காக குறித்த உத்தியோகத்தர் அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளாரெனவும் சிபாரிசு செய்கின்றேன். இப்பதவிக்காக விண்ணப்பதாரி தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரது தற்போதய பதவியிலிருந்து அவரை விடுதலை செய்வதற்கு உடன் படுகின்றேன்.

நிறுவனத் தலைவரது கையொப்பம் :............................................
பெயர் :...........................................
பதவிப் பெயர் :............................................
(பதவி முத்திரையை பதிக்கவும்)

திகதி :- .....................

12-333

---

**சுகாதார அமைச்சு**

திறமையின் அடிப்படையில் அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிஉயர் தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான போட்டி பரீட்சை - 2018 (2020)

தகுதியின் அடிப்படையில் அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உயர் தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான போட்டி பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2021 மாச்சு மாதம் கொழும்பில் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. அரச சேவையின் நியமனங்கள் தொடர்பாக நிர்வகிக்கப்படுகின்ற பொது நிபந்தனைகளதும், 2053/18 ஆம் இலக்க 2018.01.09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவைகள் அரசியலமைப்பு சட்டத்தில் குறித்தொதுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளதும் அவ் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதும் அல்லது எதிர்காலத்தில் செய்யப்படுகின்ற

அல்லது திருத்தங்களுக்கு உட்பட்ட 2020.10.31 ஆந் திகதிக்கு கணக்கெடுப்பு செய்யப்பட்ட அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிஉயர் தரத்திற்கான வெற்றிடங்களின் 65% வீதமான எண்ணிக்கையை தகுதியின் அடிப்படையில் தரமுயர்த்துவதனூடாக பூரணப்படுத்தப்படும்.

3. சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்குகின்ற வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களில் சேவையாற்றுகின்ற, பொது நிர்வாக சுற்றறிக்கை 03/ 2016 ஆம் இலக்க MN-02-2016 சம்பள குறியீட்டின் கீழ் சம்பளம் பெறுகின்ற மற்றும் அந்நியமனங்களில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள 2020.10.31 ஆந் திகதியில் இதன் 06 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உத்தியோகத்தர்கள் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதி பெறுகின்றார்கள்.

4. 2016.02.25 ஆந் திகதிய 03/ 2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் MN-07-2016 சம்பள பின்னம் இப்பதவிக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதுடன் அதற்குரிய மாதாந்த சம்பள அளவு 41,580/- 11 x 755 – 18 x 1030 - 68,425/- ஆகும். அச்சம்பளமானது தங்களுக்கு உரித்தாக்கப்படுவதானது 2020.01.01 ஆந் திகதி தொடக்கம் ஆகும். அச்சுற்றறிக்கையின் உப அட்டவணை II இன் ஏற்பாடுகளின்படி நியமனம் செயற்படுன்ற திகதியிலிருந்து சம்பளம் செலுத்தப்படும்.

5. **சேவை நிபந்தனைகள் :**

I. நியமனம் செய்யப்படுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் நியமனம் செயற்படுகின்ற திகதி பற்றி அங்கீகாரம் பெற்ற அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை அல்லது வெற்றிடங்கள் அனைத்தும் அல்லது பூரணப்படுத்தாமல் விடுவதற்கு நியமனம் செய்யும் அதிகாரிக்கு அதிகாரமுள்ளது.

II. அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உத்தியோகத்தர்களின் சாதாரண கடமை நேரம் வருடத்தின் அனைத்து தினங்களிலும் முற்பகல் 8.30 தொடக்கம் 4.15 வரை ஆகும். இருப்பினும் கடமை தேவைக்கேற்ப மற்றும் கடமை சுபாவத்திற்கிணங்க மேற்குறித்த நேரங்கள் வேறுபடலாம். மேலும் கடமை தேவைக்கேற்ப இரவு சேவையில் ஈடுபடுத்தப்படுமாதலால், கடமை சுபாவத்திற்கிணங்க மேலதிக கடமைக்காகவும் உத்தரவிடப்படும். ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற உத்தியோகத்தர்கள் வருடத்தின் முன்னூற்றி அறுபத்தைந்து நாட்களிலும் (365) கடமையாற்ற பணிக்கப்படுவார்கள்.

III. சேவையின் தேவைக்கேற்ப சுகாதார நிறுவனங்கள் மற்றும் வைத்திசாலைகளில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு சனிக்கிழமை, ஞாயிறு மற்றும் அரச பொது விடுமுறை தினங்களில் கடமையாற்ற நியமிக்கப்படலாம். அக்கடமைகளுக்காக மேலதிக நேரக் கொடுப்பனவு அல்லது விடுமுறை தின வேதனம் அல்லது பதில் விடுமுறை (லீவ் லீவ்) பெற்றுக் கொள்ளலாம்.

IV. சுகாதார அமைச்சின் செயலாளரினால் பரிந்துரைக்கப்படுகின்ற கடமைகளை ஆற்றுகின்ற உத்தியோகத்தர்களால் ரூபா 5,000/ - ற்கான பிணைத் தொகை வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

6. **மதிப்பீட்டு செயல்முறை :**

அதியுயர் தரத்தின் பதவி வெற்றிடங்களின் 65% விகித எண்ணிக்கையை திறமையின் அடிப்படையில் பூரணப்படுத்தப்படும். இதற்காக பொது சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவிற்காக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் நுண்ணறிவுப் பரீட்சை மற்றும் விடய ஆய்வுப் பரீட்சைக்குத் தோற்றி ஆகக்குறைந்தது 50% விகித புள்ளிகளைப் பெற்று சித்தியடைதல் வேண்டும். அப்பெறுபேற்றின் அடிப்படையில் மற்றும் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவினால் நியமிக்கப்படுகின்ற சபையினால் சிரேஷ்டத்துவம் மற்றும் அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் புள்ளிகளின் வரிசைக் கிரமப்படி முன்னுரிமை தீர்மானிக்கப்படும். மேற்குறித்த பரீட்சைக்குத் தோற்றி ஆகக்குறைந்தது 50% விகித புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் மாத்திரம் அச்சபையின் மூலம் புள்ளிகளை வழங்குவதற்காகத் தெரிவு செய்யப்படுவார்கள். சுகாதார சேவைகள் குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக்குழு முன் தோற்றி தகைமைகள் பரிசீலிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்கும் அவ்விண்ணப்பதாரிகள் தோற்றுதல் வேண்டும். அத்துடன் அந்நேர்முகப் பரீட்சையின் போது அதற்குரிய புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

| வினாத்தாள் / புள்ளிகள் வழங்கப்படும் அளவுகோல்கள் | காலம் | மொத்த புள்ளிகள் |
|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை மற்றும் விடய ஆய்வு | 1 1/ 2 மணித்தியாலம் | 100 |
| 2. சிரேஷ்டத்துவம் | | 60 |
| 3. அனுபவம் | | 40 |

I. **நுண்ணறிவுப் பரீட்சை மற்றும் விடய ஆய்வு**.- எழுத்துப் பரீட்சை (1 1/ 2 மணித்தியாலம் - 100 புள்ளிகள்) இப்பரீட்சை நடாத்தப்படும் திகதி பற்றி பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்படும். நுண்ணறிவுப் பரீட்சை மற்றும் விடய ஆய்வு பரீட்சைக்குரிய வினாத்தாள் பகுதிகள் இரண்டினைக் கொண்டிருக்கும்.

(அ) **பகுதி** I :
அனைத்து வினாக்களும் அலுவலக நிர்வாகத்துடன் சம்பந்தப்பட்டதாக அமைந்திருப்பதுடன் அதில் பொது அறிவு, தீர்மானம் எடுக்கும் ஆற்றல், தர்க்கமான தீர்வு எடுத்தல் மற்றும் அலுவலக நிர்வாகத்துடன் தொடர்புபட்ட பிணக்குகள் முன்வைக்கப்படும்.

(ஆ) **பகுதி** II :
தேர்வுநாடிகளுக்கு அலுவலக நிர்வாகம் சம்பந்தமான விடய ஆய்வுடன் தொடர்புடைய பிணக்குகளுக்கு பதில் வழங்கப்படுதல் வேண்டும். அதில் ஒரு பந்தியோ அல்லது பந்திகள் சிலவற்றுடன் கூடிய வினாத்தாள் தயாரிக்கப்பட்டிருக்கும்.

II. **சிரேட்டத்துவம்** :
சிரேட்டத்துவத்திற்காக, 2019.06.13 ஆந் திகதிய பொது சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/ 2009 இன் பிரகாரம் புள்ளிகள் பெற்றுத்தரப்படும்.

III. **அனுபவம்** :
சேவையின் I ஆம் தரத்தின் மேற்பார்வை அதிகாரியாக திருப்திகரமான ஒரு வருட சேவைக்காக தலா 02 புள்ளிகள் வீதம் ஆகக்கூடுதலாக 40 புள்ளிகள் வீதம் ஆகக்கூடுதலாக 40 புள்ளிகள் வரை வழங்கப்படும்.

**குறிப்பு**.- பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சகர் குழுவினால் சிரேட்டத்துவம் மற்றும் அனுபவம் தொடர்பாக புள்ளிகள் வழங்கப்படும். விண்ணப்பதாரிகள் சிரேட்டத்துவம் மற்றும் அனுபவம் தொடர்பில் சேர்க்கப்படும் புள்ளிகளானது அவ்வுத்தியோகத்தர்களது தனி நபர் கோவையை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படும். இதன்போது வேண்டுமென்று பொய்யான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதென கண்டுபிடிக்கப்படுமானால் பொது சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவினது அறிவுறுத்தல்களுக்கிணங்க விண்ணப்பதாரிகளுக்கும் மற்றும் அவ்விண்ணப்பப்படிவத்தினைச் சான்றுபடுத்திய திணைக்களத் தலைவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். தனி நபர் கோவையில் சான்றுப்படுத்தப்படாத சான்றுகள் தகைமைகளுக்காக புள்ளிகள் பெற்றுத்தரப்பட மாட்டாது.

7. **தகைமைகள்** :

7.1 **தொழில் தகைமைகள்** :

(i) குறித்த திகதியில் தரம் I சேவையில் ஆகக்குறைந்தது (5) வருட தொடர்ச்சியானதும் திருப்திகரமான சேவைக்காலத்தினைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தராயிருத்தல்.

(ii) குறித்த பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் குறிப்பிட்ட திகதியில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7.2 **தேக ஆரோக்கியம்** :
அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கை தீவில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் போதுமான தேக ஆரோக்கியம் மற்றும் மன உறுதியுடன் கொண்டிருத்தல் வேண்டும்.

7.3 **ஏனைய தகைமைகள்** :

(i) விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தையுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

(ii) குறித்த பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் குறிப்பிட்ட திகதியில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7.4 **அனுபவம்** :
குறித்த திகதியில் சுகாதார அமைச்சு, அவ்வமைச்சின் கீழ் இயங்குகின்ற சுகாதார நிறுவனங்களில் சேவையாற்றும் நிரந்தர நியமனத்தின் 5 வருட தொடர்ச்சியானதும் திருப்திகரமான சேவைக்காலத்தினையும் பூர்த்திசெய்துள்ளதுடன் அதுபற்றி திணைக்களத் தலைவரினால் உறுதிசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரிகள் 5 வருட பூர்வாங்க சேவைக் காலத்தில் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல். இதனுடன் திருப்திகர சேவை என்பதிலிருந்து கீழ் குறித்த விடயங்கள் பொருள்படுகின்றது.

- குறித்த திகதியில் ஐந்து வருட பூர்வாங்க சேவைக் காலத்தினுள் கிடைக்கப்பெறுகின்ற அனைத்து வேதன ஏற்றங்களைப் பெற்றிருத்தல் ;
- குறித்த திகதியில் ஐந்து வருட பூர்வாங்க சேவைக் காலத்தினுள் எவ்விதமான ஒழுக்காற்று நடவடிக்கையின் போது தண்டனைக்கு உட்படாதிருத்தல் வேண்டும்.

இங்கு குறித்த திகதி என்பது தகைமைகள் பரிசீலிக்கப்படுகின்ற இறுதித் திகதியான 2020.10.31 ஆகும்.

8. **விண்ணப்பிக்கும் முறைமை :**

(அ) விண்ணப்பப் படிவத்தினை இச்சுற்றுநிருபத்தில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கமைய அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அது A4 அளவிலான கடதாசியில் இரு பக்கங்களையும் உபயோகப்படுத்தி விண்ணப்பதாரியினால் பூரணப்படுத்தியிருக்க வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் 2021.01.04 ஆந் திகதிக்கு முன்னராக நிறுவனத் தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டுமென்பதுடன், அனைத்து விண்ணப்பதாரர்களினாலும் முன் வைக்கப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதுமென அவரால் தனிப்பட்ட வகையில் உறுதி செய்யப்பட்டதன் பின்னர் அனைத்து விண்ணப்பப்படிவங்களும்,

"பணிப்பாளர் (நிர்வாகம்) 06,
சுகாதார அமைச்சு,
த. பெ. 385,
வண. பத்தேகம விமலவங்ஷ தேரர் மாவத்தை,
கொழும்பு 10"

எனும் முகவரிக்கு பதிவுத் தபாலினூடாக 2021.01.18 ஆந் திகதிக்கு முன்னராக அனுப்பப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் முலையில் "திறமையின் அடிப்படையில் அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிஉயர் தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம்" என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**கவனிக்க**.- தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதலெழுத்துக்களுடனான பெயருக்கு மாத்திரம் வழங்கப்படுமாதலால் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள மாதிரியை பின்பற்றி தமது பெயரை சரிவர குறிப்பிடுதல் வேண்டும். நியமனங்கள் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பெயரில் திருத்தங்களை செய்வதற்கோ அல்லது ஏதேனும் பகுதிகளை இணைப்பதற்கு/ அகற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(ஆ) பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற இறுதித் திகதியில் விண்ணப்பதாரிகள் வகித்த பதவிகள் மற்றும் சேவையாற்றிய இடங்கள், பரீட்சை சம்பந்தப்பட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் தொடர்புபடுமாதலால், விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் ஏற்படுகின்ற மாற்றங்கள் எதையும் பற்றி கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

(இ) இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஊடக மொழிகளில் நடாத்தப்படும். தேர்வுநாடிகளுக்கு தமது விருப்பத்தின் பிரகாரம் இவ்வூடக மொழிகளில் ஒரு ஊடக மொழியினை மாத்திரம் தெரிவு செய்து பரீட்சைக்குத் தோற்றுதல் வெண்டும். தெரிவு செய்யப்பட்ட ஊடக மொழியினை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(ஈ) தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் உத்தியோகத்தர் ஒருவருக்கு, வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை அடிப்படையில் பதவி உயர்வு மற்றும் திறமை அடிப்படையில் பதவி உயர்வு ஆகிய இரு முறைமைகளில் விண்ணப்பிக்க முடியும் என்பதோடு, விண்ணப்பப்படிவங்கள் அனுப்பி வைக்கப்படும்போது வெவ்வேறாக விண்ணப்பித்தல் வேண்டும்.

(உ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் அனைத்தையும் தான் பூர்த்தி செய்துள்ளமை பற்றி விண்ணப்பப்படிவத்தினை அனுப்பி வைக்கப்படுவதற்கு முன்னராக குறித்த விண்ணப்பதாரி திருப்தி அடைந்திருத்தல் வேண்டும். இவ்வறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிராத பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சையில் போதுமான புள்ளிகளைப் பெற்றிருந்தாலும் நியமனம் பெறுவதற்கு தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

(ஊ) நியமனத்திற்காக தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரியை விடுவிப்பது தொடர்பாக திணைக்களத் தலைவரின் உடன்பாடு இருத்தல் வேண்டும்.

(எ) நேர்முகப் பரீட்சைக்காக அழைப்பு விடுக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளது தகைமைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பரீட்சிக்கப்படும் போது தேவையான அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருக்கவில்லையென அறியப்படும் சந்தர்ப்பத்தில் அவர்களுடைய தேர்வு இரத்துச் செய்யப்படும்.

9. **பரீட்சைக் கட்டணம்** :

பரீட்சை கட்டணம் ரூபா 1,200/- ஆகும். அப்பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமான தலைப்பு 20-03-02-13 கீழ் அரச வருமானத்திற்கு வைப்புச் செய்யப்படும் வகையில் நாட்டின் எந்தவொரு அஞ்சற் காரியாலயத்தில்/ மாவட்ட/ பிரதேச செயலகங்களில் பணத்தைச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை, அதன் ஒரு மேல் விளிம்பில் விண்ணப்பப்படிவத்தின் குறித்த இடத்தில் கழறாதவாறு ஒட்டப்படுதல் வேண்டும். இப்பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக வேறெந்த கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது. பரீட்சை கட்டணத்திற்காக பணம் அல்லது முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாதென்பதையும் பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எந்தக் காரணம் கொண்டும் மீளளிப்பு செய்யவோ வேறு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது. அதேபோல் பற்றுசீட்டின் நிழற்பிரதியொன்றினைத் தம்மிடம் வைத்துக்கொள்வது உபயோகப்படும்.

10. **பரீட்சைக்குத் தோற்றுதல்** :

(i) விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டதன் பின்னர் எவரேனும் விண்ணப்பதாரியொருவருக்கு அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின், பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியையும் பரீட்சைக் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் நிழற்பிரதியில் குறித்துக் கொண்டு அதுபற்றி பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்படல் வேண்டும். (கொழும்பைத் தவிர்ந்த விண்ணப்பதாரியானால் அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்பட வேண்டிய தொலைநகல் (FAX) இலக்கத்துடன் மேற்குறித்த விபரங்களுடன் முன்வைத்தல் வேண்டும்.)

(ii) விண்ணப்பப்படிவத்திலும் குறிப்பிட்ட பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள அனைத்து விண்ணப்பதாரிகளும் தமது கையொப்பத்தினை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். மாகாண மட்டத்தில் அமைக்கப்படுகின்ற பரீட்சை நிலையங்களில், தமக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் மாத்திரம் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவதுடன், அவ்வாறு தோற்றுகின்ற போது முதலில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தினை உறுதிபடுத்திய பரீட்சை அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறுகின்ற விண்ணப்பதாரிக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

11. பரீட்சை தேர்வுநாடிகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற அனைத்து பாடங்களுக்கும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திபடும் வகையில் தனிப்பட்ட ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அதற்காக கீழ் காட்டப்பட்டுள்ள எந்தவொரு பத்திரமோ ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான வெளிநாட்டு கடவுச் சீட்டு ;
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

10.1 அதேபோன்று பரீட்சை விண்ணப்பதாரிகள் தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்கின்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மூடிக் கொள்ளாது பரீட்சை மண்டபத்தினுள் உட்பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தினை உறுதி செய்ய மறுப்பு தெரிவிக்கின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் வருகை தந்துள்ள தருணம் தொடக்கம் பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறிச் செல்லும் வரையிலும் பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியின் அடையாளத்தை இணங்காணும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மூடிக் கொள்வதனை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

*12.* **போலியான தகவல்களுக்கான தண்டனைகள் :**

விண்ணப்படிவத்தை பூரணப்படுத்தும்போது மிகவும் கவனமாக நம்பகமான தகவல்களை வழங்கப்படுதல் வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கமைய எவரேனும் பரீட்சார்த்தி தகுதியற்றவர் என தெரியவருவாரானால் பரீட்சைக்கு முன்னராகவோ பரீட்சை நடைபெறுகின்ற போதினிலோ அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எச்சந்தர்ப்பத்திலோ அவரது/ அவளது பரீட்சை எதிர்பார்ப்புக்கள் இரத்துச் செய்யப்படலாம். எச்சந்தர்ப்பத்திலேனும் விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதென கண்டு பிடிக்கப்பட்டால் அல்லது அவர்/ அவள் அரச சேவையிலிருந்து இடைநீக்கம் செய்யப்படுவார்.

13. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறு வழங்குவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவார்கள். அச்சட்டதிட்டங்களை துஷ்பிரயோகம் செய்தால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படுகின்ற தண்டனைக்கு உட்பட அவருக்கோ அவளுக்கோ நேரிடும்.

14. இதில் குறிப்பிடப்படாத வேறு விடயங்கள் ஏதும் இருப்பின், அது தொடர்பாக பொது சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவினால் தீர்மானிக்கப்படும். விண்ணப்பதாரிகள் அனைவரும் இவ்வர்த்தமானி பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை சட்டதிட்டங்களுக்கிணங்க செயற்படுவதற்கு உடன்பட்டுள்ளார்கள்.

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய ஊடக மொழிகளில் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் ஏதேனும் வேற்றுமைகள் காணப்படுமிடத்து, அத்தகைய சூழ்நிலையின் போது சிங்கள ஊடக மொழி அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

பொது சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவின் ஆணையின் பிரகாரம்,

வைத்தியர் எஸ்.எச். முணசிங்க,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
இல. 385, சுவசிரிபாய,
வண. பத்தேகம விமலவங்ஷ தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2020, நவெம்பர் 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**திறமையின் அடிப்படையில் அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிஉயர் தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான போட்டி பரீட்சை - 2018 (2020)**

**COMPETITIVE EXAMINATION FOR PROMOTION TO THE SUPER GRADE OF THE PUBLIC HEALTH MANAGEMENT SERVICE ON MERIT BASIS - 2018 (2020)**

பரீட்சைக்கு தொற்றுகின்ற ஊடக மொழி
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4

(உத்தியோகத்தரால் நிரப்பப்படல்வேண்டும்)

01. 1.1 முதலெழுத்துக்கள் கடைசியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :......................................
(ஆங்கில தடித்த எழுத்தில்) உதா :- SILVA A.B.

1.2 முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) :- ..............................................................................

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :- ......................................................................

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

02. 2.1 அலுவலக முகவரி (ஆங்கில தடித்த எழுத்தில்) :- ......................................

2.2 நிரந்தர முகவரி (ஆங்கில தடித்த எழுத்தில்) :- ......................................

2.3 நிரந்தர முகவரி (சிங்களத்தில் / தமிழில்) :- ......................................................................

03. ஆண் / பெண் (குறித்த இலக்கத்தை கூட்டிற்குள் எழுதவும்)

ஆண் - 1
பெண் - 0 ☐

04. தொலைபேசி எண் :- ☐☐☐☐☐☐☐☐☐☐

05. பிறந்த திகதி :

வருடம் .............. மாதம் .............. திகதி ..............

06. 6.1 தற்போதய சேவை நிலையம் மற்றும் முகவரி :- ................................

6.2 சேவையின் முதல் நியமனத் திகதி மற்றும் நியமனக் கடிதத்தின் இலக்கம் :- .............................

6.3 தற்போதய பதவிப் பெயர் :- ................................

6.4 தற்போதய பதவிக்கு உள்வாங்கப்பட்ட திகதி :- ................................
(உள்வாங்கப்பட்ட கடிதத்தினை இணைக்கவும்)

6.5 சேவையில்/ தரத்தில் உயர்த்தப்பட்ட திகதி :- ................................
(கடிதத்தினை இணைக்கவும்)

6.6 தகுதிகாண் தடைதாண்டல் பரீட்சையை பூரணப்படுத்திய திகதி :- ................................

6.7 I ஆந் தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து விண்ணப்பப்படிவம் ஏற்கப்படும் இறுதித் திகதி வரையிலான சேவைக் காலம்

வருடம்.............. மாதம்.................... திகதி.................

6.8 விண்ணப்பப்படிவம் ஏற்கப்படும் இறுதித் திகதியன்று வருடாந்த ஒருங்கிணைந்த சம்பளம் :- ..............

6.9 2015.10.31 ஆந் திகதி முதல் 2020.10.31 ஆந் திகதி வரை உழைத்து பெறப்பட்ட சம்பள ஏற்ற திகதி மற்றும் வருடாந்த சம்பள அளவு படிமுறை :-

| இல. | சம்பள ஏற்றம் ஏற்படும் திகதி | வருடாந்த சம்பள அளவு (ரூபா) |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |
| 05 | | |
| 06 | | |

6.10 கடந்த 05 வருடத்தினுள் உங்களுக்கெதிராக ஒழுக்காற்று சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? :...............................................
அவ்வாறெனின் குற்றத்தின் மற்றும் நிறைவேற்றப்பட்ட தண்டனையின் சுபாவம் மற்றும் தண்டனையளிக்கப்பட்ட திகதி ஆகியவற்றின் விபரங்களை குறிப்பிடுக. (அதன் பிரதிகளை இணைக்கவும்.) ......................................
.....................................................................................................

6.11 சம்பளமற்ற விடுமுறை/ அரைச் சம்பள விடுமுறை பெற்றுக் கொண்டிருந்தால் அத்தினங்களின் எண்ணிக்கை :................................

07. பொதுச் சுசாதார முகாமைத்துவ உதவியாளர் I ஆம் தரத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட திகதி முதல் 2020.10.31 ஆந் திகதி வரை அலுவலக மேற்பார்வையில் ஈடுபட்ட அனுபவம் பற்றிய விபரங்கள் (இதில் குறிப்பிடப்படும் அனுபவம் தொடர்பாக உறுதிப்படுத்தப்படுகின்ற கடிதங்களில் நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை விண்ணப்பப்படிவத்தில் கிரமப்படி இணைக்கவும். உத்தியோகத்தரின் செயற்றிறன் அறிக்கைகளின் முதற்பிரதிகளில் (தரம் 1 இற்கு தரமுயர்த்தப்பட்டதன் பின்னர்) உறுதிப்படுத்த பிரதிகளை இணைக்கப்பட்டிருப்பது பிரயோசனப்படும்.) அனைத்துக் கடிதங்களையும் இவ்விண்ணப்பப்படிவத்தில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களுக்கு புள்ளிகள் வழங்குவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.)

| **வைத்தியசாலை/ அலுவலகம்/ திணைக்களம்** | **கால எல்லை** | | **உத்தியோகத்தரால் ஆற்றப்பட்ட மேற்பார்வை பதவிகள்** | **காலம்** | | **உறுதிப்படுத்தப்பட்ட கடிதங்களின் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளது/ இணைக்கப்படவில்லை என்பது பற்றி** |
|---|---|---|---|---|---|---|
| | திகதி முதல் | திகதி வரை | | வருடம் | மாதம் | |
| | | | | | | |

08. **பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள் :**

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அஞ்சல் அலுவலகம்/ உப அஞ்சல் அலுவலகம் :.......................
(ii) பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி :.......................
(iii) செலுத்தப்பட்ட தொகை :.......................

பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றினைத் தம்மிடம் வைத்துக்கொள்வது உபயோப்படும்.

மேற்குறித்த விபரங்கள் சரியானதெனவும், மேற்குறிக்கப்பட்டுள்ள ஊடக மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துடையதெனவும் இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை நடாத்தப்படுவது மற்றும் பெறுபேறு வழங்கப்படுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிகின்றேன் என்பதையும் இத்தால் அறிவிக்கின்றேன்.

.................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :.....................

கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :

எனது அலுவலகத்தில் உத்தியோகத்தராக சேவையாற்றுவதுடன் மற்றும் நான் தனிப்பட்ட ரீதியில்–

திரு./ திருமதி/ செல்வி .......................................... என்பவரை அறிவேன் என்பதையும், அவர் ........................ ஆந் திகதி என் முன்னிலையில் தனது கையொப்பத்தினை இட்டார் எனவும், குறித்த பரீட்சைக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளார் என்பதையும்/ குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

.................................,
கையொப்பத்தினை உறுதிப்படுத்துகின்றவரது கையொப்பம்.

திகதி :.....................

நிறுவனத் தலைவரது கையொப்பம் :................................
பெயர் :................................
பதவிப் பெயர் :................................
(பதவி முத்திரையைப் பதிக்கவும்.)

## II பகுதி

*திணைக்களத் தலைவரின்/நிறுவனத் தலைவரின் உறுதியுரை*

1. உத்தியோகத்தரின் தனி நபர் கோவையில் தரம் I இற்கு நியமிக்கப்பட்ட திகதி முதல் செயல்திறன் அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு கீழ்க்குறித்த விபரங்களைப் பூரணப்படுத்துக :

| செயல்திறன் வருடம் | | உத்தியோகத்தர் வகித்த மேற்பார்வை பதவி | செயல்திறன் அறிக்கையின் பிரகாரம் | |
|---|---|---|---|---|
| திகதி முதல் | திகதி வரை | | உறுதிப்படுத்தப் படுகின்றது | உறுதிப்படுத்தப் படவில்லை |
| 2020 | 2019 | | | |
| 2019 | 2018 | | | |
| 2018 | 2017 | | | |
| 2017 | 2016 | | | |
| 2016 | 2015 | | | |
| 2015 | 2014 | | | |
| 2013 | 2012 | | | |
| 2012 | 2011 | | | |
| 2011 | 2010 | | | |
| 2010 | 2009 | | | |
| 2009 | 2008 | | | |
| 2008 | 2007 | | | |
| ............... | ............... | | | |
| ............... | ............... | | | |

2. உத்தியோகத்தரது பொது சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் I இன் உத்தியோகத்தர் எனவும் ......................................................

3. குறைந்தது 05 வருடங்களிற்கு குறையாத இடைவிடாத சேவையை மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும் ......................................................

4. அண்மித்த 05 வருடங்களில் சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார் எனவும் இடைவிடாத சேவையை மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும்,

5. குறிப்பிட்ட காலத்தினுள் செயல்திறன் பரீட்சையை சித்தியடைந்துள்ளாரெனவும்,

II ஆம் தரத்தின் செயல்திறன் பரீட்சை :......................................................
I ஆம் தரத்தின் செயல்திறன் பரீட்சை :......................................................

6. (i) சம்பளமற்ற விடுமுறை/ அரைச் சம்பள விடுமுறை பெற்றுக்கொண்டிருந்தால் அத்தினங்களின் எண்ணிக்கை: ............................................
(II ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்ட/ பதவி உயர்வு பெற்ற திகதி முதல்)

(ii) எக்காரணத்திற்காகவோ அல்லது தண்டனைக்கு/ தண்டனைகளுக்கு (எச்சரிக்கை விடுக்கப்பட்டதை தவிர்ந்த) உட்படுத்தப்பட்டிருந்தால் அது பற்றிய சுருக்கமான விபரத்தினைக் குறிப்பிடவும். (விடயம் சார்ந்த இலக்கத்தையும் குறிப்பிடுக.) :..............................................................................................................................
..............................................................................................................................................
..............................................................................................................................................
..............................................................................................................................................

7. கூட்டுத்தாபனத்திலோ அல்லது ஏனைய சட்டபூர்வ சபையில் சேவையாற்றுவதற்காக உத்தியோகத்தரை விடுதலை செய்யப்பட்டிருந்தால் குறித்த கால எல்லை பற்றிய விபரங்கள் ..........................................................
......................................................................

2020.10.31 திகதியில் சேவையின் தரம் I இன் / தரம் II இன் 05 வருட இடைவிடாத சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ளமை/ பூர்த்தி செய்யாமை என்பதுடன், ஆகக்குறைந்தது 05 வருட திருப்திகர சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ளமை/ பூர்த்தி செய்யாமை என்பதுடன், மேற்குறிப்பிட்ட அனைத்து விபரங்களையும் தனி நபர் கோவையின் பிரகாரம் சரியானதெனவும் பொது சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணத்திற்கமைய சேவையின் அதியுயர் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்காக குறித்த உத்தியோகத்தர் அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளாரெனவும் சிபாரிசு செய்கின்றேன்.

நிறுவனத் தலைவரது கையொப்பம் :............................................
பெயர் :............................................
பதவிப் பெயர் :............................................
(பதவி முத்திரையை பதிக்கவும்)

12-334

---

## நீர்ப்பாசன அமைச்சு

## நீர்ப்பாசனத் திணைக்களம்

*நீர்ப்பாசனத் திணைக்களத்தின் களஞ்சியப் பொறுப்பாளர் (தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021*

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் களஞ்சியப் பொறுப்பாளர் தரம் (III) க்கான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 ஆட்சேர்ப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படும் பதவிகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை
- களஞ்சியப் பொறுப்பாளர் (III) - 07

1.2 பதவிக்குரிய கடமையின் தன்மை – சாதாரண அலுவலக களஞ்சியப்பொருட்களுக்கு மேலதிகமாக திணைக்களத்தின் நிர்மாண மற்றும் திட்டத்திற்குரிய இயந்திர உபகரணங்கள், பொறியியல் மூலப்பொருட்களின் பொறுப்பில் வைத்தல், முறையாக அவற்றை விநியோகித்தல் என்பன இப்பதவிக்கான கடமையாகும்.

**2. தேர்ந்தெடுக்கப்படும் முறை :**

இந்த ஆட்சேர்ப்பானது திறந்த போட்டிப் பரீட்சை மூலம் சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையாகும். விண்ணப்பிக்கப்பட்ட மொழியானது பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட அதிக புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். (இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் அனைத்தும் பூர்த்தியாக்கப்பட்டிருத்தல் கட்டாயமாகும்.)

**3. இந்நியமனத்துக்கு ஏற்புடைய வேதன அளவுத்திட்டம் :**

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/ 2016 இற்கு இணங்க MN 01 - 2016 எனும் சம்பளத் தொகுதிக்குரிய 27,140- 300 x 10-350 x 11-495 x 10-660 x 10-45,540/- ஆவதுடன் சம்பளமானது இச்சுற்றறிக்கையின் விதிமுறைகளுக்கிணங்கவே ஆகும். பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் நான்காவது சம்பள உயர்வுக்குச் செல்ல முன்னர் திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

**4. சேவைத் தொகுதி**

4.1 தரம்

III ஆம் தரம்
II ஆம் தரம்
I ஆம் தரம்

**5. சேவையில் நியமிப்பதற்கான நிபந்தனைகள் :**

I இந்த நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டங்கள் பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்படுதல் வேண்டும். விதவைகள் / தபுதாரர்கள், ஓய்வூதிய நிதியத்துக்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும். மூன்று (03) வருட காலத்திற்கு தகுதிகாண் நிலைக்கு உட்படுகின்றீர்கள்.

II 2009.02.20 ஆம் திகதி அரச சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 1589/30 ஆம் இலக்க நியமனம் சம்பந்தமான நடைமுறை விதிகளுக்கு ஏற்புடையதாகும்.

III அரச நிருவாக சுற்றறிக்கை 7/2007 மற்றும் அதனோடிணைந்த சுற்றறிக்கைக்கிணங்க உரிய மட்டத்தில் மொழித்திறனை உரிய காலத்திற்குள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

IV திணைக்களத்தின் நிர்மாண வேலைத் தளங்களுடன் தொடர்புடைய காரியாலயங்கள் போக்குவரத்து வசதி குறைந்த தூரப் பிரதேசங்களில் அமைந்துள்ளன. திட்டக் கடமைகள் மற்றும் வெள்ளம் போன்ற அவசர நிலைமைகளில் சேவையின் தேவைக் கருதி பகல் இரவு சேவை கட்டாயமானதாகும். அவ்வாறான சேவை நிலையங்களாவன அம்பாறை, பொத்துவில், கல்முனை, அக்கரைப்பற்று, பதவிய, இராஜாங்கனைய, ஹூறுலுவெவ, மாப்பாகட, பதுளை, கந்தேகெட்டிய, நவகிரி, றூகம், திஸ்ஸ, வீரகெட்டிய, ஹம்பாந்தோட்டை, லுனுகம்வெஹர, வெள்ளவாய, பிபிளை, மொனராகலை, பொலனறுவை, கவ்துள்ள, எலஹெர, இங்கினிமிட்டிய, புத்தளம், மூதூர், கந்தளாய், கோமரங்கடவளை, முருங்கன், வவுனியா ஆகிய நீர்ப்பாசன பிரிவுகளும் மற்றும் திட்டக் காரியாலயங்களாகும்.

6. **வயதெல்லை**.- விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**7. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

7.1 கல்வித் தகைமைகள் :

சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, கணிதம் மற்றும் ஏனைய பாடங்கள் இரண்டில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடைதல்

அத்துடன்

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு பாடத்தில் சித்தியடைந்திருத்தல வேண்டும். (சாதாரண பொது அறிவுப் பரீட்சை அன்றி)

7.2 தேகாரோக்கிய தகைமைகள் :

இலங்கைத் தீவின் எப்பகுதியிலும் சேவை செய்யக்கூடியதும் பதவிக்குரிய கடமைகளை மேற்கொள்ளக் கூடியவாறு உடல் மற்றும் உள ரீதியாகவும் பொருத்தமுடையவராக இருத்தல் வேண்டும்.

7.3 ஏனைய தகைமைகள் :

(அ) இலங்கைப் பிஜையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

(இ) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு அவசியமான அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தி இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்படுவது விண்ணப்பதாரர் உரிய தகைமைகள் மற்றும் குறித்த வயதெல்லை என்பன விண்ணப்பம் கோரப்பட்டுள்ள அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு அனைத்து தகைமைகளும் பூர்த்தியாக்கப்பட்டிருந்தால் மட்டுமே.

(ஈ) மேலே 7(1)(அ), (ஆ) தகைமைகளுக்கு மேலதிகமாக தகுதிகாண் காலத்தில் கல்கமுவ நீர்ப்பாசன பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் களஞ்சியப்படுத்தல் சம்பந்தமான மூன்று (03) மாத பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தல் இப்பதவியினை நிரந்தரமாக்குவதற்கு தேவையான தகைமையாகும்.

8. **பொய்யான தகவல்கள்**.- விண்ணப்பங்களை பூரணப்படுத்தும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். விண்ணப்பதாரி எவராயினும் தகைமை இல்லை என்பது தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சை இடம் பெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் ஏதாவது சந்தர்ப்பத்தில் தெரிய வந்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரியால் வழங்கப்படும் தகவல்கள் எப்பொழுதாவது பொய் என தெரியவரும் சந்தர்ப்பத்தில் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

9. **தெரிவு செய்யும் முறை** :

9.1 எழுத்துப் பரீட்சை

| வினாப்பத்திரம் | புள்ளிகள் | சித்தியெய்தும் புள்ளி | காலம் |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40 | 01 மணித்தியாலம் |

இது தர்க்க ரீதியான திறமை, சிந்தித்தல், பகுத்தாய்வு செய்யும் இயலுமை, தீர்மானம் எடுக்கும் திறமை போன்றவற்றை பரீட்சிப்பதாக அமையும்.

9.2 இப்பரீட்சை 2021 பெப்ரவரி மாதத்தில் கொழும்பு மாவட்டத்திலும் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சில மாவட்டங்களிலும் நடாத்தப்படும். இப்பரீட்சையைப் பிற்போடுவது அல்லது இரத்துச் செய்வது வெற்றிடங்களை நிரப்புவது, நிரப்பாதிருப்பது அல்லது வெற்றிடத்தில் ஒரு பகுதியை மாத்திரம் நிரப்புவது மற்றும் ஏனைய அனைத்து விடயங்கள் சம்பந்தமாகவும் இறுதித் தீர்மானம் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்திற்குரியதாகும்

10. இந்த வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரத்திற்கிணங்க A4 அளவிலான (21 x 29 செ.மீ.) கடதாசியில் இரண்டு பக்கத்தையும் உபயோகித்து விண்ணப்பதாரியினால் விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தில் தலைப்பு இலக்கம் 1.0 இலிருந்து 4.0 வரை முதலாவது பக்கத்திலும், 5.0 இலிருந்து 7.0 வரை இரண்டாவது பக்கத்திலும், மிகுதியை மூன்றாவது பக்கத்திலும் அமையுமாறு தயாரித்து அதற்குரிய தகவல்களை தனது கை எழுத்தினாலேயே தெளிவாக குறிப்பிடல் வேண்டும். மாதிரி விண்ணப்பத்தின் படி அமையாத விண்ணப்பங்கள், முழுமையாக தகவல்கள் குறிப்படப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் நகல் பிரதி ஒன்றை தம்வசம் வைத்துக் கொள்வது பிரயோசனமாக அமையும். மேலும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தைத் தயாரிக்கும் போது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் பத்திரங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுவது அத்தியாவசியமாகும்.

(அ) விண்ணப்பங்களை அனுப்பும் போது "களஞ்சியப் பொறுப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2021" என விண்ணப்பத்தை அனுப்பும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் கிடைத்ததாக அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பம் அல்லது அதனுடன் சம்பந்தப்பட்ட வேறு ஆவணங்கள் தபாலில் தொலைந்ததாக அல்லது தாமதமாகியது பற்றி செய்யப்படும் எவ்வித முறைப்பாடுளும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

(இ) உரிய மாதிரி விண்ணப்பத்தின் படி அமையாத விண்ணப்பங்கள் மற்றும் முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்கள் அல்லது தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

11. **விண்ணப்பங்களை அனுப்புதல்**.- விண்ணப்பதாரர் பரீட்சைக்கு தோற்றும் மொழியிலேயே பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2021.01.11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு கீழே உள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,
நீர்ப்பாசனத் திணைக்களம்,
இலக்கம் 230, பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு 07.

12. **பரீட்சைக்குத் தோற்றுதல்.**- பரீட்சை இடம் பெறும் தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பரீட்சை அனுமதி அட்டை விநியோகிக்கப்படும். அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர் பரீட்சை மண்டப அதிகாரிக்கு தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

13. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்.**- பரீட்சை நிலையத்தின் பொறுப்பதிகாரி திருப்தியடையுமாறு அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சை நிலையத்தில் தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் ஏதாவது ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகக் கூடிய கடவுச் சீட்டு.

14. விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை அரசாங்க பாடசாலையின் அதிபர் ஒருவர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு அல்லது அரச சேவையில் உள்ள பதவி நிலை உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

15. பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக உள்ள அனைத்து ஒழுங்கு விதிகளுக்கும் விண்ணப்பதாரி கீழ்படிய வேண்டும். இந்த ஒழுங்கு விதிகளை மீறுமிடத்து அதற்கான தண்டனைகளுக்கு உள்ளாவதற்கு அவருக்கு ஏற்படும்.

16. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தல்களில் ஏதாவது முரண்பாடுகள் இருப்பின் அதற்கு சிங்கள மொழியிலான அறிவித்தலே ஏற்புடையதாகும்

எந்திரி. கே. டி. நிஹால் சிறிவர்தன,
நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
இல 230, பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 07,
2020, திசெம்பர் 09.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**நீர்ப்பாசனத் திணைக்களத்தின் களஞ்சியப் பொறுப்பாளர் (தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2020**

அலுவலக உபயோகத்திற்கு

| |
|---|
| |

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் 1
தமிழ் 2
(உரிய கட்டத்திற்குள் எழுதவும்)

1.0 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :.....................................................
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில் PERERA , A.B.C)

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் :.......................................
(சிங்களத்தில்/ தமிழில்)

1.3 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :.......................................
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :.......................................................

1.4 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :.......................................
(சிங்களத்தில்/ தமிழில்)

1.5 தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

1.6 ஆண் / பெண் (உரிய கட்டத்திற்குள் எழுதவும்)
ஆண் - 1
பெண் - 2

2.0 2.1 நிரந்தர முகவரி ......................................................
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) : ......................................................

2.2 நிரந்தர முகவரி ......................................................
சிங்களத்தில்/ தமிழில்

2.3 பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி :
I. (சிங்களத்தில்/ தமிழில்) :......................................................
II. ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) : ......................................................

2.4 தொலைபேசி இலக்கம் :......................................................

3.0 வதிவிடம் :

3.1 வதிவிட மாவட்டம் :......................................................

3.2 பிரதேச செயலாளர் பிரிவு :......................................................

4.0 குடியியல் நிலை (திருமணமாகாதவர் 1, திருமணமானவர் 2)
திருமணமாகாதவர் 1
திருமணமானவர் 2

4.1 பிறந்த திகதி :-

வருடம் [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

4.2 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்தினத்தன்று வயது (2021.01.10)

வருடம் [ | ] மாதம் [ | ] நாள் [ | ]

4.3 நீங்கள் இலங்கைப் பிரசையாவது பிறப்பின் மூலமா ? பதிவின் மூலமா ? :....................................

5.0 5.1 க.பொ.த. (சா.த.) பரீட்சை பற்றிய விபரம் :

I பரீட்சையின் வருடமும் மாதமும் :......................................................
II சுட்டெண் :......................................................
III பெறுபேறு :......................................................

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

5.2 க.பொ.த. (உ.த.) பரீட்சை பற்றிய விபரம் :

I பரீட்சையின் வருடமும் மாதமும் :.........................................................
II சுட்டெண் :.....................................................
III பெறுபேறு :.....................................................

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |

6.0 நீர் ஏதாவது ஒரு குற்றத்திற்காக நீதிமன்றத்தால் குற்றவாளியாக கருதப்பட்டுள்ளீரா ?
(உரிய கூட்டினுள் ("X") அடையாளத்தை இடவும்)

ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனின் விபரத்தைக் குறிப்பிடுக.
..........................................................................................................................

7.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இந்த விண்ணப்பத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் நான் அறிந்த வரையில் சரியானதும் உண்மையானதும் என உறுதி கூறுகின்றேன். இங்கு ஏதாவது தகவல்களை பூரணப்படுத்தாமல் அல்லது/ தவறாக ஏதேனும் தகவல்களைப் பூரணப்படுத்தியிருப்பின் அதனால் ஏற்படும் இழப்பினை ஏற்றுக்கொள்ளவும் உடன்படுகின்றேன்.

(ஆ) பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு இணங்க செயற்படவும், இந்த நிபந்தனைகளுக்கிணங்க நான் திறமையற்றவர் என பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சைக்குப் பின்னர் நிரூபிக்கப்பட்டால் எனது பரீட்சைக்கான விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனும் தீர்மானத்திற்கும் உடன்படுகின்றேன்.

(இ) ................................................ என்ற கூற்று பொய்யானது என நிரூபிக்கப்பட்டால் எனது விண்ணப்பத்திற்கு பதவி கிடைக்காது என்பதையும் நான் அறிவேன்.

(ஈ) இங்கு தரப்பட்டுள்ள எந்த தகவல்களையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

......................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :................................

8.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு/ திருமதி / செல்வி ...................................................... என்பவரை நான் தனிப்பட்ட ரீதியல் நன்கு அறிந்தவர் எனவும், அவர் ...................................................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதயளிக்கின்றேன்.

......................................
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :.....................................................

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :……………………………………………….

பதவி :

முகவரி :

(அலுவலக முத்திரை இடவும்)

9.0 திணைக்கள / நிறுவனத் தலைவரின் சான்றிதழ் (தற்போது அரச சேவையில் சேவையாற்றுபவர்களுக்கு மட்டும்)

திரு./ திருமதி / செல்வி ……………………………………………… என்பவர் …………………………………… சேவையிலுள்ள ……………………………………………… பதவியை வகிக்கின்றார் எனவும் அவர் மேலே சமர்ப்பித்துள்ள தகவல்கள் சரியானது எனவும் உறுதியளிக்கின்றேன். இப்பதவிக்காக இவர் தெரிவு செய்யப்பட்டால் ……………………………………………… சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும் / முடியாது எனவும் மேலும் தெரிவிக்கின்றேன்.

……………………………
திணைக்களத் தலைவரின் /
நிறுவனத் தலைவரின் சான்றிதழ்
கையொப்பம் மற்றும் அலுவலக முத்திரை

திகதி :…………

12-370

---

திருத்தம்

**காணி அமைச்சு**

இலங்கை நிலஅளவைத் திணைக்களம்

**இலங்கை நில அளவைத் திணைக்களத்துக்கு பயிலுநர் நில அளவையாளர்களை நியமிப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2020**

2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2193 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்த “இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தின் பயிலுநர் நில அளவையாளர்களை நியமிப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2020” எனும் பரீட்சை அறிவித்தலில் 02(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பாடவிதானம் பின்வருமாறு திருத்தம் செய்யப்பட வேண்டும்.

| | வினாப்பத்திரத்தின் பெயர் | நேரம் (மணித்தியாலம்) | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்குரிய புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | கிரகித்தல் | 02 | 100 | 40 |
| 2 | நுண்ணறிவு | 01 | 100 | 40 |
| 3 | பொது அறிவு | 01 | 100 | 40 |

01. **கிரகித்தல்** : இரண்டு (02) மணித்தியாலங்களுக்குரிய இந்த வினாப்பத்திரத்தில் சிறு சிறு பந்திகள் பல வழங்கப்படும். சில பந்திகள் வழங்கப்படுவதற்கான காரணம் ஒரே வாக்கியத்தில் பதில் அளிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே ஆகும். அடிக்கோடிடப்பட்ட சொற்களைத் தெளிவுறுத்துவதற்கான வினாக்களும் வழங்கப்படும்.

மேலும் சில பந்திகள் தொடர்பில் விண்ணப்பதாரிகளுக்கு பல மாற்றுக் கருத்துக்கள் வழங்கப்படுவதுடன், அவற்றில் ஒன்று இந்தப் பந்தியின் உள்ளடக்கக் கருத்துக்களுடன் மிகவும் பொருந்தக் கூடியதாக இருக்கும். விண்ணப்பதாரி அவற்றில் மிகப் பொருத்தமான கருத்தினை தெரிவு செய்ய வேண்டும். மேலும் சில பந்திகள் தொடர்பாக விண்ணப்பதாரிக்கு சில வினாக்கள் வழங்கப்படும். அவற்றிக்கு சரியான பதில் வழங்குதல் எதிர்பார்க்கப்படும். வழங்கப்பட்டுள்ள பந்திகளின் அர்த்தத்தை விண்ணப்பதாரி விளங்கிக் கொள்ளும் முறையிலான பரிசோதிப்பதற்காவே இவ்வாறான வினாக்கள் வழங்கப்படுகின்றன இதற்கு மேலதிகமாக சுருக்கம் எழுதுவதற்காக நீளமான பந்தி ஒன்றும் வழங்கப்படும்.

02. **நுண்ணறிவு:**

ஒரு மணித்தியாலத்திற்குரிய இந்த வினாப்பத்திரமானது விண்ணப்பதாரியின் தர்க்கரீதியான சிந்தனை, ஆற்றல், அவரது உள்ளத்துப் பகுப்பாய்வுத் திறன் மற்றும் அவரது தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றைப் பரிசோதிப்பதற்காகவே தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த வினாப்பத்திரமானது பல்தேர்வு வினாக்கள் மற்றும் குறுகிய விடை வழங்கும் வினாக்களைக் கொண்டிருக்கும் சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

03. **பொது அறிவு :**

ஒரு மணித்தியாலத்திற்குரிய இந்த வினாப்பத்திரமானது இலங்கையின் அரசியல், சமூக, கலாசார, பொருளாதார மற்றும் சுற்றாடல் சார்ந்த விடயங்களை உள்ளடக்கியதாகவும், தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த நவீன விடயங்களையும் விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் தொழிற்றுறை வளர்ச்சி தொடர்பாக கொண்டுள்ள அறிவினையும் பரிசோதனை செய்வதற்காகவும் தயாரிக்கப்பட்ட பொது வினாப்பத்திரம் ஆகும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

ஏ. எல். ஷியாமலி சித்ரலேக்கா பெரேரா,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவைத் திணைக்களம்,
கொழும்பு 5,
2020, செத்தெம்பர் 02.

12-293

---

## நீர்ப்பாசன அமைச்சு

நீர்ப்பாசனத் திணைக்களம்

### நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை - 2020

1.0 நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சைக்காக தகைமைப் பெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*1.1* **ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் பதவிகள் :**

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | ஆட்சேர்க்கும் தரம் |
|---|---|---|---|
| 1 | படவரைஞர்கள் (Draftsman) | 72 | பயிற்சி தரத்தில் (ஒருவருட பயிற்சிக்காக) |
| 2 | துளையிடல் உதவியாளர்கள்<br>(Drilling Assistant) | 02 | பயிற்சி தரத்தில்<br>(இருவருட பயிற்சிக்காக) |
| 3 | ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொது)<br>(Research Assistant -Gen) | 01 | |
| 4 | சிவில் பொறியியல் மூலப்பொருள் ஆய்வாளர்)<br>(Civil Eng. Material Surveyor) | 11 | |
| 5 | மண் பட வரைவியலாளர்<br>(Soil Cartographer) | 01 | |
| 6 | நீரியல் உதவியாளர்கள்<br>(Hydrologic Assistant) | 05 | |
| 7 | நீரியல் வெளிக்கள உதவியாளர்கள்<br>(Hydrology Field Assistant) | 02 | |
| 8 | ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொறியியல் மூலப்பொருள்)<br>(Research Assistant –Eng.mat) | 02 | |
| 9 | மண் வள ஆய்வாளர் (Soil Surveyor) | 05 | |
| 10 | ஆராய்ச்சி உதவியாளர்கள் (நீர்வலு)<br>(Research Assistant – | 02 | |
| 11 | இயந்திரவியல் மேற்பார்வையாளர்<br>(mechanical foreman) | 08 | 111 ஆந் தரத்திற்கு ஆட்சேர்க்கப்படும் இருப்பினும் ஆட்சேர்க்கப்பட்டதுடன் முதல் 06 மாதங்களுக்குள் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் இயந்திரவியல் வேலைத் தளத்தில் சேவையுடன் பயிற்சியளிக்கப்படும். |

*1.2* **பதவிக்குரிய கடமைகளின் தன்மை**

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | வழங்கப்படும் செயற்பாடுகள் |
|---|---|---|
| 1. | பட வரைஞர்கள்<br>(Draftsman) | 1) பொறியியல் உத்தியோகத்தர்களினால் வழங்கப்படும் திட்ட வரைப்படம், அடிப்படை வழியலகு (Basic Parameters) படவரைபுகள் குறிப்பு மூலம் விபரமான படவரைபுகளைத் தயாரித்தல்/ பரிசீலித்தல் : நில அளவை, மற்றும் (contour line maps) மூலம் குறுக்கு முகமாக, நெடுக்கு வெட்டுமுக வரைபடங்களைத் தயாரித்தல்/ பரீட்சித்தல், நீர்ப்பாசனத் திட்டங்களிலுள்ள காணித் துண்டுகள் பற்றிய வரைபடங்கள், காணிகளைக் கையகப்படுத்தும் பட வரைபுகள் பராமரித்தல் செயற்படுத்தல் மற்றும் தயாரித்தல்/ பரிசீலித்தல்<br><br>2) அளவீட்டுக் கணிப்பு : விலை பகுப்பாய்வு/கணிய விலைபற்றுச்சீட்டுத் (BOQ) தயாரித்தல்/ பரிசீலித்தல்<br><br>3) வேலை மதிப்பீடு பரிசீலனை செய்தல் - வேலை மதிப்பீட்டுக்கிணங்க பெறுகைகளை செயற்படுத்துவதற்கு உரிய படிவங்கள், அட்டவணையைத் தயாரித்தல்/ பரீட்சித்தல் வேலைக்காக கொடுப்பனவு செய்வதற்கு உரிய அளவைப் புத்தகங்கள், கொடுப்பனவு பற்றுச் சீட்டு, இறுதிக் கொடுப்பனவு அறிக்கை மற்றும் வரைபடங்கள் என்பவற்றைப் பரிசீலனைச் செய்தல் |

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | வழங்கப்படும் செயற்பாடுகள் |
|---|---|---|
| | | 4) நீர்ப்பாசனத் திட்டங்களுக்குரிய தொழில்நுட்ப செயற்பாடு மற்றும் முறையான தரவுகள் பற்றிய அட்டவணையைப் பராமரித்தல் : முன்னேற்ற அறிக்கை / குறிப்பு தயாரித்தல் / பரிசீலனை செய்தல்<br><br>5) வரைபுகள், திட்ட வரைபுகள் மற்றும் ஏனைய படவரைபு ஆவணங்கள் மற்றும் மூலப்பொருட்கள் என்பவற்றை பாதுகாத்தலும் பராமரித்தலும்<br><br>நிறைவேற்று/ முகாமைத்துவ அதிகாரிகளால் வழங்கப்படும் ஏனைய படவரைஞருக்கான கடமைகள் |
| 2. | துளையிடல் உதவியாளர்கள் (Drilling Assistant) | • பெரிய மற்றும் நடுத்தர அளவிலான நிர்மாணத்திற்காக தரையின் பலம் தரை கீழ் நீர்க் கசிவு ஆகியவற்றைப் பரிசீலித்தல்.<br><br>• பாரிய நிர்மாணத்திற்கான அத்திவவாரத்திற்காக பல்வேறு விதமான ஆழமான மட்டங்களிலிருந்து பாறைகள் மற்றும் மண் படிமங்களின் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளல்.<br><br>• பாறைப் படலங்களில் ஏற்படும் கசிவுகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் வலுவூட்டுதல்.<br><br>• நிறைவடைந்துள்ள நிர்மாணங்களில் உள்ள கசிவுகளை சீமெந்து மற்றும் இரசாயன பொருட்களை செலுத்தி கொங்ரீட் படலங்களை இடுவதன் மூலம் பலப்படுத்தல்.<br><br>• மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கான அறிக்கையினை முன்வைத்தல்.<br><br>மேலே குறிப்பிட்டுள்ள விடயங்களுக்காகத் தேவைப்படும் துளையிடல் இயந்திரங்கள், நீர பம்பி மற்றும் ஏனைய உபகரணங்களையும் அவைக்குரிய டீசல் மற்றும் பெற்றோல் இயந்திரைங்களையும் செயற்படுத்தல், பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல். |
| 3. | ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொது) (Research Assistant -Gen) | 1. தற்போது இடம்பெறும் மற்றும் எதிர் காலத்தில் செயற்படுத்த எதிர்பார்க்கப்படும் நீர்ப்பாசன மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களில் சாத்திய வள ஆய்வு நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் மண் மற்றும் நீர் மாதிரிகளில் பௌதீக மற்றும் இரசாயன குணவியல்புகளைப் பகுப்பாய்வு செய்தல்.<br><br>2. கரைசல் மற்றும் அதற்குரிய கலவை என்பவற்றை முறையாக தயாரித்தல் நாளாந்த பகுப்பாய்வு விடயங்களில் பயன்படுத்தப்படும் நவீன நுண்ணிய இலத்திரனவியல் மற்றும் இயந்திர உபகரணங்களை முறையாக பாவித்தல், பகுப்பாய்வு மூலம் பெறப்பட்ட தரவுகளை சீரமைத்தல். |
| 4. | சிவில் பொறியியல் மூலப் பொருள் ஆய்வாளர்) (Civil Eng. Material Surveyor) Surveyor) | • நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்ப்பாசனத் திட்டங்களை நிர்மாணிப்பதற்குத் தேவையான பொறியியல் மூலப்பொருட்களை ஆய்வு செய்தல், அத்துறையில் பொறியியல் மூலப்பொருளுக்காக தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கையில் (மண் மற்றும் கொங்ரீட் மூலப்பொருட்களின் குணவியல்புகள் மற்றும் அதன் பலம் பற்றிய ஆய்வில்) ஈடுபடுதல் மற்றும் அத்தரத்தினை சான்றுப்படுத்தல்.<br><br>• அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் கோரிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்படும் நிர்மாண நடவடிக்கைகளுக்குத் தேவையான பொறியியல் மூலப்பொருட்களை ஆய்வு செய்வதில் ஈடுபடல். |

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | வழங்கப்படும் செயற்பாடுகள் |
|---|---|---|
| 5. | மண் பட வரைவியலாளர் (Soil Cartographer) | • மண் பரிசீலனை மற்றும் மண் பட வரைபினை ஒன்றிணைத்தலும் தொகுத்தலும்<br>• கொடுக்கப்படும் தரவுகளுக்கிணங்க தேசப்படங்களை வரைதலும் வர்ண மிடுதலும்<br>• நகல் மண் பட வரைபு (Draft Soil Map) மற்றும் இறுதி மண் பட வரைபு (Final Soil Map) என்பவற்றைத் தயாரித்தல்<br>• Aerial photograph இனை உபயோகித்து காணிகளைத் தரப்படுத்தல், அப்பிரதேசத்தின் மண் பட வரைபு, கணக்கிடுதல் மற்றும் வர்ணமிடுதலும் தயாரித்தலும். அத்தோடு பொறியியல் அளவையியல் குறிப்பு : உரு பெரிதாக்கி வரைதல், சிறிதாக்கி வரைதல், பல்வேறு வித மண் மாதிரிகளுக்கிணங்க புவியியல் சார் திட்டப்படங்களை வரைதல் மற்றும் வழங்கப்பட்ட அறிக்கைக் கிணங்க வரைபடம் (graph) வரைதல்.<br>• கணனியூடாக மென் பொருளை (Softwear) ஐ உபயோகித்து மண் பட வரைபினை தயாரித்தல். |
| 6. | நீரியல் உதவியாளர்கள் (Hydrological Assistant) | இலங்கையில் நாடு பூராகவும் உள்ள நீர் நதிப்படுகை மற்றும் நீர்த்தேக்கத்தை அண்டிய பிரதேசங்களை இணைத்து அடிப்படை நீரியல் மற்றும் காலநிலைத் தரவுகள், விஞ்ஞான ரீதியிலான செயற்பாட்டினை உபயோகித்து நீரின் விஞ்ஞான பூர்வமான அவசியத்திற்காக தரவுகளை பகுப்பாய்வு செய்தல், கணனியை உபயோகித்து பகுப்பாய்வு செய்தல், நாளாந்த, மாதாந்த, வருடாந்த மற்றும் நீண்ட காலத்திற்கான அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் பராமரித்தல், பொது மக்களுக்கு மற்றும் உரிய நிறுவனங்களுக்காக இத் தகவல்களைத் தயாரித்தல்.<br>• சேகரிக்கப்பட்ட நீரியல் மற்றும் காலநிலை தரவுகளை முறையாக பாதுகாத்தல், தரத்தினை மேற்பார்வை செய்தல் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட தரவு வங்கி (Data Bank) முறையை தொடர்ந்து பேணுதல்.<br>• நதிகளில் வெள்ள மட்டம் உயர்வதை நிர்ணயிப்பதற்குத் தேவையான தரவுகளைப் பெற்று கணனி மயப்படுத்தல் மற்றும் புதிய கணித மாதிரிகளை உபயோகித்து வெள்ளத்திற்கு உட்படக் கூடிய பிரதேசங்களை ஆய்வு செய்தல்.<br>• வெளிக்கள பரிசீலனையூடாக வெள்ளப்பாதிப்பு மட்டம் மற்றும் இப்பாதிப்புகளுக்கு உட்படும் பிரதேசங்களை அளவீடு செய்தல்.<br>• இப்பிரதான ஆறுகளில் அவ்வாறான வெள்ளம் ஏற்படக்கூடிய அல்லது அதற்கு அண்மிக்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அத்தரவுகளை எப்பொழுதும் பெற்றுக்கொள்ளல், அதற்கிணங்க எச்சரிக்கை விடுத்தல். |
| 7. | நீரியல் வெளிக்கள உதவி யாளர்கள் (Hydrological Field Assistant) | நீரியல் பிரிவினூடாக தெரிவு செய்யப்பட்ட ஆற்றுப் பள்ளத்தாக்குகளுக்காக நீரியல் வெளிக்கள அளவீட்டுப் பிரிவுகளை நடாத்திச் செல்லல் மற்றும் அவசியப்படும் கால நிலைத் தரவுகள், மழை வீழ்ச்சி, நதிகளில் பாய்ந்தோடும் நீர் மட்டம் மற்றும் அண்மையிலுள்ள குளங்களின் நீர் கொள்ளளவில் மாற்றம் ஆகியன பற்றிய தரவுகளைச் சேகரித்தல்.<br>• அவ்வாறு பெற்றுக்கொண்ட அனைத்து நீரியல் மற்றும் காலநிலைத் தரவுகளைப் பரீட்சித்து அட்டவணைப்படுத்துவதற்காக மாத இறுதியில் பிரதான காரியாலயத்திற்கு ஒப்படைத்தல்.<br>• நதிகளிலும் கிளை நதிகளிலும் அத்தகைய நீர் மட்டம் காணப்படும் போது வெளியுற்றப்படும் நீரின் கொள்ளளவை அளவீடு செய்தல்.<br>வெள்ள அபாயம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் அல்லது அதற்கு அண்மிய சந்தர்ப்பத்தில் அதற்காக எச்சரிக்கை விடுப்பதற்கு அவசியப்படும் வெளிக்கள தரவுகளை நாளாந்தம் பிரதான காரியாலயத்திற்கு தெரிவித்தல், பிரதான வெள்ள நிலையின் போது அந்நேரத்திலிருந்து வெள்ள மட்டம் வேறுபடுவதைக் குறித்தல். |

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | வழங்கப்படும் செயற்பாடுகள் |
|---|---|---|
| 8. | ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொறியியல் மூலப்பொருள்) (Research Assistant –Eng. mat) | நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்ப்பாசனத் திட்டங்களை நிர்மாணிப்பதற்குத் தேவையான பொறியியல் மூலப்பொருட்களின் பொறுத்தப்பாடு பற்றி வழங்கப்படும் நிர்மாணங்களுக்கு இணங்க பரிசீலனை நடவடிக்கைகளில் ஈடுபடுதல் மற்றும் பரிசீலனைக் காரணிகளை அடிப்படையாகக்கொண்டு தரத்தினை உறுதிப்படுத்தல், அத்துறையில் பொறியியல் மூலப்பொருளுக்காக தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு (மண் மற்றும் கொங்ரீட் பொருட்களின் தன்மை மற்றும் பலம் பற்றிய) சேவையின் அவசியத்தின் அடிப்படையில் ஈடுபடுதல்.<br><br>அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் கோரிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்படும் நிர்மாண நடவடிக்கைகளுக்குத் தேவையான பொறியியல் மூலப்பொருட்களை ஆய்வு செய்வதில் ஈடுபடல் மற்றும் தரச்சான்றிதழ் வழங்குதழ். |
| 9. | மண் வள ஆய்வாளர் (SOIL SURVEYOR) | 1. தற்போது இடம் பெற்று வரும் மற்றும் எதிர்காலத்தில் செயற்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் நீர்ப்பாசன மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களில் இப்பிரிவினூடாக மேற்கொள்ளப்படும் மண் ஆய்வானது காணிப் பாவனை நடவடிக்கைகளுக்கு அவசியப்படும் வெளிக்களத் தரவுகள் மற்றும் ஏனைய தரவுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் சர்வதேச தரத்திற்கு இணங்க ஒவ்வொரு வகைகளையும் தரப்படுத்தல்.<br><br>2. மண்அமைப்பு முறைக் காரணி : காலநிலை, பௌதீக தோற்றம் மற்றும் பூகோளவியலில் மாற்றம்) என்பவற்றைக் கவனத்திற்கொண்டு அத்தகைய மண் வகுதிகள் அல்லது தரத்தின் அமைவு என்பவற்றைத் தீர்மானித்தல்.<br><br>3. சர்வதேச தரத்திற்கு இணங்க விபரங்களடங்கிய குறிப்பினைத் தயாரிப்பதற்காக அவசியப்படும் வகையில் மண் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளல், அத்தகைய மண் மாதிரிகளைப் பகுப்பாய்வுக்காக ஆய்வு கூடத்தில் கையளித்தல், அந்த பகுப்பாய்வுத்தரவு மற்றும் வெளிக்கள பகுப்பாய்வு தரவுகளை அடிப்படையாக வைத்து இறுதி மண் தரவுகளில் சரியானதை உறுதிப்படுத்திக்கொள்ளல் மற்றும் அதற்கேற்ப soil key என்பவற்றைத் தயாரித்தல்.<br><br>4. உரிய பிரதேசத்தில் வான் நிழற்பட (Aerial photograph) உபயோகித்து வான் நிழற்பட ஆய்வினை மேற்கொள்ளல்.<br><br>5. தரவுகள் அவசியப்படும் தீவிரத்தன்மைக்கு இணங்க மண் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வெளிக்கள தரவுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் மண்ணின். இணங்க மண்ணின் வகைகளை இனங்காணுதல்.<br><br>6. வெளிக்களத்தில் பெறப்பட்ட ஆய்வுத் தரவுகளுக்கிணங்க (Draft Soil Map) தயாரிப்பதோடு Pentograph இயந்திரத்தினாடாக தேவையான அளவில் தயாரித்தல்<br><br>7. வெளிக்களத்தில் பெறப்பட்ட ஆய்வுத் தரவுகள் மற்றும் இணயத்தை உபயோகித்து காணி உபயோக வரைபடத்தைத் தயாரித்தல்.<br><br>8. G.P.S (Global Position System) உபயோகித்து தரவுகளைப் பெற்றுக்கொள்ளல்<br><br>9. மண்ணில் நீர் கடத்தும் திறன் பற்றிய தரவுகளைப் பெற்றுக்கொள்ளல்<br><br>10. வெளிக்களத்தில் வெளிக்கள ஊழியர்கள், காவலாளிகள் மற்றும் சாரதிகள் போன்றோரின் நிர்வாக நடவடிக்கைகளை (மேற்பார்வை) செய்தல் மற்றும் அவர்களின் நிதி விடயங்களை நேரடியாக மேற்கொள்ளல். |

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | வழங்கப்படும் செயற்பாடுகள் |
|---|---|---|
| 10 | ஆராய்ச்சி உதவியாளர்கள் (நீர்வலு) (Research Assistant – (Hydraulics) | நீர்வலுப்பிரிவு பொறியியலாளர்களின் நடவடிக்கைகளுக்கு உதவுதல், நீர்வலுப்பிரிவுக்கு உரிய நிர்மாண வேலைகளில் அனைத்து துறைகளிலும் காணப்படும் உபகரணங்கள், மூலப்பொருட்கள், தொழிலாளர் பரிபாலனம், நீர்வலு மாதிரி செயற்பாடு, கட்டிடம் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் பரிபாலனம், நீர்வலுப்பிரிவுக்குரிய நிர்மாண வேலைக்கான மதிப்பீடு என்பவற்றைத் தயாரித்தல், திணைக்களத்திற்குரிய அனைத்து இயந்திரவியல் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களை திருத்துதல் சம்பந்தமாக அவ்வுபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு உரிய தர அறிக்கையினைத் தயாரித்தல். |
| 11 | இயந்திரவியல் மேற்பார்வையாளர் (mechanical foreman) | சிற்றூழியர்களை நிர்வகிக்கும் போது மற்றும் வாகனங்கள், இயந்திரங்கள் ஆகியனவற்றுக்கான பற்றுச் சீட்டுக்களைத் தயாரிக்கும் போது இயந்திரவியல் பொருளியலாளருக்கு உதவுதல், தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு (இயந்திரவியல்) அல்லது வேலை எழுதுனருடன் வேலையை ஆரம்பித்தல், களஞ்சியப் பொறுப்பாளர் இல்லாத சந்தர்ப்பத்தில் பழுதுபார்த்தலுக்காக கொண்டுவரப்படும் விடயங்களை பொறுப்பேற்றல். பழுதுபார்த்தலுக்குத் தேவைப்படும் உதிரிப்பாகங்கள், ஆயுதங்கள் மற்றும் மூலப் பொருட்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளல், களஞ்சியசாலைப் புத்தகத்தைப் பரிபாலித்தல், மதிப்பீட்டு நடவடிக்கையின் போது இயந்திரவியல் பொறியியலாளருக்கு உதவுதல், பழுதுபார்க்கப்பட்ட பின்னர் முறையாக அவற்றைக் கையளித்தல் மற்றும் உடைந்த உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய பொருட்களை மீள களஞ்சிய சாலைக்கு ஒப்படைத்தல், செய்யப்பட்ட பழுதுபார்த்தல்களை லொக் புத்தகத்தில் பதிதல், தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு (இயந்திரவியல்) அல்லது வேலை எழுதுனருடன் இணைந்து பற்றுச் சீட்டுக்கள் தயாரித்தல், பாவிக்கப்பட்ட உதிரிப்பாகங்கள், எரிபொருள், உராய்வு எண்ணெய் மற்றும் ஏனைய விடயங்களுக்காக மூலப்பொருள் அறிக்கையினைத் தயாரித்தல்.<br><br>பழுதுபார்த்தலுக்காக இயந்திரவியல் தளத்திற்கு கொண்டுவரப்படும் இயந்திரங்கள், வாகனங்கள் களஞ்சியப் பொறுப்பாளரிடமிருந்து இயந்திரவியல் தளத்திலிருந்து பொறுப்பேற்று பழுதுபார்த்தல் முடிவடைந்தவுடன் மீண்டும் களஞ்சியப் பொறுப்பாளருக்குக் கையளித்தல். |

2.0 **ஆட்சேர்க்கும் முறை :**

2.1 நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் நடாத்தப்படும் எழுத்து மூலப் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படும் வெற்றிடத்தின் தொகைக்கு சமமான விண்ணப்பதாரர்களின் தொகையில் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களில் மொத்தப் புள்ளிகளின் திறமைகளுக்கு இணங்க சாதாரண நேர்முகப் பரீட்சைக்குட்படுத்தி தகுதியுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

2.2 சாதாரண நேர்முகப் பரீட்சையானது விண்ணப்பதாரர்களின் உடல் ரீதியான தகுதியையும் மற்றும் சான்றுப்பத்திரங்கள் பரிசீலித்துப் பார்க்கப்படுவதோடு அதற்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

3.0 **சம்பள அளவுத்திட்டம் :**

3.1 பயிற்சியளிக்கும் திட்டம் - பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இற்கிணங்க முதலாம் வருட பயிற்சிக்காக மாதாந்த கொடுப்பனவாக ரூ. 27140/- வும் இரண்டாம் வருட பயிற்சிக்காக மாதாந்த கொடுப்பனவாக ரூ. 27440/- வும் கொடுப்பனவு உரியதாகும்.

3.2 111 ஆந் தரம் - பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/ 2016 இன் உப பிரிவு 1 இற்கிணங்க பதவிக்குரியசம்பள அளவுத் திட்டம் ரூ. 31040 – 10x445 – 11x 660 – 10x730 -10x 750 – ரூ. 57550/- (MN 3 – 2016)

4.0 **சேவைப் பிரிவுகள் - மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழிநுட்பம்**

4.1 தரம் - III ஆந் தரம்
II ஆந் தரம்
I ஆந் தரம்

4.2 பதவியின் தன்மை – III ஆந் தர நியமனம் நிரந்தரமானது, ஓய்வூதியமுடையது. உரிய ஓய்வூதிய திட்டம் பற்றி அரசாங்கத்தால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்படுதல் வேண்டும்.

5.0 **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்**

5.1 பயிற்சியளித்தல் திட்டத்திற்கு உள்ளெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் உரிய பயிற்சிக் காலத்திற்குள் வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின்னர் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தினால் மூலம் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியளடைந்தமைக்காக வழங்கப்படும் சான்றிதழைச் சமர்ப்பித்ததன் பின்னர் சேவையின 111 ஆந் தரத்திற்கு ஆட்சேர்க்கப்படும்.

5.2 பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பட்சத்தில் அவர்களுக்கு 06 மாதத்திற்கு மேற்படாத காலத்திற்கு தனது பயிற்சிக்காலத்தை நீடித்துக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்படும். அவ்வாறு நீடிக்கப்படும் காலப்பகுதியின் பின்னர் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத விண்ணப்பதாரர்களின் சேவை முடிவுறுத்தப்படும்.

5.3 111 ஆந் தரத்தின் நியமனம் 03 வருடங்களுக்கு தகுதி காண் காலத்திற்குட்பட்டதாகும். 111 ஆந் தரத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டு 03 வருடத்திற்குள் முதலாவது வினைத் திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

5.4 பொது நிர்வாக சுற்றறிக்கை 18/ 2020 இற்கிணங்க பதவியில் இணைந்து 03 வருடத்திற்குள் சேவையில் இணைந்த மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரசகரும மொழி பற்றிய உரிய திறனைப் பெறுதல் வேண்டும்.

5.5 அரச சேவை ஆணைக்குழுவின் சேவைத்திட்டத்தின் ஒழுங்குகளுக்கும், இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் தாபன விதிக்கோவைகளுக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாகும்.

5.6 தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தீவின் கஷ்டப் பிரதேசங்களில் அமைந்துள்ள நீர்ப்பாசனத் துறையின் வேலைத்தளங்களில் சேவையாற்றுவதற்கு முடியுமாக இருத்தல் வேண்டும்.

6.0 **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித்தினத்திற்கு வயது 18 இற்குக் குறையாமலும் 30 இற்கு கூடாமலும் இருக்க வேண்டும்.

7.0 **தேவையான தகைமைகள் :**

7.1 **கல்வித் தகைமைகள் :**

7.1.1 கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஏதாவது ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

7.1.2 **பட வரைஞர், துளையிடல் உதவியாளர்கள், சிவில் பொறியியல் மூலப்பொருள் ஆய்வாளர், மண் பட வரைவியலாளர், நீரியல் உதவியாளர்கள், நீரியல் வெளிக்கள உதவியாளர்கள், ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொறியியல் மூலப்பொருள்), ஆராய்ச்சி உதவியாளர்கள் (நீர்வலு), இயந்திரவியல் மேற்பார்வையாளர்களுக்காக**

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சையில் பிரயோகக் கணிதம்/ தூய கணிதம்/ இணைந்த கணிதம் மற்றும் பௌதீக விஞ்ஞான பாடம் உட்பட மூன்று விஞ்ஞான பாடங்களில் (03) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

**ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொது) மண் வள ஆய்வாளர் பதவிகளுக்காக**

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சையில் இரசாயனவியல், பௌதீக விஞ்ஞான பாடம் உட்பட ஏதாவது ஒரு விஞ்ஞான அல்லது கணித பாடத்துடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

7.2 **தொழில்சார் தகைமைகள் :**

படட வரைஞர் பதவி மற்றும் இயந்திரவியல் மேற்பார்வையாளர் பதவிக்காக மேலே 7.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித்தகைமைகளுக்கு மேலதிகமாக கீழே குறிப்பிடப்படும் தொழில்சார் தகைமைகளும் இருத்தல் வேண்டும்.

**பட வரைஞர்**

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் படவரைஞர் பற்றிய ஒரு வருட முழுநேர பயிற்சி நெறியை வெற்றிகரமாக பூர்த்திசெய்து அதற்குரிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**இயந்திரவியல் மேற்பார்வையாளர்**

i. மொரட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி கல்லூரி மூலம் வழங்கப்படும் தேசிய தொழில் நுட்பவியல் டிப்ளோமா.

அல்லது

ii. தேசிய பயிலுனர் மற்றும் தொழில் நுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா.

அல்லது

iii. கல்வி உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் உயர் டிப்ளோமா.

அல்லது

iv. இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில் நுட்பவியல் டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்.

அல்லது

v. இலங்கைப் பொறியியல் நிறுவகத்தினால் நடாத்தப்படும் பொறியியலாளர் பரீட்சையில் 1 வது பகுதியை பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

vi. தொழிற்துறைக்குரிய தேசிய தொழில்தகைமை (NVQ) 06 ஆந் மட்டத்தின் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

vii. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப சான்றிதழ்கள் வழங்கும் நிறுவனங்களினால் விசாரித்து கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதோடு மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு அனைத்து விதத்திலும் சமமான மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு தொழில்நுட்பச் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல்.

7.3 **தேகாரோக்கிய தகைமைகள் :**

அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவைப்புரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் உள ரீதியாக தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

7.4 **ஏனைய தகைமைகள் :**

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

iii. ஏதேனும் ஒரு மதத்திற்குரிய மதப் போதகர் எவரும் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமைப் பெற்றவர்கள் அல்ல.

iv. சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படுவது விண்ணப்பதாரர் உரிய அனைத்து தகைமைகள் மற்றும் குறிப்பிட்ட வயதெல்லை விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தினத்திற்கு அனைத்து விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டிருந்தால் மட்டுமே ஆகும்.

*8.0* **பொய்யான தகவல்களை வழங்குதல் :**

உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு தகவல் அது பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்பதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால் உங்களது விண்ணப்பம் இரத்துச்செய்யப்படும். ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் நிரூபிக்கப்பட்டால் அதற்கு உரிய நடவடிக்கைகளுக்கு கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

*9.0* **பரீட்சையின் செயல்முறை :**

பரீட்சையானது இரண்டு பாடங்களைக் கொண்ட எழுத்து மூலப் பரீட்சையாகும். இப்பரிட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் இடம் பெறுவதோடு விண்ணப்பிக்கும் மொழி பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| **வினாப்பத்திரத்திரம்/ பாடப்பரப்பு** | **காலம்** | **உயர்ந்தபட்ச புள்ளி** | **சித்தியெய்தும் புள்ளி** |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை | 03 மணித்தியாலம் | 100 | 40 |

*9.1* **பரீட்சைக்கான பாடப்பரப்பு :**

1 நுண்ணறிவுப் பரீட்சை :

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடப்பரப்பு |
|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | விண்ணப்பதாரரின் தர்க்க ரீதியான மற்றும் தீர்மானித்தல் ரீததியான சிந்தனை மற்றும் அவரது தீர்மானம் எடுக்கும் திறமை என்பவற்றைத் தீர்மானிப்பதற்கான பரீட்சை |

2 பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை

- பட வரைஞர் பதவிக்காக

| **வினாப்பத்திரத்தின் பெயர்** | **பாடப்பரப்பு** |
|---|---|
| பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை | கொடுக்கப்படும் கட்டமைப்பின் அளவு மற்றும் தரமான நிர்மாணித்தலுக்கான மூலப்பொருட்களின் தன்மை பற்றிய அறிவைப் பரீட்சித்தல் மற்றும் பட வரைதலின் மூலத் தத்துவத்தைப் பாவித்து கொடுக்கப்படும் குறிப்பிற்கிணங்க வரை படத்தினை வரைதல் |

- சிவில் பொறியியல் மூலப்பொருள் ஆய்வாளர்/ துளையிடல் உதவியாளர்கள்/ ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொறியியல் மூலப்பொருள்)/ ஆராய்ச்சி உதவியாளர்கள் (நீர்வலு)/ மண் பட வரைவியலாளர் பதவிகளுக்காக

| **வினாப்பத்திரத்தின் பெயர்** | **பாடப்பரப்பு** |
|---|---|
| பாடப்பரப்புக்குட்பட்ட தொழில் நுட்பப் பரீட்சை | அட்சர கணிதம் (Algibra), கேத்திர கணிதம், திரிகோண கணிதம், திரவம், திரவத்தின் பௌதீக நிலை, திரவத்தின் அழுத்த சமநிலை (hydrostatics) அளவீடு, தேசப்படங்களை வாசித்தல் மற்றும் விஞ்ஞான ரீதியான கணக்கீடு என்பவற்றின் அறிவினைப் பரீட்சிப்பதற்காக இவ்வினாப்பத்திரம் அமையப்பெறும். |

- மண் வள ஆய்வாளர்/ ஆராய்ச்சி உதவியாளர்கள் (பொது) பதவிகளுக்காக

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடப்பரப்பு |
|---|---|
| பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை | பகுதி 1 (பௌதீகவியல்)<br>a) ஒளியியல்<br>b) வெப்பம்<br>c) இயந்திரவியல்<br>d) மின்சாரம் மற்றும் காந்த சக்தி<br><br>பகுதி 11 (இரசாயனவியல்)<br>a) இயற்கை(சேதன) இரசாயனவியல்<br>b) (Organic Chemistry)<br>c) அளவு மற்றும் தரம் பற்றிய பகுப்பாய்வு<br>d) செயற்கை இரசாயனவியல் (Inorganic Chemistry)<br>e) பொது இரசாயனவியல் |

- நீரியல் வெளிக்ககள உதவியாளர்கள் / நீரியல் உதவியாளர்கள் பதவிக்ளுக்காக

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடப்பரப்பு |
|---|---|
| பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை | (இணைந்த) கேத்திர கணிதம் (geometry), இயக்கவிதிகள் (geometry), புள்ளி விபரவியல், திருகோண கணிதம், திரவத்தின் அழுத்த சமநிலை, (hydrostatics), இயந்திர வியல், ஒளியியல் (optics), வெப்பம், ஈரப்பதன், மின்சாரம் மற்றும் இலத்திரனவியல் ஆகிய பாடங்கள் பற்றி விண்ணப்பதாரரின் அறிவை பரீட்சிப்பதற்காக இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். |

- இயந்திரவியல் மேற்பார்வையாளர் பதவிக்காக

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடப்பரப்பு |
|---|---|
| பாடப்பரப்புக்குட்பட்ட தொழில்நுட்பப் பரீட்சை | வரைதல் மூலத் தத்துவத்தை உபயோகித்து கொடுக்கப்படும் உருவத்திற்கமைய இயந்திரத்தின் அல்லது ஒரு பகுதியின் குறுக்கு வெட்டு முகத்தின் முன் அல்லது பின் புற தோற்றத்தை வரைதல் மற்றும் பௌதீக விஞ்ஞானம், இயந்திரவியல் விஞ்ஞானம் மற்றும் பிரயோகக்கணிதம் ஆகிய பாடங்கள் பற்றி விண்ணப்பதாரரின் அறிவை பரீட்சிப்பதற்காக விணாப்பத்திரம் தயாரிக்கப்படும். |

9.2 இப்பரீட்சை 2021 பெப்ரவரி மாதத்தில் கொழும்பு மாவட்டத்திலும் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சில மாவட்டங்களிலும் நடாத்தப்படும். இப்பரீட்சையை பிற்போடுதல் அல்லது இரத்துச் செய்தல் பற்றிய இறுதித் தீர்மானம் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்திற்கு உரியதாகும்.

10.0 **விண்ணப்பங்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல்** :

10.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்திற்கிணங்க செ.மீ. 21 x 19 (A4) அளவிலான கடதாசியை இரு பக்கங்களையும் உபயோகித்து உரியவரால் விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும். இலக்கம் 1.0 தொடக்கம் 6.0 வரையான தலைப்புகள் 01 ஆம் பக்கத்திலும் இலக்கம் 7.0 தொடக்கம் 11.0 வரை 02 ஆம் பக்கத்திலும் இலக்கம் 12.0 தொடக்கம் 15.0 வரை 03 ஆம் பக்கத்திலும் இலக்கம் 16.0, 04 ஆம் பக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப்படல் வேண்டும்.

10.2 தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை தனது திணைக்களத் தலைவரினூடாகவும் அரச கூட்டுத்தாபன மாகாண சபைகளில் சேவையாற்றுபவர்கள் தமது நிறுவனத் தலைவரினூடாகவும் குறிப்பிட்ட தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

10.3 விண்ணப்பங்கள் தான் பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே தயாரிக்கப்படல் வேண்டும்.

10.4 குறிப்பிட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்றவாறு அமையாத மற்றும் முறையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

10.5 விண்ணப்பங்கள் கிடைத்தது பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. தபாலில் தொலைந்து போகும் விண்ணப்பங்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் எவ்வித முறைப்பாடுகளும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

10.6 போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்குவதானது விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகைமைகளைப் பூர்த்திச் செய்துள்ளதாக கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

10.7 விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "**நீர்ப்பாசனத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் ......................................... பதவிக்கு ஆட்சேர்த்தல்**" என தெளிவாகக் குறிப்பிடுக.

10.8 விண்ணப்பப் பத்திரத்தில் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நிதவான்,சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, முப்படை அதிகாரி, பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் அல்லது பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/ 2006 தரத்திற்குரிய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்ட மாகாண அல்லது அரசாங்க சேவையிலுள்ள நிரந்தர பதவியையுடையவர்கள் போான்றவர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

10.9 இந்த வெற்றிடத்தை நிரப்புதல், நிரப்பாதிருத்தல் அல்லது வெற்றிடத்தில் ஒரு பகுதியை நிரப்புதல் மற்றும் அனைத்து விடயங்கள் சம்பந்தமாகவும் இறுதித் தீர்மானம் எடுப்பது நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்திற்குரியதாகும்.

11.0 **விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் :**

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2021 சனவரி மாதம் 10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கீழே காணப்படும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,**
**நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**இலக்கம் 230, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு 07"**

12.0 **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

விண்ணப்பதாரர் பரீட்சை நிலையத்தில் பரீட்சை நிலைய உத்தியோகத்தரிடம் தனது அனுமதி அட்டையை கையளிக்க வேண்டும். தனது அனுமதி அட்டையை கையளிக்காத விண்ணப்பதாரர் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர் தனக்கு வழங்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

13.0 **விண்ணப்பதாரரின் ஆளடையாளம் :**

பரீட்சை நிலையத்தில் தான் தோற்றும் அனைத்து பாடங்கள் சம்பந்தமாகவும் பரீட்சை நிலைய உத்தியோகத்தர் திருப்தியடையக் கூடியவாறு விண்ணப்பதாரர் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக கீழே குறிப்பிடப்படும் ஆளடையாளப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) ஆட்களைப்பதிவு செய்யும் ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச் சீட்டு.

**14.0 இந்த வர்த்தமானி அறிவித்தலானது தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில் காணப்படுவதோடு ஏதேனும் தெளிவின்மைக் காணப்பட்டால் சிங்கள மொழியிலுள்ள அறிவித்தலே செல்லுபடியானதாக கருதப்படும்.**

எந்திரி. கே. டி. நிஹால் சிறிவர்தன,
நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
கொழும்பு 07,
2020, திசெம்பர்.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை - 2020**

அலுவலக உபயோகத்திற்கு [ ]

1.0 விண்ணப்பிக்கும் மொழி மூலம்

சிங்களம் 1 [ ]
தமிழ் 2

(உரிய கட்டத்திற்குள் எழுதவும்)

2.0 விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் :.................................................
(ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

3.0 முதலெழுத்துக்களுடன் பெயர்- திரு / திருமதி / செல்வி (சிங்களத்தில்/ தமிழில்) :.....................................

ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) : ..................................................

(உதாரணம் : PERERA , A.B.C)

3.1 முழுப்பெயர்

சிங்களத்தில்/ தமிழில் :..................................................

ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :..................................................

4.0 தேசிய அடையாள அட்டை இல. : [ | | | | | | | | | | | ]

5.0 ஆண் / பெண் (உரிய கட்டத்திற்குள் எழுதவும்)

ஆண் - M [ ]
பெண் - F

6.0 நிரந்தர முகவரி (தெளிவான எழுத்தில் குறிப்பிடவும்)

சிங்களத்தில்/ தமிழில் :..................................................
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) : ..................................................

6.1 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி :

சிங்களத்தில்/ தமிழில் :..................................................

ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) : ..................................................

7.0 தொலைபேசி இலக்கம் : நிலையான தொலைபேசி ..................................................
கையடக்கத் தொலைபேசி :..................................................

8.0 வதிவிடம் :

8.1 வதிவிட மாவட்டம் :..................................................

8.2 பிரதேச செயலாளர் பிரிவு :..................................................

9.0 குடியியல் நிலை

திருமணமாகாதவர் 1
திருமணமானவர் 2

10.0 பிறந்த திகதி :-

வருடம் மாதம் திகதி

10.1 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்தினத்தன்று வயது (2021.01.10)

வருடம் மாதம் நாள்

11.0 கல்வித் தகைமைகள்

11.1 க.பொ.த(சா.த) பரீட்சை பற்றிய விபரம் :

I. பரீட்சையின் வருடமும் மாதமும் :.....................................................
II. சுட்டெண் :.....................................................
III. பெறுபேறு :.....................................................

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

11.2 க.பொ.த(உ.த) பரீட்சை பற்றிய விபரம் :

I. பரீட்சையின் வருடமும் மாதமும் :.....................................................
II. சுட்டெண் :.....................................................
III. பெறுபேறு :.....................................................

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |

12.0 தொழில்சார் தகைமைகள்

| மேற்கொண்டுள்ள கற்கை நெறி | வழங்கிய நிறுவனம் | கற்கை நெறிக்கான கால எல்லை | சான்றிதழின் இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|
| | | | |

13.0 நீர் ஏதாவது ஒரு குற்றத்திற்காக நீதிமன்றத்தால் குற்றவாளியாக கருதப்பட்டுள்ளீரா ?
(உரிய கூட்டினுள் ("X") அடையாளத்தை இடவும்)

ஆம் ☐ இல்லை ☐

13.1 ஆம் எனின் விபரத்தைக் குறிப்பிடுக.
..............................................................................................................

14.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை

(அ) ..................................................... ஆகிய நான் இதில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானதும் உண்மையானதும் என உறுதி கூறுகிறேன். நான் அரச சேவையில் இருந்து வெளியேற்றப்பட்ட அல்லது செயற்திறமையற்றவர் என்ற வகையில் சேவையிலிருந்து இளைப்பாறச் செய்யப்பட்டவர் அல்ல எனவும், பதவியை விட்டுச்சென்றவர் என கருதப்படுபவரும் அல்ல என உறுதி கூறுகின்றேன். இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் ஏதாவது பொய்யானதாக அல்லது தவறானதாக நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால் எவ்வித நட்டயீடுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன். நான் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் நாட்டின் எப்பிரதேசத்திலும் நீர்ப்பாசனத் துறையின் வேலைத்தளங்களில் சேவையாற்றவும் உடன்படுகின்றேன்.

.....................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :................................

15.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ..................................................... என்பவரை நான் தனிப்பட்ட ரீதியல் நன்கு அறிந்தவர் எனவும், அவர் ..................................................... ஆந் திகதி எனது முன்னிலையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 14 ஆந் பிரிவின் கீழ் கையொப்பமிட்டார் எனவும் உறுதயளிக்கின்றேன்.

......................................
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :.....................................................

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :.....................................................
பதவி
முகவரி
(அலுவலக முத்திரை இடவும்)

16. திணைக்கள/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ் (அரசாங்க/ மாகாண சபையில் சேவையாற்றுபவர்களுக்கு மட்டும்)

திரு./ திருமதி/ செல்வி ..................................................... என்பவர் ......................................... சேவையிலுள்ள ..................................................... பதவியை வகிக்கின்றார் எனவும் அவர் மேலே சமர்ப்பித்துள்ள தகவல்கள் சரியானது எனவும் உறுதியளிக்கின்றேன். இப்பதவிக்காக இவர் தெரிவு செய்யப்பட்டால் ..................................................... சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் மேலும் தெரிவிக்கின்றேன்.

.................................
திணைக்களத் தலைவரின்/
நிறுவனத் தலைவரின் சான்றிதழ்
கையொப்பம்மற்றும் அலுவலக முத்திரை

திகதி :.......................

12-371

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.